12

# Tamil Nadu Legislative Assembly Debates.

# Official Report.

Vol-4 NO-2

6.9.1991

V2M,31 N91
N91.4.2
111488

வெளியீடு 29-2-1992 Issued 29-2-1992

12

26

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 6, 1991 - தொகுதி 4 - எண் 2
Friday the 6th September, 1991 - Volume 4 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

**6—9—1991.**


பக்கங்கள்.

1. இரங்கற் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து .. 75

2. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 76—89

3. தகவல் கோரல்—

(அ) காவிரி நீர்ப் பங்கீடு பற்றி தமிழ்நாடு கர்நாடக அரசுகள் பேசித் தீர்வுகாண வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள ஆலோசனை குறித்து .. .. .. .. 89—102

(ஆ) கோயம்புத்தூர், திருப்பூர் பகுதிகளில் இந்து முஸ்லீம் அமைப்புக்களைச் சார்ந்தவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்களையொட்டிச் சிலர் கொலையுண்டது மற்றும் காயமுற்றது தொடர்பாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து .. .. 98

4. உரிமைப் பிரச்சினை—

வரவு—செலவுத் திட்டம் பற்றி ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களை ஒளி—ஒலி அமைப்புகள் வெளியிடாதது குறித்து ... .. 98

5. அறிவிப்புகள்—

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. 102

(ஆ) பேரவை உறுப்பினர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது குறித்து .. 179

பக்கங்கள்.

6. வரவு-செலவுத் திட்டம்—1991-92, பொது விவாதம்— 102—181

*1. திரு. ச. அழகிரி .. .. 103—115
*2. திரு. ம. சின்னசாமி .. .. 115—122
*3. திரு. உ. பலராமன் .. .. 122—127
*4. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை .. 128—131
*5. திருமதி ரமணி நல்லதம்பி .. .. 131—141
6. திரு. கா. பூ. முனுசாமி .. .. 141—147
*7. திரு. ஆர். டி. அரங்கநாதன் .. 148—151
*8. டாக்டர் எம். மோசஸ் .. .. 151—158
*9. திரு. சி. இராமசுவாமி .. .. 158—163
10. திரு. ஆர். சிங்காரம் .. .. 163—175
*11. திரு. ஆ. கு. சீனிவாசன் .. .. 175—179
12. திரு. வெ. தமிழரசு .. .. 179—181

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 182—183

சென்னை-600 009.
161488
D
Y211,31'N91
N91-4-2

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை. (12)

ஆவணி 21, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022.

1991 செப்டம்பர் 6, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணிக்கு பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல் ".

சொல்லின் திறத்தை அறிந்து சொல்லை சொல்லிட வேண்டும். அத்தகைய சொல்வன்மையைவிட சிறந்ததாக எந்த அறமும் பொருளும் இல்லை.

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கல் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் அவர்கள் 24—7—1991 ஆம் நாள் அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் அவர்கள், 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை, திருச்சி மாவட்டம், லால்குடித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்லமுறையில் பணியாற்றி உள்ளார். அன்னாரின் மறைவு குறித்து, அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் வினா எண். 1. திரு. ஏ. டி. செல்லசாமி, மற்றும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

பழனி வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

1—

*163. திரு. ஏ. டி. செல்லசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்லை தலைமையகமாகக் கொண்ட அண்ணா மாவட்டத்தில் பழனி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, பழனியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டமும், ஒட்டன்சத்திரத்தை தலைமையிடமாகக் கொண்டு பிறிதொரு வட்டமும் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அண்ணா மாவட்டத்திலுள்ள பழனி வருவாய் வட்டத்தை இரண்டு வருவாய் வட்டங்களாக அமைப்பது பற்றி அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம் எனில், அதன் விவரம் என்ன ? எவ்வளவு காலத்திற்குள் இது முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய ஆய்வில் உள்ளது. இப்போது நேரம் குறிப்பிட இயலாது.

திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசு உடனடியாக பரிசீலித்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோள் பரிசீலனை செய்யப்படும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய வட்டங்களைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாவட்டங்களில் இருந்து இப்படிப்பட்ட செயற்குறிப்புகள் வந்திருக்கின்றன. இப்படிப் பிரிக்கிறபோது, அந்த வட்டத்தில் உள்ள மக்கள் தொகை, பரப்பு, வருவாய், வேலைப்பளு இவைகளை எல்லாம் அனுசரித்து, தேவைப்படுகிற வருவாய் வட்டங்களை இரண்டாக அமைக்கின்ற யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 2. திருவாளர்கள் இரா. நடேசன் மற்றும் வி. கே. சின்னசாமி. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு ரேஷன் கடை.

2—

*4. திரு. இரா. நடேசன் மற்றும் திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்க 500 கார்டுதாரர்களுக்கு ஒரு ரேஷன் கடை என்ற விகிதத்தில் ரேஷன் கடைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 9-35

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வினாவிற்கு இடமில்லை என்று பதில் அளித்தார்கள். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டமானது கேரள மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டதும், மலையோரப் பிரதேசத்தைச் சேர்ந்ததுமாக

இருப்பதாலும் அங்கு ஏராளமான மலைவாசிகளும், ஏழை எளிய தொழிலாளர்களும் வாழ்ந்து வருவதாலும் அவர்களுக்கு எல்லாம் 500 கார்டுகளுக்கு ஒரு ரேஷன் டெப்போ என்று சொன்னால் தான், 5, 6 கிலோ மீட்டர் நடந்து வருவதைத் தவிர்ப்பதற்கு கொஞ்சம் வசதியாக இருக்கும். ஆகையால்தான் அப்படிக் கேட்டோம். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டுமாவது இந்த 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று துவங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லா பகுதிகளிலும் மலைவாசிகள் இல்லை. ஒரு சில பகுதிகளில் தான் இருக்கிறார்கள். தற்போது இந்த ஆட்சி வந்த பிறகு தான் 1,200 என்று இருந்த நிலைமையை மாற்றி 800 கார்டுகள் வரையில் வைப்பதற்கான சூழ்நிலையை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆக 500 கார்டுகள் என்று சொல்வது அந்த அளவிற்குக் குறைத்தால் பொது விநியோக முறையில் ஏராளமான நஷ்டம் ஏற்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். மலை ஜாதிக்காரர்கள் ஒரு வேளை 2 மைல், 3 மைல் தூரம் நடந்துபோய் வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தால், அதற்கான கடைகளை அந்த மலைஜாதிக்காரர்கள் வாழ்கின்ற பகுதிகளில் அவர்கள் தர முன்வருவார்களேயானால், அந்த வகையிலே பிரித்து அவர்களுக்கு வழி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசு கன்னியாகுமரி மாவட்டத்திலே கார்டுகளை எல்லாம் புதிதாகக் கேட்கின்றவர்களுக்கு, அவர்களுக்கு கார்டுகளைக் கொடுப்பதற்கு 2 கார்டுகளை விட்டு விட்டு ஒரு கார்டு வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். அதன் பேரில் 5,000-க்கும் மேற்பட்ட கார்டுகள் அங்கே வெட்டப்பட்டிருக்கிறது. ஆகையால் அங்குள்ள மக்கள் எல்லோரும் மிக சிரமப்படுகிறார்கள். அதனை தவிர்த்து மீண்டும் 1982-ல் கணக்கெடுத்தது போல் கணக்கெடுத்து, கார்டு இல்லாதவர்களுக்கு எல்லாம் கார்டு வழங்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, கார்டுகள் இல்லாத இடங்கள் அநேகமாக இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சமீபத்திலே நான் சுற்றுப் பயணம் செய்து விட்டு வந்தேன். ஒரு இடத்திலே 13,000 கார்டுகள் இல்லை என்றெல்லாம் கூட சொன்னார்கள். ஆனால் விசாரித்த வரையில் போலி கார்டுகள் கொஞ்சம் இருக்கின்றன. அவைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைமை இந்த அரசுக்கு இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற பிரச்சினை பக்கத்திலே கேரளா இருக்கிறது. இந்த வீடு கன்னியாகுமரி என்று சொன்னால், அந்த





வீடு கேரள மாநிலத்தில் இருக்கிறது. ஆகவே அந்த வகையில் அவற்றையெல்லாம் பரிசீலித்துத்தான் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. 5,000 கார்டுகள் வெட்டப்பட்டு விட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு வெட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லையென்று நான் கருதுகிறேன். இருந்தாலும் மீண்டும் அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு பரிசீலனை மேற்கொண்டு எவ்வளவு பேர்களுக்குக் கார்டுகள் இல்லை என்பதை இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை திறக்க இயலாத நிலைமை இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் பல கிராமங்களில் கிலோமீட்டர் கணக்கிலே தாய்மார்கள் நடந்து சென்று ரேஷன் அத்தியாவசியப் பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில், குறிப்பிட்ட இடங்களில் அதாவது கிளை நிலையங்களை வாரத்திற்கு இரண்டு நாட்கள் போட்டால் கூட அவர்கள் அந்த ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு சௌகர்யமாக இருக்கும். அப்படி ஒவ்வொரு தொகுதியிலும் நான் கொடுக்கின்ற மனுக்களைப் பரிசீலித்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் கடைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்டுகளைப் பொறுத்தவரையில், 1,200 கார்டுகள் என்பதை இந்த அரசு 800 கார்டுகளாக மாற்றியது என்று நான் சொன்னேன். அத்தோடு சில இடங்களில்தான் அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில்கூட மலைவாசி பகுதிகள் ஒரு மைல் தள்ளி சி கிராமங்களில் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில்கூட 500, 300 கார்டுகள் என்று பிரித்தால் அதிகமாக நஷ்டம் ஏற்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே அப்படிப்பட்ட 200, 300 பேர் இருக்கின்ற இடங்களாக இருந்தால், அதிலே அவர்கள் 00 கடையைத் தருவார்களேயானால், அரசு அதை பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-40

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அடுத்து இந்த ரேஷன் கார்டுகள் வழங்குவதிலே, ஒரே குடும்பமாக பல பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலருக்கு திருமணமாகி தனிக் குடும்பமாக செல்லுகிற நேரத்தில் அவர்களுக்கு தனியாக ரேஷன் கார்டுகள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஆக ஒட்டு மொத்த குடும்பமாக

இருந்து அவர்கள் திருமணமாகி தனிக் குடித்தனமாக செல்லும் பொழுது அந்தக் கார்டுகளைப் பிரித்து அவர்களுக்கு தனியாக ரேஷன் கார்டுகள் வழங்குவதற்கான நடவடிக்கையை அமைச்சர் எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் செய்துக் கொண்டு தனியாக போகிறவர்களுக்கு ஏற்கெனவே அரசு கார்டுகளைப் பிரித்து வழங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 கார்டுகளுக்கு ஒரு கூட்டுறவு அங்காடி என்பதை அமைக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். பொதுவாக ஒரு பகுதி நேர கடைகளாகத் தான் எங்கள் பக்கத்தில் இந்த அங்காடிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அதை முழு நேர அங்காடிகளாக அமைப்பதற்கு அரசிடத்திலே உத்தேசம் உள்ளதா? ஏழை எளிய மக்கள் தங்கள் வேலைகளை முடித்து விட்டு 5 மணிக்கு வருகிற போது, 6 மணிக்கு அந்தக் கடைகள் சாத்தியிருப்பதால் வாங்கக் கூடிய அத்தியாவசியமான பொருள்களை வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவைகள் முழு நேரமாக இருந்தால் தங்களுடைய குழந்தைகளையோ அல்லது மற்றவர்களையோ அனுப்பி வாங்குவதற்கு அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். அதற்கு அரசிடத்திலே உத்தேசம் இருக்கிறதா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கிற கடைகளே முழுநேர கடைகள் தான். அவர்கள் அங்கே இருப்பது இல்லை என்ற குறை சில இடங்களிலே இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட குறைபாடு பாடுகள் குறிப்பிட்டு தெரிவிக்கப்படுமேயானால் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. தண்டாயுதபாணி.

**திரு. வி. தண்டாயுதபாணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது முழு நேர கூட்டுறவுக் கடைகள் இருக்கின்றன. சில பகுதிகளிலே ஏற்கெனவே 5 கிலோ மீட்டர் தூரமாக இருந்ததை 3 கிலோ மீட்டராக குறைத்து கடைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. காடுகள் இருக்கிற பகுதிகளிலே, ஒரு ஊரிலே 3 நாள், இன்னொரு ஊரிலே 3 நாள் என்று பிரித்து அந்தக் கடைகளிலே போய் வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தால் நலமாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போலி ரேஷன் கார்டுகளை கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக சொன்னார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களே,



உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்திலே நீண்ட நாள் இருந்தவர். இந்தப் போலி ரேஷன் கார்டுகளை கண்டு பிடிப்பதிலே ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் விஜிலென்ஸ் கமிட்டி என்ற ஒன்று உண்டு. புலன் ஆய்வுத் துறை—அப்படிப்பட்ட புலன் ஆய்வுத் துறையை ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் அமைக்கின்ற உத்தேசம் உண்டா? ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 3 மைல் 4 மைல் தூரத்திற்கு ஒரு கடை என்ற அளவில் இந்தக் கடைகள் இருக்கின்றன. மக்களுக்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக காடுகள், மலை ஜாதி மக்கள் வாழுகின்ற பகுதிகளிலே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு ஆர்வம் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். போலி கார்டுகளை கண்டு பிடிப்பதற்கு பல்வேறு வகையான வழி முறைகள் இந்த அரசிலே இருக்கின்றன. அந்த வழி முறைகளைத்தான் நாங்கள் இப்போது பின்பற்றி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையைப் பார்க்கின்ற போது நாட்டு மக்களின் தொகையை விட அதிகமாக இருக்கிறது. ஆகவே அந்த போலி கார்டுகளை எடுக்கும் வண்ணம் புதியதாக குடும்ப அட்டைகளை வழங்குவதற்கு அரசு முன் வருமா? அதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா? ஏற்கெனவே இருந்தது என்ன ஆயிற்று? மேலும் நெடுந்தூரத்திலே இருந்து தாய்மார்கள் ரேஷன் கடைகளை நோக்கி வர வேண்டியிருப்பதால் சிறு சிறு குடியிருப்புக்களில் உள்ள தனியார் கடைகளை அரசு அங்கீகரித்து (Lic : cc System) அவர்களிடம் உணவுப் பொருள்களை வழங்குவதற்கு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே மேற்கு வங்காளத்திலே அப்படிப்பட்ட முறைகள் கையாளப்படுகின்றன. தனியார் துறைக்கு கம்யூனிஸ்ட் கட்சியினர் விட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறைகள் இங்கே கையாளப்படுவதில்லை. தனியார் துறைக்கு தருவது என்கிற யோசனையே பரிசீலிக்க வேண்டிய ஒன்று தான் என்று நான் கருதுகிறேன். வேறு வகையான அட்டைகளை அச்சடித்து ஏற்கெனவே கூட வைத்திருக்கிறார்கள். அதை வினியோகிப்பது பற்றியும் அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

[1991 செப்டம்பர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப் புறங்களிலே 3 வார்டுகளுக்கு ஒரு கடை என்று வைத்திருக்கிறார்கள். மக்கள் தொகை அதிகமாக இருக்கும் இந்தக் காலத்திலே மூன்று வார்டுகளிலே இருக்கிற மக்களும் ரேஷன் கடைகளிலே சென்று உணவுப் பொருள் வாங்குவதிலே சிரமம் இருக்கிறது. குறைந்தது வார்டுக்கு ஒரு கடையாக இருக்க வேண்டும் என்கிற முறையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-45)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, வார்டுக்கு ஒரு கடைதான் வைப்பது அநேகமாக வாடிக்கை. ஆனால் சில இடங்களிலே கடைகள் கிடைக்காத காரணத்தாலே 2, 3 வார்டுக்கு மையமாகப் பார்த்து 3, 4 கடைகளைக் கூட வைத்து இருப்பதை சமீபத்திலே நான் போய் பார்த்து வந்தேன். ஆகவே அப்படிப்பட்ட இடங்களிலே வேறு அந்தந்த வார்டிலேயே கடைகளைத் தேடும்படி நான் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே ஒத்துழைத்து கடைகளை அந்தந்தப் பகுதியிலே தேடித் தருவார்களேயானால், இடம் கிடைக்குமானால், அவற்றை வைத்துக் கொண்டு அங்கு இந்த பங்கீட்டுக் கடைகளை வைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரேஷன் கார்டு புதியதாக கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அந்த நபரிடம் டாக்ஸ் ரெஸிட்-ஹவுஸ் டாக்ஸ் ரெஸிட் கேட்கிறார்கள். ஏழை மக்கள், குடிசையில் வாழும் மக்களுக்கு டாக்ஸ் ரெஸிட் கிடையாது. குடிசைகளில் 10, 12 பேர்கள் தங்குகின்ற அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய பகுதியிலே, மீனவப் பகுதியிலே இத்தகைய நிலைமை இருக்கிறது. எந்த அதிகாரியிடம் சென்றாலும் அவர்கள் சொல்கிறார்கள் நீங்கள் ரேஷன் கார்டு வேண்டுமென்று சொன்னால், நீங்கள் கரம் கட்டிய டாக்ஸ் ரெஸிட் வேண்டும் என்று கேட்கிறார்கள். உண்மையிலேயே அந்தக் குடும்பத்திலே 10 நபர்கள் இருந்தால் 2 குடும்பங்கள் தங்கியிருந்தால் விசாரித்து அவர்களுக்குத் தனி கார்டு கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். எனக்கு முன்னாலே கூட கேட்டார்கள். மலையோரப் பகுதியிலே 18 கிலோ மீட்டர் தூரத்திலே என்னுடைய பகுதியிலே 1400 கார்டுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். 18 கிலோ மீட்டர் நடந்து போக



1991 செப்டம்பர் 6]

முடியாத இடங்களுக்கு ஒரு தனிச் சட்டத்தைப் போட்டோ அல்லது ஒரு ஆணையைப் போட்டோ—அதற்கு யாராவது வாலண்டரியாக கட்டிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்—இரண்டு நாட்கள் அந்த இடங்களிலே அவர்களே சென்று கொடுப்பதற்கான ஒருஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு 18 மைல் தூரம் தள்ளி ஒரு கிராமம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதாக இதுவரையில் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. நான் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சென்று பார்த்தபோது அப்படிப்பட்ட தகவல் எனக்குத் தரப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரை நான் கேட்பதற்கு தயாராக இருக்கிறேன். தமிழகத்திலே 18 மைல் தூரத்திலே ஒரு கிராமம் இரண்டாக பிரிந்திருப்பதாக எனக்கு தெரியவில்லை. அதை அறிந்த பிறகு அதற்கான நடவடிக்கையை எடுக்கத் தயாராக இருக்கிறேன். திருமணம் செய்து கொண்ட குடும்பங்களுக்கு கார்டுகள் அளிக்கப்படுகின்றன. பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஒரே குடிசையில் 2, 3 குடும்பங்கள் இருப்பது வாடிக்கை. அப்படித் தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே மீனவர் குடும்பத்திலே இருக்கலாம். அவற்றையும் நான் இப்பொழுதுதான் நேரிலே பார்த்து விட்டு வந்திருக்கிறேன். ஆகவே பெரிய குறைபாடுகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சில கடைகளில் தவறுகள் நடக்கின்றன. அவர்களைத் தண்டிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து டாக்டர் தே. குமாரதாஸ்

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, பெருவாரியாக ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் புறம்போக்கு பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு, ஆயிரக்கணக்கான மக்களுக்கு, குடிசையில் வாழ்கின்றவர்களுக்கு, பஞ்சாயத்து ஆனாலும் சரி, நகரப் பஞ்சாயத்து ஆனாலும் சரி, நகராட்சியானாலும் சரி, டோர்களில் நம்பர் இருக்காது. அதனாலே அவர்கள் கரம் கட்ட முடியாத சூழ்நிலை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்துக் கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு நீங்கள் எந்தவிதத்தில் உணவு விநியோக அட்டை வழங்கியிருக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்துக் கொள்ள ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,25,00,000 கார்டுகள் தமிழகத்திலே வழங்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவு குடும்பங்களுக்கும் ரேஷன் கார்டுகள் தரப்பட்டிருக்கின்றன. ரேஷன் கார்டு இல்லை என்ற குறைபாடு அதிகமாக இல்லை. சில இடங்களிலே புதியதாக திருமணம் செய்து கொண்டவர்கள் ரேஷன் கார்டுகளைக் கேட்கிறார்கள். சில இடங்களிலே திருமணம் ஆகிவிட்டதாகச் சொல்லிக் கொண்டு வந்து நிற்கிறார்கள் அவற்றையெல்லாம் பரிசீலித்துத்தான் கார்டுகள் தரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஏராளமான குடும்பங்களுக்கு கார்டுகள் இல்லையென்று நான் சுற்றுப் பயணம் செய்யும்போது சொல்கிறார்கள். அந்த கார்டு எண்ணிக்கையைப் பார்க்கும்போது, அங்கேயிருக்கின்ற குடும்பங்களுக்கு அதிகமான அளவிலே எண்ணிக்கை இருக்கிறது. ஆகவே இவைகளைக் கருத்தில் கொண்டு போலி ரேஷன் கார்டுகளை தடை செய்து நியாயமான கோரிக்கைகளை வைக்கின்றவர்களுக்கு கார்டுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இன்னும் பனை ஏறும் தொழில்களைச் செய்கின்றவர்களுக்கு எல்லாம் இந்த கார்டு இல்லாத குறை இருக்கிறது. இவைகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே இருக்கின்ற கார்டுகள் 1 கோடியே 25 இலட்சம். ஆகவே ஜனத்தொகைக்கு மேலேயே சில மாவட்டங்களிலே கார்டுகள் இருக்கின்றன என்பது என்னுடைய கவனத்திற்கு வருகிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவி அவர்கள் இதிலே சலுகை காட்டுகின்ற மனப்பான்மையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும். அரிசி 2 ரூபாய்க்கும், 2 ரூபாய் 50 பைசாவுக்கும் தருகின்ற நிலைமை இன்றைக்கு நீடித்து வருவதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே எவ்வளவு இழப்பு என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ரேஷன் கார்டுகள் இல்லை என்கிற உண்மையான நிலவரம் தரப்படுமானால் இவைகள் கவனிக்கப்படும்.

(முற்பகல் 9—50 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூரத்தையும், ஜனத்தொகையையும் கணக்கெடுத்து தூரமும் ஜனத்தொகையும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால்





ஒரு ரேஷன் கடைக்கு உட்பட்ட பகுதியில் இன்னொரு ரேஷன் கடையை உருவாக்கி அதிலே 2 நாட்கள் இதிலே 4 நாட்கள் வினியோகம் என்கிற முறையை பின்பற்றினால் ஒரு ரேஷன் கடையிலிருந்து இன்னொரு ரேஷன் கடைக்கு பொருள்கள் எடுத்துக் கொண்டு போகிறபோது அது இன்னொரு ரேஷன் கடைக்குப் போகிறதா அல்லது கள்ள மார்க்கெட்டுக்குப் போகிறதா என்கிற பிரச்சினை உருவாகிக் கொண்டு இருக்கிற காரணத்தால் அதை தவிர்க்கக் கூடிய வகையில் ஜனத்தொகை, தூரம் இதன் அடிப்படையிலும், கோரிக்கையின் அடிப்படையிலும் ரேஷன் கடைகளை புதிதாக உருவாக்கி கள்ள மார்க்கெட்டுக்குப் போவதை தடுக்கிற முறை பின்பற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது தனிக் கேள்விக்கு உரியதாக இருந்தாலும், கள்ள மார்க்கெட்டுகள் அதிகமாக நடைபெறாத வகையில் தகுந்த நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பதிலில் 500 கார்டுகள் உள்ள இடங்களில் ரேஷன் கடைகள் வைத்தால் அது லாபமாக இருக்காது, நஷ்டமாக இருக்கும் என்று சொன்னார்கள். நாம் லாபம், நஷ்டம் பார்த்து திட்டங்கள் போடவில்லை. படித்த இளைஞர்களுக்கு நிறைய வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்று நாம் இப்போது பட்ஜெட்டில் கூட சொல்லியிருக்கிறோம். ஆகவே மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இவ்வளவு வேலைவாய்ப்பு கொடுத்து இருக்கிறோம் என்ற அந்த அடிப்படையில் 500 கார்டுகள் உள்ள இடங்களுக்கு எல்லாம் இந்த ரேஷன் கடைகளை வைத்து பல பேருக்கு வேலைவாய்ப்புக்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 800 கார்டுகள் என்று குறைக்கப்பட்டதே மிகப்பெரிய சலுகை. எல்லோருக்கும் மிக குறுகிய தூரத்தில் கடைகள் இப்போது அமைக்கப்பட்டு இருக்கின்றன. 500 கார்டுகள் என்று பிரித்தால் கடைகள் கிடைப்பது கஷ்டம் இரண்டாவது அதிகமாக வேலைவாய்ப்பு பற்றி சொல்கிறார்கள். ஏற்கனவே 42 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். அதோடு தற்காலிகமாக இன்னொரு 21 ஆயிரம் பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக இதிலே கொடுக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்பு போல மற்ற துறைகளில் கொடுக்கப்

பட்டு இருக்கிறதா என்பது கூட எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு வேலைவாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. இவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு அளித்த பல்வேறு குடும்பங்களுடைய ரேஷன் கார்டுகளை மனப்பூர்வமாக வெட்டி குறைத்து இருப்பதாக தாய்மார்கள் அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முறையிட்டார்கள். அப்படி மனப்பூர்வமாக வெட்டி குறைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில குறைபாடுகளை கன்னியாகுமரி மாவட்டத்தில் சுட்டியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 501 கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை வழங்க முடியாது என்ற நிதிநிலை பற்றாக்குறையை சுட்டிக்காட்டினார்கள். அப்படிப்பட்ட இடங்களை கருத்தில் கொண்டு நடமாடும் ரேஷன் கடைகள் அதாவது 'மோபைல் ரேஷன் ஷாப்' உருவாக்க அரசிடம் ஏதாவது கருத்துரு இருக்கிறதா? அப்படி கருத்துரு இருந்தால் அதை பரிசீலனை செய்ய முடியுமா என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற கடைகளிலேயே எலிகளின் தொல்லையை தடுக்க வேண்டியிருக்கிறது; ஆட்களை கண்காணிக்க வேண்டியிருக்கிறது. இன்னும் நடமாடும் ரேஷன் கடைகளை வைத்தால் இந்த பொருள்கள் எல்லாம் நேராக கேரளாவுக்கு போய் சேர்ந்து விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எஸ்.ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் ரேஷன் கடைகளை 3 கிலோ மீட்டருக்குள் அந்த ஒரு லிமிட்டை வைத்து திறப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் லெயிடங்களி



ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு பெண்கள், தாய்மார்கள் ரேஷன் வாங்க செல்லும்போது அங்கு ஒரு கம்யூனிட்டிக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு கம்யூனிட்டிக்காரர்கள் வாங்க போகிறார்கள். இப்படி வரும் போது சில தகராறுகள் எல்லாம் ஏற்படுகின்றன. இதனால் தாய்மார்கள் வாங்கமுடியாமல் அந்த இடத்தை விட்டு வெளியே வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ரேஷன் அரிசி மற்ற பொருள்கள் எல்லாம் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இது போன்ற இடங்களில், இந்த 3 கிலோ மீட்டர் என்பதை எல்லாம் தளர்த்தி, ஒரு ரேஷன் கடையை, கிளைக் கடையை ஒவ்வொரு ஊரிலும் இப்படி தகராறு ஏற்படுகின்ற முக்கியமான இடங்களில் திறக்க ஏற்பாடு செய்யவேண்டும். ரேஷன் கடைகளில் பாமாயில் போன்ற ஆயில்கள் கிடைப்பது இல்லை. இவைகள் எல்லாம் கிடைக்க வழிவகை செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-55)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக தூரம் போக வேண்டிய இடங்கள், ஜாதிச் சண்டைகள் வருகின்ற இடங்கள் என்று ஏதாவது குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களானால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம். எல்லா ஊர்களிலும் அப்படிப்பட்ட பிரச்சினை இல்லை. குடி தண்ணீரைக்கூட தெருவுக்கு தெரு இந்த ஆட்சியிலே வைத்து தந்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினை ஒன்றும் வராது. மற்றபடி, பாமாயில் பற்றி கேட்டார்கள். தனிக் கேள்வி போட்டால் அதற்கு பதில் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கிராமங்களில், 3, 4 கிலோ மீட்டர்கள் சென்று அந்த அத்தியாவசியமான பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிச் செல்கின்றபொழுது அந்த ரேஷன் கடைகளிலே உள்ளவர்கள், சில நாட்களில் அரிசி இருப்பதாகவும், சீனி வாங்கவேண்டுமென்றால் மற்றோரு நாளுக்கு வருமாறும் சொல்கிறார்கள். எனவே, பொருட்கள் வாங்க வருகின்ற தாய்மார்கள், கூலிக்குப் போகின்றவர்கள், அந்த மாதத்திற்குரிய பொருட்களை வாங்குவதற்கு அலைய வேண்டிய கட்டாய சூழ்நிலையிலே இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து உரிய நடவடிக்கைகளை எடுத்து, ஒரே சமயத்தில் எல்லா பொருட்களும் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதை இந்த அவையின் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்குகள் எல்லோருக்கும் கொடுப்பதற்கு, உரிய நேரத்தில் அனுப்பப்பட்டு விடுகின்றன. சரக்குகள் இல்லையென்று சொல்வதற்கு எந்த முகாந்திரம் உள்ளது என்று எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தால், அது கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ் .ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 800 கார்டுகளுக்குத்தான் ஒரு கடை வைத்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த 800 கார்டுகளுக்கும் கொடுக்கப்படுகின்ற பொருட்களின் அளவு, 10 லிட்டர் மண்ணெண்ணெய் வாங்கினால் 7 லிட்டர் தான் இருக்கிறது; 10 கிலோ அரிசி வாங்கினால் 7½ கிலோ தான் இருக்கிறது. இதை பல்வேறு சமயங்களில் நாங்களே வாங்கி நிறுத்திப் பார்த்து இருக்கிறோம். அந்தக் குறைபாடுளைக் களைவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா; இதன் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறைபாடுகள் சில இடங்களில் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியும். அதற்காகத்தான் சர்க்கரைப் போன்ற பொருட்களை பிளாஸ்டிக் பைகளிலே போட்டு கொடுக்கலாமா என்பதை இந்த அரசு பரிசீலித்து வருகிறது. மற்றபடி, மண்ணெண்ணெய் அளவிலே தவறுகள் நடக்கிறது என்று சொல்வதற்குக் காரணம், மண்ணெண்ணெய்யை ஊற்றும்போது நுரை வந்து விடுகிறது. அந்த நுரையையே அளவாக வைத்து கொடுத்து விடுகிறார்கள். பாமர மக்களிடத்திலே இந்த ஏமாற்றுகள் நடைபெறுவதை நானே பார்த்தேன். அதையெல்லாம் கண்டிப்பதற்கான முறையிலே தான், அதற்காகத்தான் ஒரு பிளாஸ்டிக் டின் 10 ரூபாய் 12 ரூபாயிலே விற்கிறது. அதை நாங்கள் கொடுத்தால், அந்தப் பிளாஸ்டிக் கடைக்காரனிடத்திலே எண்ணெய்யை நாங்கள் வாங்கிக் கொடுத்தோம் என்ற குறைபாடுகள் சொல்வார்கள் என்ற காரணத்தினாலே அவர்களே வாங்கிக் கொண்டு வந்து, அளவு பார்த்து எண்ணெய்யை வாங்கிக் கொள்ளுங்கள் என்று நான் அறிக்கையே விடுத்திருக்கிறேன். அதைப்போலவே, அரிசியிலே எடை எப்படி குறைகிறது என்று சொன்னால், விரலிலேயே அவர்கள் ஏதேதோ செய்கிறார்கள். அதையெல்லாம் நம்மாலே கற்றுக்கொண்டு வர முடியாது. வயதும் ஆகி விட்டது. அதையெல்லாம் நான் பார்த்தேன். தெரிந்து கொண்டேன் நான். ஆகவே, எடையிலே ஒன்றும் தப்பு பண்ணுவது இல்லை. எடைக்கல்லும் சரி





யாக இருக்கிறது. தராசும் சரியாக இருக்கிறது. முள்ளும் சரியாக இருக்கிறது. விரலிலேயே ஒரு வேலையைச் செய்து விடுகிறான். அதை நம்மாலே கண்டுபிடிக்க முடிவதில்லை அதைத்தவிர மற்றபடி ஒன்றும் இல்லை. ரொம்ப வயதான தாய்மார்கள் வருகின்றபோது ஏமாற்றுகிறார்கள். நானே போய், ஆலந்தூரிலே கண்டுபிடித்தேன். அதற்கான நடவடிக்கை எடுத்தேன். ஆகவே, அந்த வகையிலே சில தவறுகள் நடப்பது தெரியும். அது அதிகமாக நடக்குமேயானால் இந்த அரசு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள் :

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை கடைகளில் செக்கரட்டரிகளாகத் தொடர்ந்து 20 வருட காலமாக வேலை பார்க்கிறார்கள் என்பதால் அவர்களுடைய சம்பளம் நிர்ணயம் செய்யப்படுள்ளதா என்பது தெரியவில்லை. ஏனெனில், ஒவ்வொருவரும் அவர்களுடைய கல்வியின் அடிப்படையில் பார்ப்பது என்றால் அரசுக்கு வருமான இழப்பாக நிறைய வருகிறது. ஒரு கடை செக்கரட்டரியினுடைய சம்பளம் 2,860 ரூபாய். அங்கே வேலை பார்க்கின்ற ஒரு சேல்ஸ்மேனுடைய சம்பளம் 2,500 ரூபாய்........... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நியாய விலைக் கடைகளைப்பற்றியது ; கூட்டுறவுச் சங்கங்களில் வேலை பார்க்கிற பணியாளர்களுடைய சம்பளத்தைப் பற்றியது அல்ல. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

(அ) காவிரி நீர்ப் பங்கீடு பற்றி தமிழ்நாடு, கர்நாடக அரசுகள் பேசித் தீர்வுகாண வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள ஆலோசனை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பண்ருட்டி இராமச்சந்திரன்:

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக நேற்றைய தினம் உச்ச நீதி மன்றம் தமிழ்நாடு அரசுக்கும் கர்நாடக அரசுக்கும், வழங்கிய ஆலோசனையைப் பார்த்தபொழுது உண்மையிலேயே அது நம்மை திடுக்கிட வைத்திருக்கிறது. காரணம், தமிழ்நாட்டிற்கு இருக்கின்ற ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று சொல்வார்களே, அதைப்போல இருக்கின்ற ஒரே வற்றாத நதி காவிரி ஆறுதான். கர்நாடகத்திற்குக் காவிரியும் உண்டு; கிருஷ்ணாவும் உண்டு துங்கபத்திரையும் உண்டு. தமிழ்நாட்டைப்போல நான்கு மடங்கு நீர்வளம் கர்நாடகத்திற்கு உண்டு. ஆகையினால் தான், தமிழ்நாடு அரசு காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தாலும், அதற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்பது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்து ஆகும். அதற்கேற்ப முழு ஒத்துழைப்பும் தந்து வருகிறோம்.

முற்பகல் (10-00)

அங்ஙனம் இருக்க, நேற்றைய தினம், உச்ச நீதிமன்றம், இரு மாநிலங்களும் பேசி, குறைந்த பட்சமாக, உங்களுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு ஏன் முயற்சிக்கக்கூடாது என்ற ஆலோசனையும் வழங்கியிருக்கின்றார்கள்.

ஆனால், உண்மை என்னவென்றால், காவிரி நடுவர் மன்றம் இடைக்கால உத்தரவு வழங்கியிருக்கிறது. நேற்றைய தினம் உச்ச நீதிமன்றம் இடைக்கால ஏற்பாட்டுக்கு நீங்கள் ஏன் வரக்கூடாது என்று சொல்கிறார்கள்.

அதிலே இரு கருத்துக்களை உச்ச நீதிமன்றம் கவனத்தில் கொண்டு இருக்கிறதோ என்று எனக்கு ஐயம் ஏற்படுகிறது. கர்நாடகத்தின் சார்பில் 205 டி.எம்.சி.-க்கு நாங்கள் எங்கே போவது, மழை பெய்யாவிட்டால் நாங்கள் என்ன செய்வது, நாங்கள் அழிந்து விடுவோமே என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவதாக, அப்படியே தருவது என்றாலும், மாதந்தோறும் எங்களாலே எப்படித் தர முடியும், மழை பெய்யும் என்று எங்களால் எப்படிச் சொல்ல முடியும் என்ற வாதங்களை எழுப்பியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நாம் சொல்வது, இல்லாத ஒன்றைக் கேட்பதற்காக அல்ல. காவிரி நதி நீர்த் தகராறே, சராசரி ஆண்டுகள், அல்லது காவிரியில் பெருக்கெடுத்து வருகிற உபரி ஆண்டுகளிலேயோ எழுகின்ற பிரச்சினை அல்ல. பற்றாக்குறை எழுகிற பொழுது, எப்படி அந்தப் பற்றாக்குறையைத் தீர்த்துக் கொள்வது என்பதுதான் பிரச்சினையே. அதிலே நாம் தெளிவாக காவிரி நடுவர் மன்றத்தின் முன்பு,



உலகம் முழுவதும் ஒத்துக் கொள்ளுகின்ற அடிப்படையில் எக்ஸிஸ்டிங் யூஸ்—ஏற்கனவே இருக்கின்ற பாசனம் பெறுகின்ற நிலங்கள்; நியூ யூஸ்—புதிதாகப் பாசனங்கள்பெறுகின்ற நிலங்கள் என்று வருகிறபொழுது, எவ்வளவுகவெவ்வளவு மழை வளம் குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு புதிதாகப் பாசன வசதிகளைக் குறைத்துக் கொள்வதுதான் உலகம் முழுவதும் உள்ள மரபு.

ஆகவே, 205 டி.எம்.சி. அவர்களால் தர முடியவில்லை என்றால், 200 டி.எம்.சி. தான் தர முடிகிறது என்றால், 150 டி.எம்.சி. தான் தர முடிகிறது என்றால், அவர்கள் என்ன செய்திருக்க வேண்டுமென்றால், அந்த அளவிற்கு நியூ யூஸ்—அது தமிழ்நாட்டிலே இருந்தாலும் சரி, கர்நாடகத்திலே இருந்தாலும் சரி, அந்த நிலங்களுக்கு மட்டும்தான் நாம் பாசன வசதியைக் குறைத்துக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, எங்களாலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து ரொம்ப விரிவாக உள்ளே போவது—உங்களுக்கே தெரியும். அதனாலே இதிலேயிருந்து அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிற செய்தியை மட்டும் எடுத்துச் சொல்வீர்களேயானால் நல்லது. சுப்ரீம் கோர்ட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. அந்த அளவிலே போதும் என்று நினைக்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சுருக்கமாக முடித்துக்கொள்கிறேன். பற்றாக்குறை என்கிறபொழுது, ஏற்கனவே உள்ள பாசனத்திற்கு முன்னுரிமை தர வேண்டும் என்பதுதான் தமிழ்நாட்டினுடைய நிலைமை. அது எவ்வாறு உச்ச நீதி மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்பதையும் அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

இன்னொன்று, மூன்று மாதங்கள் கழித்து ஒரே நேரத்திலேதான் நீரைக் கர்நாடகம் தர முடியும். அதுவரையிலே தேக்கி இருப்போம் என்றால், அதன் நிலை என்ன ஆகும் என்றால், கர்நாடகத்திலே நீர்த் தேக்கங்களில் நீர் இருக்கிறபொழுது, அங்கேயிருக்கிற விவசாயிகள் பயிரிட்டு விட்டு, அந்த நீரை நம்பித்தான் நாங்கள் பயிரிட்டோம்; ஆகையினாலே மூன்று மாதங்கள் கழித்து விடுவதை நாங்கள் முடியாது என்று சொல்லலாம். அதேபோல, தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகள் மேட்டூரிலே அந்தத் தண்ணீர் வரவில்லை என்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தகவல் அறிய விரும்புவதை மட்டும் சொன்னால் போதும் என்று நினைக்கிறேன். மேற்கொண்டு உள்ளே போவது—வழக்கு அங்கே இன்னும் இருக்கிறது.

[1991 செப்டம்பர் 6

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, There are only two points. They are questioning the limit flow'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்....

திரு. ச. இராமச்சந்திரன் : நான் சொல்லிவிடுகிறேன். There are only two points.

MR. SPEAKER : It is under the consideration of the Supreme Court. நீங்கள் வந்து ரொம்ப உள்ளே போகிற மாதிரி இருந்தது என்றால் அதைப்பற்றி விவாதம் என்ன ஆகும். இன்னொரு உறுப்பினர் வேறு ஒரு தீர்மானமே கொடுத்திருக்கிறார். அதைப் பற்றியெல்லாம் நாம் விரிவாக உள்ளே போவது மாதிரி வரும்.

[முற்பகல் 10-05]

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) There are only two points.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி சொன்ன விவரங்கள், எல்லோருக்குமே நன்றாகத் தெரிந்த விவரங்கள்தான். ஏதாவது தெரியாத விவரங்கள் சொல்வதாக இருந்தால், உபயோகமாக இருக்கும். எல்லோருக்கும் தெரிந்த விவரங்களைச் சொல்லிக்கொண்டிராமல், அவர் என்ன சொல்ல விரும்புகிறாரோ, அதை ஒரே வரியில் சொல்லி விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் தெரிந்த இந்த விவரங்கள் உச்ச நீதி மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள் பற்றி ...... (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் கொஞ்சம் இருங்கள் ...... (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.



1991 செப்டம்பர் 6]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : உச்சநீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டிய விவரங்களில் எது எது தேவை என்பதையெல்லாம் உச்ச நீதிமன்றத்திற்கு முறையாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான்தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள்பற்றி, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் 79-வது விதியின் கீழ் ஒரு தனித் தீர்மானமே நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கர்னாடக அரசினுடைய போக்கைக் கண்டித்தும், மத்திய அரசின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த வற்புறுத்தியும், இதற்காகக் கடும் முயற்சி எடுத்து வருகிற தமிழக முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தும் ஒரு தனித் தீர்மானமே நிறைவேற்ற வேண்டுமென்று ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். அது என்னுடைய ஆய்விலே இருந்து வருகிறது. அந்தப் பிரச்சினை இப்போது எழுப்பப்பட்டுவிட்ட காரணத்தால், அதுபற்றி அந்த உறுப்பினரும் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கலாம், சுருக்கமாக, என்ன கேட்க விரும்புகிறார் என்பதை மட்டும். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நடுவர் தீர்ப்பு வழங்கிய 205 டி.எம்.சி. தண்ணீரை, இன்றைக்கு கர்நாடக அரசு வழங்க மறுத்து வருகிறது. நம்முடைய மாநில அரசு தொடர்ந்து அந்தத் தண்ணீரைப் பெற, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை கடுமையாக தொடர்ந்து வலியுறுத்தி வருவதை மனமாரப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று, இந்தப் பிரச்சினையை ஒரு இருபதாண்டு காலமாக, காவிரி நீர்ப் பிரச்சினை தீராமல் இருந்த சமயத்தில், மீண்டும் மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டுதான் அந்த இடைக்காலத் தீர்ப்பை வழங்க வேண்டுமென்று ஒரு உத்தரவு போட்ட பின்னரும், சுப்ரீம் கோர்ட்டின் ஆலோசனைகளைப் பெறுவதற்கு மீண்டும் மத்திய அரசு — அனுமதி பெறுவதற்கு — காத்துக் கொண்டிருக்கிறது. இதன் மூலமாக காவிரி நதி நீர்ப் பிரச்சினையை மேலும் காலம் கடத்துவதற்கு மத்திய அரசு தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் தெரிய வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; இல்லை. நானே சொல்லிவிடுகிறேன். அதாவது, அதற்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம். சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்புவது என்பது காலங்கடத்துகிற முயற்சி என்பது வேண்டாம். (குறுக்கீடு) அது வேண்டாமென்று நானே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன 'சப்மிஷன்'. காவிரி நீர்ப்பிரச்சினை என்பது எவ்வளவு உயிர் நாடியான பிரச்சினை என்பது எல்லோருக்கும் தெரியும். தயவுசெய்து இதை அவையிலே அரசியலாக்காமல், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், தாங்கள் என்ன நினைக்கிறார்களோ, அதை முதலமைச்சரிடம் தனியாகச் சொல்லிவிட்டால் அவர்கள் அதை எவ்வளவு உசிதமாகக் கையாண்டால், தமிழ் நாட்டின் நலனுக்கு உகந்தது என்று எண்ணுகிறார்களோ, அதன்படி அவர்கள் மேல் முழு நம்பிக்கை வைத்து, இதை அரசியல் ஆக்காமல், அவர்களுடைய தீர்மானத்திற்கு விட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சினையைச் சொல்லிவிட்டீர்கள். நானும் அதைத் தெரிவித்தேன். அதற்கு மேற்கொண்டு அதிகமாகப் பேசவேண்டாம் என்று நான் கேட்டுக்கொண்டேன். அதாவது உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். மேற்கொண்டும் அதை விவாதமாக்குவது சரியல்ல. இதில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்கள். அந்த அளவோடு இது போதும். இதிலே விவாதித்துக் கொண்டிருப்பது, ஏதோ நமக்குள்ளே கருத்து மாறுபாடு இருக்கிறது என்பது மாதிரி வெளியே போவது நல்லதல்ல.

திரு. ஜி. பழனிசாமி : காலம் தாழ்த்தக் கூடாது என்பது தான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருடைய கருத்தும் அதுவாகவே இருக்கட்டும். ஆக, மேற்கொண்டு விவாதம் வேண்டாம். அதுவும் இந்த நேரத்திலே வேண்டாம். உங்களுடைய தீர்மானமே இன்னும் என்னுடைய ஆய்விலே இருக்கிறது. உங்களுடைய தீர்மானத்திற்கு நான் வரும்போது அதையெல்லாம் பேசலாம். உங்களுடைய தீர்மானம் இன்னும் முடிந்து போகவில்லை. நீங்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவிப்பதற்காகச் சொன்னேன். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அதை எடுத்துக்கொள்ளும்போது இந்த விவாதம் எல்லாம் வரலாம்.

திரு. ஜி. பழனிசாமி : தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய சூழ்நிலை, மேட்டூரிலே இன்றைக்கு மிகவும் குறைவான தண்ணீர் இருந்தபோதிலும் கூட, அநேகமாக கடைமடை பகுதிகளிலே உள்ள விவசாயிகளுக்கு முழுமையான வேலைகளின் தேவைக்கே போதவில்லை. அப்படிப்பட்ட பற்றாக்குறை





சூழ்நிலை அங்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், மத்திய அரசினை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்த வேண்டுமென்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினை என்பது நம்மைப் பொறுத்தவரை, ஒரு ஜீவாதாரப் பிரச்சினை. பல தலைமுறைகளாக பல்லாயிரம் ஆண்டுகளாக நம்முடைய விவசாயிகள் அனுபவித்து வருகிற உரிமை—பாத்தியம். எனவே அதற்காக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பை அளித்தது.

முற்பகல் 10-10

அந்த இடைக்காலத் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று கர்நாடகம் சொன்னது உள்ளபடியே நாம் எல்லோருமே ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. இடைக்காலத் தீர்ப்பு ஏதோ நாமெல்லாம் விரும்புகின்ற அளவு வந்திருப்பதாக நான் கூட நினைக்கவில்லை. காரணம், உச்ச நீதி மன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிற விவசாயிகள் தாங்கள் எவ்வளவு தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்களோ—302 டி.எம்.சி. வேண்டுமென்று கேட்டார்கள்—அதைவிட இது குறைவு. அதே போல தமிழக அரசின் சார்பிலே உச்சநீதிமன்றத்திலே நாம் கேட்டுக்கொண்டிருக்கிற 282 டி.எம்.சி.-யை விட இது குறைவு. இன்னும் சொல்லப்போனால், 1972 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1974 ஆம் ஆண்டு, 1976ஆம் ஆண்டு நம் முன்னாலே வைக்கப்பட்ட வரைவு ஒப்பந்தத்திலே இருப்பதைக் காட்டிலும் இது குறைவு. என்றாலும், பெருந்தன்மையோடு நாம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். 205 டி.எம்.சி. தண்ணீர் என்றாலும் கூட இடைக்காலத் தீர்ப்பு, அதுவும் நடுவர் மன்றம் வழங்கிய தீர்ப்பு; அதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அந்த அளவுக்குத் தண்ணீர் வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். நேற்றைய தினம் சுப்ரீம் கோர்ட்டிலே நம்முடைய வாதங்கள் முறையாக எடுத்து வைக்கப்பட்டனவா என்று நண்பர் என்னைக் கேட்டார்கள். அவருக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இந்த வழக்குரைஞர்தான் நடுவர் மன்றத்திலே நமக்காக வாதாடி வெற்றி பெற்றவர். எனவே தமிழக அரசின் சார்பிலே தெளிவான வாதங்கள் எழுப்பப்பட்டனவா என்ற கேள்வி முறையான கேள்வியாக, நியாயமான கேள்வியாக நான் நினைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கண்டிப்பாக அனைத்துத் தகவல்களையும் முறை

யாக அறிந்தவர் அவர். நம்முடைய பிரச்சினையை முழுவதும் தெளிவாக அறிந்தவர்தான் அந்த வழக்குரைஞர். அவர் இப்போது நம்முடைய சார்பிலே பேசிக்கொண்டிருக்கிறார். இப்போது சுப்ரீம் கோர்ட்டிலே வெளியிலே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. கோர்ட்டுக்கு வரச் சொல்லி இருக்கிறார்கள். இரண்டு மாநிலங்களைச் சேர்ந்த வழக்குரைஞர்களும் தங்களுடைய மாநில அரசைக் கலந்து கொண்டு கோர்ட்டிலே வந்து கூறும்படி கேட்டிருக்கிறார்கள். நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி.-க்குக் கீழே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நிச்சயமாக யாரும் சொல்லவில்லை. எனவே, இந்த 205 டி.எம்.சி. இடைக்காலத் தீர்ப்பை அமுல்படுத்தும்படி வலியுறுத்த வேண்டுமென்று நம்முடைய வழக்குரைஞருக்கு நம்முடைய அரசின் சார்பிலே வலியுறுத்தப்பட வேண்டும். அது உச்ச நீதிமன்றத்திலே வலியுறுத்தப்பட வேண்டும். இதை நிச்சயமாக இந்த அரசாங்கம் செய்யும் என்று திடமாக நம்புகிறேன். இந்த அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு எங்களுடைய முழு ஆதரவும் உண்டு என்பதை தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . . ... . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி அறிவிப்பு கொடுத்தவர்களுக்கு மட்டும்தான் பேச அனுமதி அளித்திருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். இப்போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தப் பிரச்சினை மீண்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முக்கியமான காரணம், நேற்று உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசும், தமிழக அரசும் பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயலவேண்டுமென்று உச்சநீதிமன்றம் ஆலோசனை வழங்கியதுதான் என்று கருதுகிறேன். இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய ஸ்பெஷல் மென்ஷனிலே குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி அவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்கள். திடுக்கிடும் வகையிலே உச்ச நீதிமன்றம் இத்தகைய ஒரு ஆலோசனையை வழங்கியிருப்பதாகக் கூறியிருக்கிறார். உச்ச நீதிமன்றம் எத்தகைய ஆலோசனையை வழங்கினாலும் அதைப் பற்றி யாரும் அதிர்ச்சியோ, திகைப்போ அடைய வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், தமிழக அரசு இப்பிரச்சினை



குறித்து மிகவும் தெளிவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு என்னுடைய நன்றியைக் தெரிவித்துக்கொள்கிறேன். காவிரிப் பிரச்சினையில் காலத்தைத் தாழ்த்தக் கூடாது. தமிழகத்திற்குப் போதுமான அளவு காவிரி நீரைப் பெறுவதற்கு அரசு தேவையான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்பதிலே அனைவரும் இங்கே ஒருமித்த கருத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். உச்ச நீதிமன்றத்தின் நல்லெண்ணத்தை நாங்கள் வரவேற்கிறோம். பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தியும் தீர்வுகாண முடியாத அளவிற்குக் கர்நாடகம் இந்தப் பிரச்சினையைக்கொண்டு சென்றுவிட்டது. இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், தமிழகத்தைப் பாதிக்கும் வகையில் அவசரச் சட்டம் ஒன்றையும் பிறப்பித்துவிட்டது. எனவே, கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தை தொடர்வதால் எவ்விதப் பயனும் ஏற்படாது என்ற நிலையில், நடுவர் மன்றம் மூலம்தான் தீர்வு ஏற்படும் என்ற கருத்தை தமிழ்நாடு கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

தமிழக அரசின் இந்த நிலை தமிழக அரசின் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் வாதாடும் வழக்கறிஞர் மூலம் உச்சநீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

முறையான தகவல்கள் தமிழக அரசின் வழக்கறிஞரால் உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதா என்ற ஐயப்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இங்கே எழுப்பினார்கள். காவிரி நதி நீர்த்தாவா பிரச்சினையில் எந்தெந்த கோணத்தில் இருந்து என்னென்ன விவரங்கள், என்னென்ன வாதங்கள் எடுத்து வைக்க முடியுமோ அத்தனையும் நம்முடைய வழக்கறிஞர் மிகவும் சிறப்பான முறையில் எடுத்து வைத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தப் பிரச்சினை இப்போதும் உச்சநீதிமன்றத்தின் முன் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மேலும் இதுகுறித்த விவாதம் இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்காது என்றே கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இந்தப் பிரச்சினை இந்தச் சூழ்நிலையிலும் தொடர்ந்து உச்சநீதிமன்றத்தினுடைய விசாரணையில் இருந்து வருகிற காரணத்தால் மேற்கொண்டு இதனுடைய விவாதம் தொடருவது சரியல்ல என்று நான் கருதுகிறேன். எனவே, மேற்கொண்டு இந்த விவாதம் வேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. உரிமைப் பிரச்சினை.

வரவு-செலவுத் திட்டம் பற்றி ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களை ஒளி-ஒலி அமைப்புகள் வெளியிடாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராசன் அவர்கள் நிதிநிலை அறிக்கை பற்றி தான் நேற்று முன்தினம் தெரிவித்த கருத்துக்கள், மற்ற கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தெரிவிக்கப்பட்டிருந்தும் கூட—தான் தெரிவித்த கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை என்று, தன்னுடைய உரிமை பறிக்கப்பட்ட வகையில் இதுபற்றி அவையில் எழுப்ப வேண்டுமென்று என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி நான் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் எழுத இருக்கிறேன். எழுதி அவர்களிடத்திலிருந்து பதில் பெற்று அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினையில் என்ன செய்யலாம் என்பதை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி 1-ன் கீழ்........

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) கோயம்புத்தூர், திருப்பூர் பகுதிகளில் இந்து முஸ்லீம் அமைப்புக்களைச் சார்ந்தவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்களையொட்டிச் சிலர் கொலையுண்டது மற்றும் காயமுற்றது தொடர்பாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைவர் அவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அடுத்ததற்குப் போய்விட்டேன். உட்காருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கவில்லை. அதாவது, தயவுசெய்து, நீங்கள் எதுபற்றியும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிற பிரச்சினையை நான் வந்து........

டாக்டர் தே. குமாரதாஸ் : இது ஒரு சென்ஸிட்டிவ் இஷ்யூ.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொண்டுவந்திருக்கிற பிரச்சினையை........ (குறுக்கீடு) தயவு செய்து அமருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இது முக்கியமான செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சொல்லுங்கள். டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : கோயம்புத்தூரிலே வால்போஸ்டர் அடித்துக் கொலை பண்ணுகிறான். காலையில் இந்து முன்னணிக்காரனைக் கொல்கிறான். சாயந்திரம் ஒரு முஸ்லீம் சாகிறான். தொடர்ச்சியாக ஐந்து முறை கத்திக்குத்து நடந்திருக்கிறது. இது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதுபற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்க வேண்டுமா, வேண்டாமா? திடீரென்று எப்படிச் சொல்ல முடியும்? என்னுடைய அறையிலே நீங்கள் என்னைச் சந்தித்தீர்கள். அப்போது, இது பற்றி அவையில் எழுப்ப இருக்கிறேன் என்று தெரிவித்துவிட்டு நீங்கள் இங்கே தெரிவிப்பது சரியா, இல்லையா?

டாக்டர் தே. குமாரதாஸ் : நாங்கள் சொல்லவேண்டியதில்லை. தெரிந்த விஷயம் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தெரிந்த விஷயம் என்றாலும் நீங்கள், நான் இதைப்பற்றி எழுப்ப விரும்புகிறேன் என்று சொல்லியிருக்கவேண்டும் அல்லவா ?

டாக்டர் தே. குமாரதாஸ் : தொடர்ச்சியாகப் பாதகம் நடக்கிறது. இரண்டு பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். நான்கு மணிக்குக் கத்திக்குத்து நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கோயம்புத்தூர் நகரத்தில் நடைபெற்ற சம்பவங்கள், பொது முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் ஆகையால் முன்னறிவிப்பு கொடுக்கப்படாவிட்டாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு குமாரதாஸ் எழுப்பிய பிரச்சினைக்கு நான் பதில் அளிக்க விரும்புகிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர் நகரம், திருப்பூர் ஆகிய பகுதிகளில் முஸ்லீம்களுக்கும், இந்து முன்னணி அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் குறிப்பாக இந்து முன்னணி

பாரதீய ஜனதா கட்சிக்கும் இடையே நீண்ட நாட்களாக மனக் கசப்பு நிலவி வருகிறது. 26—8—1989 அன்று இரவு கோவை மேற்கு இந்து முன்னணி அமைப்பைச் சேர்ந்த திரு. வீரகணேஷ் என்பவர் சில முஸ்லீம்களால் கத்தியால் குத்தப்பட்டு 31-8-1989 அன்று இரவு மரணம் அடைந்தார். கடந்த 9-5-1991 அன்று அரசியல் முன்விரோதம் காரணமாக திரு. ஷேக் தாவூத், ஜிஹாத் கமிட்டி உறுப்பினர் என்பவர் பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. தங்கவேல் என்பவர் மீது மிளகாய்ப் பொடி தூவியதாகத் தெரிவிக்கப்பட்டு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து 15-7-1991 அன்று அடையாளம் தெரியாத சில விஷமிகளால் கரும்பாளையம் என்ற இடத்தில் ஷேக் தாவூத் கொலை செய்யப் பட்டார். இது தொடர்பாக திருப்பூர் காவல் நிலையத்தில் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 18-8-1991 அன்று ஜிஹாத் கமிட்டி அமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்து அமைப்பைச் சேர்ந்த சில முக்கிய நபர்களை, பரமசிவம், மூகாம்பிகை மணி, சம்பத், நாராயணன், சரவணன், சிவா, ரமேஷ், செல்வகுமார், ஆகியோரைப் பத்து நாட்களுக்குள் கொலை செய்வோம் என்ற வாசகத்துடன் கோயம்புத்தூர் நகரில் சுவரொட்டிகள் வெளி யிட்டனர்.

இதற்கிடையில் திரு. வீரகணேஷ் இறந்த இரண்டாம் ஆண்டு நினைவு நாள் 31-8-1991 அன்று கோயம்புத்தூர் ஆத்துப்பாலம் இடுகாட்டில் அவரது சமாதிக்குச் சென்று இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் அவரது நினைவுநாளை அனுசரித்தனர். அன்று எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழவில்லை. 5-9-1991, அதாவது நேற்று காலை 7-45 மணி அளவில் சிவா என்கின்ற சிவக்குமார்—இந்து முன்னணி தீவிரவாதியான இவரை, தன்னுடைய காய்கறிக் கடைக்கு நடந்து செல்கின்றபோது மெயின் ரோடில் 7, 8 நபர்கள் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர். மேலும் ஜியாவுதீன் என்பவர் சுமார் காலை 9-00 மணி அளவில் சிந் தாமணி மார்க்கெட் அருகில் கத்தியால் தாக்கப்பட்டு கவலைக்கு இடமான நிலைமையில் கோயம்புத்தூர் சி.எம்.சி. மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முற்பகல் 10–20

அதே போல, சுமார் 9-45 மணியளவில் திரு. முஸ்தான்ஜீர், 30 வயதுடையவர், அவரை 3 பேர் கத்தியால் குத்தியதனால் ஒரு தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மேலும், மதியம் 12-30 மணிக்கு, சமேஜா என்பவர் சிலரால் கத்தியால் குத்தப்பட்டு ஒரு தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் மதியம் 1-45 மணியளவில் திருச்சி ரோடில் திரு. நூர் அமீன், வயது 26 என்பவரை சிலர் கத்தியால் குத்தியதனால் அவர் சி.எம்.சி. மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று



11488



வருகிறார். இதற்கிடையில், காலை சுமார் 11-30 மணியளவில் இந்து முன்னணியைச் சேர்ந்த 300 பேர், பாரதீய ஜனதா கட்சி மாவட்ட பொதுச் செயலாளர், திரு. சம்பத் அவர்களின் தலைமையில் ஊர்வலமாக கோயம்புத்தூர் சி.எம்.சி. மருத்துவ மனையிலிருந்து ரெயில் நிலையம் வரை சென்றனர். ரெயில் நிலையம் அருகில் தனியார் பேருந்து ஒன்றின் மீது கல் எறிந்து சேதம் விளைவித்தனர். இதனால் 3 பயணிகளுக்கு லேசான காயம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கும்பலைக் கலைக்க போலீசார் குறைந்த பலப்பிரயோகம் "minimum force" பயன்படுத்தி உள்ளனர். அதே போல 1-30 மணியளவில் இந்து முன்னணியைச் சேர்ந்த 100 நபர்கள் கோயம்புத்தூர் சி.எம்.சி. மருத்துவமனையில் கூடி கல்லெறிந்து வன்முறையில் ஈடுபட்டனர். அவர்களையும் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கலையச் செய்தனர். அதில் ஒருவர் காயம் அடைந்து புறநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார். 5-9-1991 அன்று மாலை 4 மணியளவில் ஜாகிர் ஹுசேன், வயது 22 என் பவர் பி-1 காவல் நிலையத்தில் அவருடைய மூக்குக் கண்ணாடி கடையின் முன் அவரைச் சிலர் தாக்கிவிட்டு போய் இருப்பதாக புகார் கொடுத்து இருக்கிறார். அந்தப் புகாரின் மீதும் போலீ சாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது பலத்த போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது. போலீசார் ரோந்து சுற்றி வருகின்றனர். நிலைமை கட்டுக்கடங்கி இருப் பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இன்று நடந்த சம்பவங்களில் இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர், நேற்று நடந்த சம்பவங் களில் இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளனர். 5 முஸ்லீம்கள் தாக்கப்பட்டு காயம் அடைந்துள்ளனர். இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல்கள் வந்து உள் ளன. கொலை செய்யப்பட்ட சிவா என்கின்ற சிவக்குமாரி னுடைய உடலை எடுத்து அடக்கம் செய்வதற்கு தடுத்து நிறுத்தி யிருந்த இந்து முன்னணியினரை மாவட்ட ஆட்சித் தலைவர் அழைத்துப் பேசி சவ அடக்கம் அமைதியான முறையில் நடை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

கோயம்புத்தூரில் நடந்து முடிந்துள்ள இச்சம்பவங்கள் தொடர்ச்சியாக மீண்டும் இப்போது பெறப்பட்ட தகவல், கத்தியால் குத்தப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு கவலைக்கிடமான நிலையில் இருந்த திரு. ஜியாவுதீன் முகமது நேற்று இரவு 10–40 மணிக்குக் காலமானார். ஒரு தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்து திரு. ஏ. எம். சமேஜா என்பவரின் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது. இந்த சம்பவத்தில் முன்பே இறந்துபோன சிவா என்கின்ற சிவக்குமாரின் உடல் நேற்று இரவு 8 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. இது தொடர்பாக இந்து முன்னணியினர் கோவை மாவட்டத்திலேயுள்ள மேட்டுப் பாளையம், காரமடை ஆகிய ஊர்களில் இன்று பந்த் அறிவித் துள்ளனர். மேலும் நாளை கோவை நகரத்தில் பந்த்

V211, 3] N91-4.2

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 6

நடத்தப்போவதாகவும் அறிவித்துள்ளனர். கோயம்புத்தூரில் நேற்றைக்கு நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் கட்டுக் கடங்கியுள்ளன.

தமிழகத்தில் மதக்கலவரங்களை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது. மதக் கலவரத்தை யார் தூண்டினாலும், அதில் யார் ஈடுபட்டாலும் இந்த அரசு பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது என்பதனை திட்டவட்டமாக இந்த நேரத்தில் அறிவிக்க விரும்புகிறேன். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதுபோன்ற மதக் கலவரங்கள், வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க இந்த அரசு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

5. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)ன்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் இரண்டாம் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. க. அர்ச்சுனன்
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திருமதி ரமணி நல்லதம்பி
4. டாக்டர் தே. குமாரதாஸ்

6. வரவு செலவுத் திட்டம், 1991–92—பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991–92ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் பொது விவாதம். விவாதம் தொடங்குவதற்கு முன்னர் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய வேண்டுகோள் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பல உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள். எனவே, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் விவாதத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 6] (பேரவைத் தலைவர்)

மேலும், உறுப்பினர்கள் பேசுகிறபோது ஒவ்வொரு உறுப்பினரும் பேசிய பேச்சுக்கும் பதில் கூறுவதற்கே அதிக நேரம் எடுத்துக்கொண்டு கடைசியில் இந்த நிதிநிலை அறிக்கை பற்றியும் தங்கள் தங்கள் தொகுதி பற்றியும் பேச முற்படுகிற காரணத்தினால் அவர்களை அவைத் தலைவரால் நிறுத்தவும் முடியவில்லை, அவர்களை பேச அனுமதித்தாலும் நேரம் அதிகமாகிறது, என்கிற ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கு நான் தள்ளப்பட வேண்டியிருக்கிறது. எனவே, அவர்களை நிறுத்துகிறபோது அவர்கள் தொகுதிப் பிரச்சினையை பேசாமலும் முடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உறுப்பினர்கள் தள்ளப்படுகிறார்கள். எனவே, பேசுகிற உறுப்பினர்கள், பொதுவாக, நிதி நிலை அறிக்கையைப் பற்றி தங்கள் கருத்துக்களைக் கூறி அடுத்து தங்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றியப் பிரச்சினைகளை இங்கே எடுத்து விளக்கினால் அவர்களுக்கும் அது நன்றாக அமையும். அவையின் நேரமும் ஓரளவு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதாக கருதப்படும். எனவே, அதை கருத்திலே கொண்டு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்கிற நிலைமை—ஒருவேலை தனிப்பட்ட உறுப்பினர்களைப் பற்றியோ, அவர்களுடைய கட்சியைப் பற்றியோ சில பிரச்சினைகள்—எழுப்பப்பட்டிருந்தால் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு பேசுகிற உறுப்பினர்கள் அந்தந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் அதற்கு பதில் கூறுகிற முறையைப் பின்பற்றலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையிலே விவாதம் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தால் அலுவல்களை முடிக்க இயலாது. நமக்கு இருக்கிற இக்கட்டான ஒரு சூழ்நிலையைக் கருதி இந்த மாதம் 30ஆம் தேதிக்குள் நாம் இந்த பொது விவாதத்தையும் முடித்து, எல்லா மானியக் கோரிக்கை விவாதங்களும் முடிவு பெற வேண்டும். எனவே, நேரத்தின் அருமை கருதி உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும், முதலில் விவாதத்தைத் தொடங்குகிற பிரதான எதிர்க் கட்சியினுடைய உறுப்பினருக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்படுகிறது. மற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பத்து, பத்து நிமிடங்கள் தான். அந்த நேரத்திற்குள் அனைவரும் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி அவர்கள்.

*திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையில் பேசுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை, மாண்புமிகு

[திரு. ச. அழகிரி] [1991 செப்டம்பர் 6

நிதி அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு இருக்கின்ற பல்வேறு சிறப்பான அம்சங்களைப் போலவே, சிறப்பான அம்சங்களோடு ஆரம்பித்து இருக்கிறார்கள். அவரைப் போலவே ஒரு நீண்ட நெடிய நிதி நிலை அறிக்கையை நீண்ட நேரம் அவர்கள் நமக்கு அளித்தார்கள். சொல் வன்மையில் தடுமாற்றமே ஏற்படாத நிதி அமைச்சர் அவர்கள் பல நேரங்களில் தடுமாறக்கூடிய அளவுக்கு நிதி நிலை அறிக்கை நீண்டுகொண்டு இருந்தது. தனக்கு வயதாகவில்லை என்று அவர்கள் திட்ட வட்டமாக பல்வேறு நேரங்களில் மறுத்திருந்தாலும்கூட அந்தத் தடுமாற்றத்திற்குக் காரணம் வயதாகிவிட்டதோ என்கிற ஒரு அச்சம் நமக்கு வந்தது. உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கூட தராசு சரியாக இருக்கிறது. எடை கற்களும் சரியாக இருக்கின்றன. முள்ளும் சரியாக இருக்கிறது. ஆனால் தவறு எங்கோ நடக்கிறது. வயதாகிவிட்ட காரணத்தினால் அதை கவனிக்க முடியவில்லை என்று சொன்னார்கள்.

முற்பகல் 10.30

எனவே வயதான அமைச்சர்களுடைய செயல் திறனை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கு வயது ஆயிற்று என்று சொல்லவில்லை. வாங்குகிறவர்கள் வயதானவர்களாக இருப்பதால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதானது என்று எதற்காகச் சொல்கிறேன் என்றால் பித்தலாட்டங்களை எல்லாம் புரிந்து கொள்கிற வயது இல்லை என்பதற்காகச் சொன்னேனே தவிர, வேறல்ல. என்னோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடப்பாரா என்பது கூட எனக்குச் சந்தேகம்.

திரு. ச. அழகிரி : வயதான காரணத்தால் அவைகளை அடையாளம் காண முடியவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். எனவே வயதான அமைச்சர்களுடைய செயல் திறனை அதிகப்படுத்துவதற்காக பேரவைத் தலைவர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, வயதானவர்களைப் பற்றி இப்படி ஒரு தவறான, ஒரு மோசமான ஒரு கருத்தினை மாண்புமிகு உறுப்



1991 செப்டம்பர் 6] [பேரவைத் தலைவர்]

பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள் கிறேன். வயதானவர்கள் என்றால் அனுபவம் இருக்கிறது. நல்ல முறையில் செய்வார்கள் என்றுதான் அர்த்தமே தவிர வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச் சரவர்கள். அவரே பதில் சொல்லிவிட்டால் உங்களுக்குத் திருப்தி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைக்கும் வயதிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. நிதிநிலை அறிக்கை, அறிவுக்கும் ஆற்றலுக்கும்தான் பொருத்தமுடையது. வயது ஏற ஏறத்தான் அறிவும் ஆற்றலும் மிகும் என்பது உலக நிலைமை. Old is Gold என்பது தான் பழமொழி.

திரு. ச. அழகிரி : மலிவு விலை மது ஒழிப்பின் மூலமாக இந்த அரசு ஆயிரக்கணக்கான ஏழைத் தாய்மார்களுடைய அன்பைப் பெற்றிருக்கிறது. குறிப்பாக கிராமப் புறங்களில் மலிவு விலை மது ஒழிப்பின் காரணமாக ஒரு பொருளாதார சிரமைப்பே ஏற்பட்டிருக்கிறது, என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். புறநானூற்றுப் பாடல்களில்கூட, கிராமப்புறங்களில் அன்றைய காலங்களில் நிறைய மதுவை அவர்கள் பானைகளில் நிரப்பி, அதிலே ஏற்படுகிற நுரையினை காலை நேரங்களில் வீதிகளிலே வீசி எறிகிற நேரத்தில், ஏதோ தானியங்கள் சிதறிக் கிடப்பதாகக் கருதி பறவைகள் வந்து, அதிலே சிக்கிக் கொண்டதாக கூறப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு குடிகாரர்கள் நிறைந்துள்ள ஒரு சமுதாயத்தை, மதுவை ஒழித்ததன் மூலமாக நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் சீர்திருத்தம் செய்து, சிறப்பான முறையில் நம்முடைய சமுதாய அமைப்பை மாற்றி அமைத்ததற்காக எங்களுடைய இயக்கத்தின் சார்பாக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் அரிசியின் விலை ஏறி விடுமோ என்று கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்கள் எல்லாம் பரிதவித்தபோது அந்த விலையை அதிகரிக்காமல், முன்பு வழங்கிய அதே விலையில் அரிசியை வழங்கியமைக்காக மாண்புமிகு நிதி அமைச்சரவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற தீவிரவாதிகளினுடைய இயக்கங்களை, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, ஒரு காலத்தில் இங்கே தீவிரவாதிகள் இருக்கிறார்களா என்று கேட்டவர்களுக்கு, எவ்வளவு தீவிரவாதிகள் இங்கே இருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரத்தோடு எடுத்துச் சொல்லி, அவர்களை எல்லாம் கைது செய்து, இன்றைக்குச் சிறையிலே அடைத்தமைக்காக நான் தமிழக

அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவுக்குக் காவல் துறை கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, திறமையாகச் செயல்பட்டு, தீவிரவாதிகள் வேறு மாநிலங்களுக்கு ஓடுகிற அளவுக்கு அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிற காவல் துறைக்கு, அவர்கள் கேட்கிற தொகையை அரசு வழங்க வேண்டுமென்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஏனென்றால் மிக நவீனமான ஒரு காவல் துறையினால்தான் தமிழகத்தினுடைய சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியும். தங்கள் உயிரைப் பணயம் வைத்து அவர்கள் செயல்படுகிற காரணத்தால், காவல் துறைக்குத் தேவையான எல்லாவிதமான ஆயுதங்களையும் தமிழக அரசு வழங்க வேண்டும். அதற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் அவர்களுக்கு ஒதுக்கி இருக்கிற தொகையை, 10 கோடி ரூபாய்க்கு மேலாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10-35)

அடுத்ததாக விவசாயத்தைப் பொறுத்தவரை, பாசனத் துறையைப் பொறுத்தவரை நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற வீராணம் ஏரி 950 ஆண்டுகளுக்கு முன்பு வெட்டப்பட்ட ஒரு ஏரி. அதன் மூலமாக 96 இலட்சம் ஏக்கர்கள் விவசாயம் நடைபெறுகிறது. அந்த ஏரி மராமத்துச் செய்யப்படாமலேயே நீண்டகாலமாக இருந்து இருக்கிற காரணத்தால் அதனுடைய கொள்ளளவில் 37 சதவ்தம் இன்றைக்குக் குறைந்து இருக்கிறது. எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்த ஏரியை ஆழப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்வார்களேயானால் இன்றைக்கு அதனுடைய கொள்ளளவை, இப்போது இருப்பதைப் போல மேலும் 37 சதவீதம் தண்ணீர் தேக்கி வைப்பதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைக்கும். அதன் மூலம் 97 ஆயிரம் ஏக்கர்கள் பாசன வசதி பெறுகின்ற நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், தூர்வாராத காரணத்தினால், நிலத்தடி நீர் குறைந்து போகிறது. மேலே இருக்கிற களிமண், தண்ணீரை கீழே கொண்டு செல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் ஆக்கி விடுகிறது. எனவே ஏராளமான தண்ணீர், ஆவியாக மாறி, அதனால் நமக்கு தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுகிறது. என்பதனை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வீராணம் ஏரியை ஆழப்படுத்துவதற்கு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் சுரங்கம் தோண்டுகிற காரணத்தினால் நிலத்தடிநீர் ஏராளமான அளவிற்கு வீணாகப் போகிறது. எனவே அதற்கு ஒரு காம்பன்சேஷனாக அவர்கள் தங்களுடைய இயந்திரங்களின் மூலமாக அந்த தூரை வாருவதற்கு நமக்கு



உதவி செய்வார்களேயானால், நமக்கு அது ஏராளமான பலனைத் தரும் என்பதனை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல தொழில் துறையில் பல்வேறு புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென ஆளுநர் உரையிலே தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலே இரண்டாவது இடத்திலே இருந்த தமிழகம், இடைப்பட்ட ஆட்சிக் காலங்களில் தொழிற்துறையில் பின்நோக்கிச் சென்றதற்கு நல்ல சீரான நடவடிக்கைகள் எடுக்கப்படாதது தான் காரணம் என்பதை நாம் அறிவோம். எனவே முதல்வர் அவர்கள் தங்களுடைய செல்வாக்கை உபயோகித்து பல்வேறு புதிய திட்டங்களை தமிழகத்துக்குக் கொண்டுவர வேண்டுமென நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். புதிய தொழில்களை நாம் உருவாக்குகிற அதே நேரத்தில், இருக்கிற தொழிற்சாலைகள் சீராக இயங்கவும், மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகள் திறக்கப்படவும் நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். இன்றைக்கு, பின்னி தொழிற்சாலை மூடிக்கிடக்கிறது. ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை மூடிக்கிடக்கிறது. மால்கோ மூடப்பட்டு இருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளிலே 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். எனவே அந்தத் தொழிற்சாலைகளை திறப்பதற்கு ஒரு போர்க்கால நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். 25 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை தர வேண்டுமானால், ஆயிரம் கோடி ரூபாயை நாம் இன்றைக்கு முதலீடு செய்ய வேண்டிய நிலைமை. ஆனால் புதிதாக ஆயிரம் கோடி ரூபாய்க்கு நாம் எங்கே செல்வது? எனவே இந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான ஒரு நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு நேரங்களில் அமைச்சர்கள் இந்த தொழிற்சாலைகள் எல்லாம் திறக்கப்படும் என்று அறிவிக்கிறார்கள். ஆனால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. உதாரணமாக பின்னி தொழிற்சாலை சட்டத்துக்குப் புறம்பாக மூடப்பட்டு இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை அவர்கள் மூடுவதற்குச் சொல்கிற காரணம் புவனகிரியிலே கேஸ் கிடைக்கிறது. எனவே நாங்கள் அங்கே சாயப் பிரிவை கொண்டு போய் அங்கே அமைக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். நான் இந்த அவைக்கு ஒரு உண்மையைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். அந்த நிறுவனம் சொல்வதைப் போல புவனகிரியிலே எந்தவிதமான வாயுவும் கிடைக்கவில்லை. அங்கே ஓ.என்.ஜி.சி. என்ற அமைப்பின் பேரில் ஒரு கிணறு தோண்டப்பட்டது. ஆனால் அந்த கிணற்றிலிருந்து வாயு கிடைக்காத காரணத்தினால் அதை அவர்கள் 'சீல்' செய்து விட்டார்கள். எனவே கிடைக்காத ஒன்றை வைத்துக் கொண்டு

[திரு. ச. அழகிரி] [1991 செப்டம்பர் 6

அங்கே தொழிற்சாலையை நாங்கள் ஆரம்பிக்கப் போகிறோம் என்று அந்த நிறுவனம் சொல்வதை அரசு எப்படி ஏற்றுக் கொள்கிறது என்பதனை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். தொடர்ந்து புதிய......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, புவனகிரிக்கு பிராசஸிங் யூனிட்டை மாற்றக் கூடாது என்று ஒரு நபர் கமிஷன் ஒரு முடிவு சொல்லி இருக்கிறது. அதை இந்த அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது.

(முற்பகல் 10-40)

திரு. ச. அழகிரி: புவனகிரியில் வாயு கிடைக்கவில்லை என்ற ஒரு காரணத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக, பின்னி நிர்வாகத்தை ஏற்றுக் கொள்கிற நிர்வாகங்கள் அந்தத் தொழிற்சாலையினுடைய சொத்துக்களை விற்பதற்கான முயற்சிகளை மேற் கொள்ளுகிறார்களே ஒழிய அந்த தொழிற்சாலையை நடத்த வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்குக் கிடையாது.

இலட்சுமி தொழிற்சாலையின் நிர்வாகத்தை ஏற்றபோது பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை விற்றார்கள். அதன் பிறகு ஹாடோ தலைமையில் நிர்வாகம் வந்த போது 120 ஏக்கர் நிலத்தை அவர்கள் விற்றார்கள். இன்றைக்கு, வந்துள்ள நிர்வாகமும் எதையாவது விற்றுவிட வேண்டும் என்று முயற்சி செய்கிறார்களேயொழிய தொழிலை நடத்த வேண்டுமென்பதிலே அவர்களுக்கு ஆர்வம் கிடையாது. ஒரு காலத்திலே அங்கே 15,000 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அந்தத் தொழிற்சாலையில் இன்றைக்கு 8,000 தொழிலாளர்கள்தான் வேலை செய்கிறார்கள். அந்த அளவிற்கு ஆள் குறைப்பு ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஒரு நாளைக்கு 75,000 மீட்டர் என்ற உற்பத்தி இன்றைக்கு ஒன்றரை இலட்சம் மீட்டர் என்ற அளவிற்கு அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது தொழிற்சாலைக்கு நஷ்டம் ஏற்படுமா என்பதை தயவு செய்து அரசு உணர்ந்து பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே மூடிக் கிடக்கிற தொழிற்சாலைகளையெல்லாம் திறப்பதன் மூலம் ஏராளமான தொழிலாளர்களுக்கு நாம் வேலையை அளிக்க முடியும். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவு செய்து புதிய தொழிற்சாலைகளைத் திறக்க முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



1991 செப்டம்பர் 6] (திரு. ச. அழகிரி)

அதேபோல நிதிநிலை அறிக்கையில் பல்வேறு பொருள்களுக்கான விலை குறைக்கப்பட்டிருக்கிறது. மஞ்சளுக்கான விலை குறைக்கப்பட்டிருக்கிறது. மிளகாய் பொடிக்கான விலை குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பொருளுக்கு வரியை விதிக்கும் போது உடனடியாக விலை ஏறிவிடுகிறது. ஆனால் இது போன்று பொருள்களுக்கு வரியைக் குறைப்பதன் மூலம் உடனடியாக விலை குறைகிறதா என்பதை தயவு செய்து சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன். ஏனென்றால் இந்த வரி குறைப்பால் விலையை அவர்கள் குறைப்பதே கிடையாது. வியாபாரிகள் விலைக் குறைப்பை எப்படியாவது தவிர்த்து விடுகிறார்கள். எனவே அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரி குறைந்த பொருள்கள் மீது விலை குறைப்பு ஏற்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

தொழிலாளர்களுக்கு ஏராளமான நன்மைகளை நம்முடைய அரசு வழங்கியிருக்கிறது. நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற போது தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தச் சலுகைகள் மனதிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கிறது. ஆனால் அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. கடலூரிலும், வேலூரிலும் தொழிலாளர்களுக்கான நீதிமன்றம் திறக்கப்படுவதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை அந்த நீதிமன்றங்கள் திறக்கப்படவில்லை. சென்னையிலே இருக்கிற இரண்டாவது, மூன்றாவது நீதிமன்றங்களிலும் இதுவரையில் நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. அப்படியிருக்கும்போது ஏழை தொழிலாளர்களுடைய கோரிக்கைகள், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி ஆகியவற்றை எங்கே சென்று அவர்கள் பெறுவார்கள் என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாயை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே இதை விட ஒரு சிறந்த திட்டம் இந்தியாவில் வேறு எங்குமே ஏற்பட்டிருக்க முடியாது. அவ்வளவு அற்புதமானதொரு திட்டம் அது. கிராமப்புறங்களில் இருந்து வந்திருக்கிற எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு, கிராமப்புறங்களில் மக்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பது நன்றாகப் புரிகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில் பல்வேறு கிராமங்களுக்கு வந்த காரணத்தால் கிராமப்புறங்களில் உள்ள சாலைகளின் நிலை மக்கள் குடிநீருக்குக் கஷ்டப்படுவது, தெரு விளக்குகள் எரியாத சூழ்நிலை ஆகியவற்றையெல்லாம் அவர்கள் உணர்ந்து பார்த்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் தர வேண்டும் என்ற அந்தத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் நான் இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்

தப்பட வேண்டும். இன்றைக்கு நம்முடைய அரசு எல்லாவற்றிற்குமே ஏராளமான நிதியை ஒதுக்கியிருக்கிறது. எவ்வளவு நிதிநிலைச் சிரமம் இருந்தாலும் கூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகவும் தாராள மனபான்மையோடு, ஏழை எளிய மக்களுக்குச் சேர வேண்டிய விஷயங்களில் ஏராளமான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டும் கூட, ஏழை எளிய மக்களுக்கு அந்தப் பணம் சென்று அடைகிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 10-45)

சாலைகள் போடுகிற போது 50 சதவீதம் தான் கலெக்ஷன் செய்கிறார்கள். அதற்குத் தேவையான பொருள்களை, அதாவது ஜல்லி, தார் போன்றவைகளையெல்லாம். மீதி 50 சதவீதத்தை அவர்கள் சேர்ப்பது கிடையாது. அதற்குப் பெயரே ஷார்ட் கலெக்ஷன் என்றுதான் பெயர். அப்படிச் செய்கிற போது அந்த சாலையின் தரம் தாழ்ந்து போய்விடுகிறது.

அதேபோல, குடிநீர்ப் பிரச்சினை என்று வருகிறபோது, கைப்பம்பிற்கான கைப்பிடி ரூ. 300-க்கு வாங்கியிருப்பதாகக் கணக்குகள் எழுதப்படுகிறது. அதற்காக ஒரு விசாரணை கூட இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, நம்முடைய திட்டத்தினுடைய பெரும் பகுதி, மக்களுக்குச் சென்று விடாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது அரசியல்வாதிகளுக்குப் போகிற காரணத்தால்தான் சாதாரண மக்கள் எந்தப் பயனையும் அடையமுடியவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, (Administrative reform) வேண்டும். நிர்வாகச் சீர்திருத்தம் வேண்டும். நிர்வாக சீர்திருத்தம் என்பது மாவட்டங்களைப் பிரிப்பதன் மூலமோ, வட்டாரங்களைப் பிரிப்பதன் மூலமோ நடைபெற்றுவிடுவது கிடையாது. நிர்வாகச் சீர்திருத்தம் என்பது அரசு போடுகிற சட்டம், அதனுடைய திட்டங்கள் எல்லாம் கடைசி மட்ட மக்களுக்குச் சென்று அடைகிற வகையில் இருக்கவேண்டுமென்று நான் முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

நிர்வாகச் சீர்திருத்தத்தை மேம்பாடு செய்வதற்காக மூத்த செயலாளர் ஒருவர் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்படும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். என்னுடைய தனிப்பட்ட கருத்து, நிர்வாகம் சீர்படாமல் போவதற்குக் காரணமே, இந்த அரசு அதிகாரிகள் தான். தாங்கள் என்ன நினைக்கிறார்களோ அதை செயலாற்ற வேண்டுமென்றுதான் அவர்கள் விரும்புகிறார்கள். எனவே, இந்தப் பேரவையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் நிர்வாகச் சீர்திருத்தத்தைச் செம்மைப் படுத்துவதற்கு, கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் பிரதிநிதிகளை அல்லது எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளை, ஊராட்சி மன்றங்களின் தலைவர்களைக் கொண்ட ஒரு கமிட்



டியை அமைத்து, எப்படி இந்த நிர்வாகத்தைச் சீரமைப்பது என்பதைப் பற்றி அவர்கள் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக, தெரு விளக்கு இருக்கிறது. தெரு விளக்கு போடுவதைப் பற்றி ஒரு சட்டத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு ஆண்டுக்கு இரண்டு தெரு விளக்குகளைத் தான் போடலாம் என்று உள்ளாட்சித் துறை கூறுகிறது. இந்த உத்தரவைப் போட்ட அதிகாரிகள் தன்னுடைய வீட்டில் ஆண்டுக்கு இரண்டு விளக்குகள்தான் போடுவாரா என்று தயவு செய்து உணர்ந்து பார்க்க வேண்டும். நான் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராக இருந்தபோது, இந்தத் தெரு விளக்குப் பிரச்சினையால் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறேன் என்பதை கனத்த இதயத்தோடு முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்க ஆசைப் படுகிறேன். ஏனென்றால் விளக்கு நின்று போவதும், அல்லது பியூஸ் போவதும் நம்முடைய கையில் இல்லை. ஆனால், இரண்டு விளக்குகளுக்குப் பிறகு அவர்கள் ஊராட்சியில் இருந்து புது விளக்குகளைப் பெறுவது முடியாது. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் கிராமப் புறங்களில் இருக்கும் மக்களுக்கு எப்படி நாம் தெரு விளக்குகளைத் தர முடியும் என்பதை தயவு செய்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல, குடிநீர்ப் பிரச்சினை.

இன்றைக்குக் குடிநீர் வாரியம் தவறான தகவல்களையே நமக்குத் தந்து வருகிறது. ஒரு கிராமம், தன்னிறைவு பெற்று இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கிராமத்திற்குச் சென்று நாம் பார்ப்போமேயானால், ஒரு கைப்பம்ப் இருக்கும். என்ன ஐயா, ஒரு கைப்பம்ப்பு தானே இருக்கிறது, எப்படி இதை நீங்கள் தன்னிறைவு பெற்ற கிராமம் என்று சொல்கிறீர்கள் என்று கேட்டால், ஏதாவது ஒரு குடிநீர் ஆதாரம் இருந்தால் போதுமானது, அதை தன்னிறைவு பெற்ற கிராமமாக நாங்கள் கருதுகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஒரு கிராமத்தில் அரிஜன காலனி இருக்கிறது. ஏராளமான ஜாதி இந்துக்கள் வாழ்கிற தெருக்கள் இருக்கின்றன. அப்படி இருக்கிறபோது, ஒரு கைப் பம்ப் இருந்தால் எப்படி அது தன்னிறைவு பெற்ற கிராமமாக இருக்க முடியும் என்பதை குடிநீர் வாரிய அதிகாரிகள் உணர்ந்து பார்க்க வேண்டும்.

அடுத்ததாக நாம் திட்டமிடுகிறபோது, கிராமத்தின் முழுமைக்கு நாம் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். ஒரு குடிநீர்த்தொட்டியை நாம் கட்டுகிறோம். ஆனால், விநியோக முறை என்று வருகிறபோது, நான்கு பைப்புகள்தான் தருகிறோம். அல்லது அதிகபட்சம் போனால் 8 பைப்புகள்தான் தருகிறோம். ஆனால், அந்த கிராமத்தில் 8 பைப்புகள் போதுமா என்பதை நாம் தயவுசெய்து உணர்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நாம்

(திரு. ச. அழகிரி) [1991 செப்டம்பர் 6

எவ்வளவு பெரிய விஷயம் செய்தாலும் கிராமப்புற மக்களுக்குச் சென்றடையப் போவதில்லை. சாதாரண குடிநீர், தெரு விளக்கு, சுத்தமான சாலை வசதி இவைகளைத்தான் இந்த அரசிடமிருந்து அந்த மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இன்றைக்கு கோடிக்கணக்கான மக்கள் இந்த அரசுக்கு வாக்களித்தார்கள். எதையும் எதிர்பார்க்காமல் வாக்களித்தார்கள். கண்ணை முடிக்கொண்டு வாக்களித்தார்கள். ஆனால், அவர்கள் நம்மிடமிருந்து கேட்பதெல்லாம் குடிப்பதற்குத் தண்ணீர் தான். இன்றைக்கு வரையிலும் நம்மால் அதைக் கொடுக்க முடியவில்லை. என்னுடைய கணக்குப் பிரகாரம் 25 சதவீதம் தான் குடிநீர் விஷயத்தில் நாம் தன்னிறைவு பெற்று இருக்கிறோம் 75 சதவீதம் இல்லையென்று என்னால் உறுதியாக சொல்ல முடியும். என்னுடைய தொகுதியில் அதைப் போன்ற பிரச்சினை இருக்கிறது. எல்லா இடத்திலும் இதே பிரச்சினைதான் இருக்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்தக் குடிநீர்ப் பிரச்சனையிலே இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சாலைப் பிரச்சினை. அதற்கான முதல்வர் அவர்கள் நல்லதொரு திட்டத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகளைச் செப்பனிடுகிற பொறுப்பை தனியாரிடம் ஒப்படைத்து அது வெற்றிகரமாக நடைபெற்றால் தமிழகம் முழுவதும் அதுபோல் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது மிகமிக வரவேற்கப்படக்கூடிய விஷயம். இதுவரையில் எந்த ஆட்சியாளரின் கவனத்திற்கும் வராத ஒன்றை இந்த அரசு கொண்டுவநதிருப்பதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், ஊராட்சி ஒன்றியங்களில் சாலைகளே கிடையாது. மிக முக்கியமான நகரங்களை இணைக்கிற, மாவட்டங்களை இணைக்கிற பகுதிகளில்தான் சாலைகள் இருக்கிறதே தவிர, உள் கிராமங்களில் சாலை வசதி என்பது இன்று வரையிலும் கிடையாது. எனவே, சாலை வசதி மேம்பாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருத்த கவனத்தோடு மனதில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 22 நிமிடம் ஆகி விட்டது. முடித்து விடுங்கள்.

திரு. ச. அழகிரி : தலைவர் அவர்களே, அடுத்ததாகச் சொல்ல விரும்புவது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் எல்லாவற்றையும் அவர்களே முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால், மின்சாரத் துறையிலும்,



1991 செப்டம்பர் 6] [திரு. ச. அழகிரி]

போக்குவரத்துத் துறையிலும் ஏற்பட்டிருக்கிற நிதிநிலைப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து முடிவு செய்யவேண்டுமென்று பெரிய அதிகாரத்தை எங்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். அதற்கான காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் புரிகிறது. இந்த இரண்டு துறைகளிலும் அதிகமான வரிவிதிப்புக்கு அவர்கள் ஏதோ ஒரு முயற்சியை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். நான் தயவுசெய்து அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த வகையிலே வரி விதிப்பு என்பதே வேண்டாம். நீங்களே பேசியிருக்கிறீர்கள் கோயம்புத்தூரில். 3 பேருந்துகள் வைத்திருக்கிறவர்கள் 15 இலட்சம் ரூபாய்க்கு வீடு கட்டுகிறார்கள். ஆனால், நாம் 13 ஆயிரம் பேருந்துகளை வைத்துக்கொண்டு 55 கோடி ரூபாய் நட்டத்தில் இயங்குகிறோம் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். இந்த விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது சோவியத் ரஷ்யாவில் கார்ப்பசேவ் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். ஆனால், முதலமைச்சர் இன்னும் ஒரு முடிவுக்கு வராமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் ஆறு மாதம் கால அவகாசம் கொடுத்து அதற்குள் போக்குவரத்துத் துறை இலாபத்தில் இயங்கவில்லை என்றால் தயவுசெய்து அவற்றையெல்லாம் நீங்கள் தனியாருக்குக் கொடுத்து விடுங்கள். அப்படி கொடுப்பதன் மூலமாக நிதிநிலையில் இருக்கிற பிரச்சினைகள் குறையும். ஏராளமான வருவாயும் நமக்குக் கிடைக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக தனிப்பட்ட முறையில் எனக்கு ஒரு மனக்குறை இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அனுமதித்தால் நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களும், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய தொகுதியில் சுற்றுப்பயணம் செய்வதாக அறிவித்து இருந்தார்கள். அன்றைக்கு நானும் ஒரு அரசு நிகழ்ச்சிக்காக நாள் முழுவதும் அவர்களுக்காக காத்து இருந்தேன். ஆனால், என்ன காரணத்தாலோ இரண்டு அமைச்சர்களுமே அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. மாறாக அரசு நிகழ்ச்சி இருந்த அந்த ஊரைத் தாண்டி வேறு ஒரு இடத்தில் கட்சி நிகழ்ச்சியில் அவர்கள் கலந்து கொண்டார்கள். அது எனக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. அந்த நிகழ்ச்சியை அவர்கள் புறக்கணித்து விட்டார்கள். இந்த ஆட்சி வர வேண்டும் என்பதற்காக நாங்கள் எல்லாம் மிகவும் சிரமப்பட்டவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[1991 செப்டம்பர் 6

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நான் தெரிவிக்க விரும்புவது அரசு நிகழ்ச்சி என்பது எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. அப்படி அரசு நிகழ்ச்சி நடப்பதாக எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் அப்படிப்பட்ட அரசு நிகழ்ச்சிக்கு எங்களிடம் அனுமதி பெறப்பட்டாதா என்றால், அனுமதி பெறப்படவும் இல்லை. அப்படிப்பட்ட நிகழ்ச்சி பற்றி தெரியாத நிலையில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை. எனவே, அந்த நிகழ்ச்சியில் நாங்கள் கலந்து கொள்ளாத காரணத்தால் மனவருத்தம் ஏற்பட்டது என்று உறுப்பினர் சொல்வது முறையாகாது.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன், அமைச்சர் அவர்களுக்கு அறிவிக்கவேண்டியது யார் என்று எனக்கு புரியவில்லை. அதிகாரிகள் அவர்களுக்கு அறிவித்து இருக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் அமைச்சர்களுக்கு அறிவிக்காமல் எந்த அதிகாரியும் எந்த நிகழ்ச்ச்சியையும் ஏற்பாடு செய்திருக்க முடியாது. ஒரு பெண் தலைமையில், அதுவும் இந்த பெண்ணுடைய தலைமையில் இந்த ஆட்சி வர வேண்டும் என்பதற்கு நீங்கள் எல்லாம் எவ்வளவு பாடுபட்டிருக்கிறீர்களோ அந்த அளவுக்கு நானும் பாடுபட்டிருக்கிறேன். அப்படி இருக்கிறபோது அரசினுடைய கொள்கைகளை அறிவிக்கக்கூடிய ஒரு அருமையான சந்தர்ப்பத்தை இரண்டு அமைச்சர்களும் இழந்துவிட்டார்கள் என்பதற்காக நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 19-55

அடுத்ததாக மின்சாரத் துறை பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உத்தரபிரதேசத்தில் ஒரு மாதத்திற்கு 200 கோடி அளவுக்கு மின்சாரத் திருட்டு நடைபெறுவதாக ஒரு பத்திரிக்கை குறிப்பு சொல்கிறது. அதேபோல டெல்லியில் ஒரு மாதத்திற்கு பத்து கோடி ரூபாய்க்கு மின்சாரத் திருட்டு நடந்திருப்பதாக ஒரு பத்திரிக்கை குறிப்பு சொல்கிறது. நம்முடைய அமைப்பிலும் மின்சாரத் திருட்டுக்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே அவைகளை கண்காணிக்க வேண்டும். அவைகளை தவிர்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

' Efficiency ' என்பது முக்கியம். இன்றைக்கு விஜயவாடாவிலே பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் இயந்திரங்களை வைத்துக் கொண்டு 100 சதவீதம் மின்சார உற்பத்தியை அவர்கள் செய்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் 50 சதவீத மின்சார உற்பத்தியைத்தான் நம்மால் அதே இயந்திரங்களை வைத்துக் கொண்டு செய்ய முடிகிறது. விஜயவாடாவிலே மட்டும் 10



9] செப்டம்பர் 6] [திரு. ச. அழகிரி]

சதவீதம் மின்சார உற்பத்தி. நமக்கு மட்டும் 50 சதவீதம் மின்சார உற்பத்தி என்பது நமக்கு ஒரு மாபெரும் இழப்பாகும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிற நம்முடைய அந்த இயந்திரங்களை வைத்துக் கொண்டு, 100 சதவீதம் மின்சார உற்பத்தியை ஏற்படுத்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆராய்வார்களானால், பெருமளவிலான மின்சாரப் பற்றாக்குறையை நம்மால் போக்க முடியும். இதற்கு அவர்கள் ஒரு முத்தரப்புக் குழுவைக்கூட நியமிக்கலாம். அரசுத் துறை அதிகாரிகள், தொழிலாளர்கள், ஆகியோர் அடங்கிய முத்தரப்புக் குழுவை நாம் நியமித்து ஆலோசனை நடத்துவோமானால், மின்சார உற்பத்தியை நம்மால் அதிகப்படுத்த முடியும் என்பதை நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் இண்டோ—ஆஸ்திரேலியன் சிஸ்டத்தில்கீழ் 210 மெகா வாட் திறன் கொண்ட ஒரு புதிய மின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்திருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதை நம்முடைய தமிழ் நாட்டுக்குக் கொண்டு வரவேண்டும். குறிப்பாக நெய்வேலி பகுதிக்கு கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையிலே என்னைப் பேச அழைத்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சின்னசாமி. உறுப்பினர்கள், நான் முதலிலே விடுத்த வேண்டுகோளை கவனத்திலே வைத்து, அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் முடிக்கக் கேட்டுக் கொள்கிறேன். திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... ... — (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்திற்கு, அனுமதி பெறாமல் நடத்தப்பட்ட நிகழ்ச்சிக்கு விசாரணையை ஏற்படுத்தி ஏன் அப்படி நடத்தப்பட்டது என்பதைக் குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

[1991 செப்டம்பர் 6

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அவர்களுக்குத் தகவல் தரப்படாமல், அவர்களுடைய முன் அனுமதி பெறாமல், அவர்களுடைய பெயர்களும், அந்த நிகழ்ச்சியிலே போடப்பட்டு இருக்கிறது. எனவே தான், தான் கலந்துகொள்ளவில்லை என்று சொன்ன விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அத்தோடு நிற்காமல், அவர்கள் அது குறித்து விசாரணை செய்ய இருக்கின்றேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

*திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்துக்களை—நீங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடித்துக் கொண்டு, நீங்கள் அழைப்பு மணியை அடிப்பதற்கு முன்னாலேயே என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன் என்ற என்னுடைய உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை குறித்து பல்வேறுபட்டவர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகளிலே கூட இது ஒரு நீளமான பட்ஜெட் என்று எல்லாப் பத்திரிகைகளும் கருத்துக்களை வெளியிட்டன. இது நீளமான பட்ஜெட் என்பதை விட அனுபவமிக்க நிதியமைச்சர் அவர்களும், அறிவுக்கூர்மை மிக்க முதலமைச்சர் அவர்களும், சேர்ந்து அவர்களுடைய யோசனையினாலே தயாரிக்கப்பட்ட இந்த பட்ஜெட் நீளமான பட்ஜெட் அல்ல, ஆழமான பட்ஜெட் என்பதைச் சொல்லி, நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-00

இந்தப் பேரவையில் நான் இரண்டாவது தடவையாக வருவதற்கு எனக்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் கரூர் தொகுதி வாக்காளப் பெரு மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒரு பெருமையான சூழ்நிலையில் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகியிருக்கிறோம், ஏன் என்று சொன்னால், கர்நாடகத்தில் சிறை வைக்கப்பட்டு இருக்கிற காவிரித் தாயும், இலங்கையிடம் அடகு வைக்கப்பட்டிருக்கிற கச்சத் தீவையும் மீட்பேன் என்று போர்ப் பரணி பாடிக்கொண்டிருக்கிற ஒருபுற நானூற்றுத் தாயாக விளங்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சி செலுத்துகிற ஒரு நல்ல சூழ்நிலையில் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளே வந்திருக்கிறோம் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



[திரு. ம. சின்னசாமி] [1991 செப்டம்பர் 6

இந்த நிதி நிலை அறிக்கை பற்றி எதிர்க்கட்சியிலே கூட குறை சொல்லலாம் என்று சில பேர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் மலிவு விலை மது ஒழிப்பின் காரணமாக அரசாங்கத்திற்கு ரூ. 322 கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அரசு எல்லோரிடத்திலும், எல்லா பொருட்களுக்கும் வரிகளைப் போட்டு ஏமாற்றுவார்கள். நாம் இதை சாக்காக வைத்துக்கொண்டு பொது மக்களைப் போய்ச் சந்திக்கலாம் என்று ஆசையோடு காத்துக் கொண்டிருந்த எதிர்க்கட்சிகள் எல்லாம் கூட இன்றைக்கு இதை குறை சொல்ல முடியாத அளவிற்கு அவர்கள் துருவித்துருவிப்பார்த்து விட்டு இந்த நிதி நிலை அறிக்கை என்பது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் எடுத்ததற்கெல்லாம் மத்திய அரசை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறது என்று சமாதானம் சொல்கிற ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையாக இந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

இந்த அறிக்கையில் மிக முக்கியமாக விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ' உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ' என்று வள்ளுவர் பாடியதற்கு இன்றைக்குத்தான் நமமுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு ஒரு அர்த்தத்தை கொடுத்திருக்கிறார்கள். காரணம் இன்றைக்கு விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் அதிலே மிச்சம் இல்லாத காரணத்தால் சில பேர் இன்றைக்கு விவசாயத்தை விட்டுவிட்டு நகரத்திற்குப் போகின்ற ஒரு அவல சூழ்நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது. அந்த நிலையை மாற்றுவதற்காகத்தான் விவசாயத் துறைக்கு, விவசாயிகளுக்கு ஏராளமான சலுகைகளை இன்றைக்கு இந்த அரசு அறிவித்திருக்கிறது. அதிலே மிக முக்கியமானது, வருமான வரி விலக்கு என்று சொல்லியிருப்பதை எல்லா விவசாயிகளும் பாரட்டுகிறார்கள். காரணம், இன்றைக்கு 5 ஏக்கர் வைத்து விவசாயம் செய்பவர்களுக்கும், 50 ஏக்கரில் விவசாயம் செய்பவர்களுக்கும் எந்தவித மிச்சமும் கிடையாது. அப்படிப்பட்ட சலுகைகள் அளித்து, விவசாயிகளுடைய அரசாக இந்த அரசு திகழ்வதைப் பார்க்கும்போது, எதிர்க்கட்சியிலே இருக்கின்ற விவசாயி கூட பாராட்டுகிற ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை தமிழ்நாட்டிலே நாம் காண முடிகிறது. அதிலே என்னுடைய மேலான ஒரு யோசனையை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மராட்டிய மாநிலத்தில் ' காட்டன் கார்ப்பொரேஷன் ' என்று ஒரு கார்ப்பபொரேஷனை வைத்து. அதிலே பருத்தி சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்குக் கடன் தருகிறார்கள். பருத்தியை அவர்களே கொள்முதல் செய்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அதைப்போல நம்முடைய தமிழகத்திலேயும் விவசாயிகளுக்கான ஒரு கார்ப்பொரேஷனை உருவாக்க வேண்டும். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் இருக்

இன்ற போது ஒரு வாரியத்தை உருவாக்குவதற்கு ஏற்பாட்டைச் செய்தார்கள். அதாவது 'Farmers Economic Development Corporation' என்று விவசாயப் பெருமக்களையும் அரசு அதிகாரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து ஒரு யோசனையைச் செய்தார்கள். அதற்குப் பிறகு அவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அந்த யோசனை அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது. அவருடைய அடியொற்றி ஆட்சி நடத்துகின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அப்படிப்பட்ட ஒரு வாரியத்தை உருவாக்கி, அதிலிருந்து விவசாயிகளுக்கு கடன் கொடுத்தும், சலுகைகள் கொடுத்தும், விளை பொருள்களை அந்த கார்ப்பொரேஷனே கொள்முதல் செய்தும், கட்டுப்படியாகக் கூடிய விலையும் கொடுத்தால், இன்னும் விவசாயிகளுக்கு நாம் அளித்த சலுகையோடு, அந்த சலுகைகளும் சேர்ந்தால், விவசாய உற்பத்தி பெருகும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் சொட்டு நீர்ப் பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாதாரணமாக நடவு முறையில் ஒரு 5 ஏக்கருக்கு பாய்ச்சுவது என்று சொன்னால், சொட்டு நீர் பாசனத்தில் 50 ஏக்கருக்கு நீர் பாய்ச்சுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சொட்டு நீர் பாசனம் என்பது விவசாயிகளுக்கு புதிராக இருக்கிறது. என்னுடைய கரூர் தொகுதியிலே ஒரு கூட்டுறவு நீர் ஏற்றுப் பாசன சங்கத்தின் மூலம் ஒரு 10, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்தார்கள். ஆனால் விவசாயிகள் எப்போதுமே நடவு நீர் பாசனத்திற்கு பழக்கப்பட்ட விவசாயிகள். அதைத் தெரிந்து கொள்ளாமல் அதை அப்படியே விட்டு விட்டார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற கடுமையான சூழ்நிலையில் சொட்டு நீர் பாசனத்தை ஊக்கப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு நம்முடைய அரசு அவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

அதை விட இஸ்ரேல் நாட்டில் 'டிரிப் இர்ரிகேஷன்' செய்கிறார்கள். அதாவது வேரிலேயே தண்ணீரைப் பாய்ச்சி அங்கே விவசாயத்தைப் பெருக்குகிறார்கள். இந்தச் சொட்டு நீர் பாசனத்தை தமிழகத்திலே நாம் நல்ல முறையில் செயல்படுத்தினால் எல்லாப் புஞ்சை நிலங்களிலேயும் பெரும்பான்மையான புஞ்சை நிலங்களிலே தென்னையை வளர்க்க முடியும். நம்முடைய தமிழகமும் கேரளத்திற்கு இணையாக இருக்கும் என்பதை நம்முடைய அரசு கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாசனம். இன்றைக்கு காடுகளை எல்லாம் அழித்துக் கொண்டு வருகின்றனர். மழை அளவு குறைத்துக் கொண்டே வருகிறது. நிலத்தடி நீர் கீழே போய்க்கொண்டு இருக்கிறது.





இன்னும் பத்தாண்டு காலத்திற்கு இந்த நிலை நீடித்தால் தமிழகத்தில் குடிநீர் பிரச்சினை ஒரு பெரிய சவாலாக அரசுக்கு இருக்கும் என்பதை இன்றைய சூழ்நிலையில் நாம், நாட்டிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். பத்தாண்டுகளுக்கு முன்னாலே ஒரு கிராமத்தில் ஒரு அடிபைப் இருந்தது என்றால் இன்றைக்கு அதே ஊரிலே 5 அடிப்பைப்புகள் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு நிலத்தடி நீர் வெகுவாக குறைந்து வருகிறது. ஆகவே நம்முடைய அரசு இந்த அபாயத்தையும் தீர்க்கின்ற வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது. இன்னும் ஏரிகள், குளங்கள் போன்றவற்றை ஆழ அமைத்துக் கொடுத்து நிலப்பரப்பில் தண்ணீரை தேக்கி நிலத்தடி நீரை அதிகப்படுத்துவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நதிகள் இணைப்பு என்பது எல்லா அரசாங்கத்திலேயும் பேச்சு அளவிலே இருக்கிற விஷயம். புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து எல்லா ஆறுகளும் இணைக்கப்பட வேண்டும் என்று சொல்லி முதலில் மகாநதியையும், வைகை ஆற்றையும் இணைக்க வேண்டும் என்று ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போலவே மின்சாரம். நம்முடைய கவிஞர் கண்ணதாசன் அவர்கள் அழகாக ஒரு முறை சொன்னார். வேடிக்கையாக, சம்சாரம் இல்லாமல் இருக்கலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது என்று. அந்த அளவிற்கு மின்சாரத்தினுடைய முக்கியத்துவத்தை அவர் கவி நடையிலே குறிப்பிட்டாலும் இன்றைக்கு அதனுடைய தேவை என்ன என்பது தெரிகிறது. மின்சார உற்பத்தி குறைவாக இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அதனுடைய பயன்படுத்தும் தன்மை அதிகமாகிக்கொண்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனியார்களுக்கு மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை கொடுக்க வேண்டும் என்று ஒரு அருமையான திட்டத்தை சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதை கால தாமதம் இல்லாமல் அப்படிப்பட்ட தனியார்களுக்கு கொடுத்து மின் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடங்குளம் மின் உற்பத்தியை விரைவில் செய்து தர வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை மத்திய அரசுக்கு வலியுறுத்தி விரைவுபடுத்தி சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் நம்முடைய மின் தேவை ஓரளவிற்கு பெற முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் உண்டு என்றாலும் சில விவசாயிகளுக்கு இல்லாமல் இருக்கிறது. எல்.டி. சர்விசிலே விவசாயம் செய்கிறவர்களுக்கு இலவச மின்சாரம் கிடைக்கிறது. அதே நேரத்தில் சங்கங்கள் மூலமாக விவ

சாயம் செய்கிற எச்.டி. சர்வீஸ் மூலமாக விவசாயம் செய்கிறவர்களுக்கு அந்த சலுகைகள் இல்லை. அதிலும் சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே அதனைக் கருத்தில் கொண்டு உயர் அழுத்தம் மின்சாரத்திலே இருந்து மின்சாரம் பெறுகின்ற விவசாயிகளுக்கும் இந்த சலுகை அளிக்க வேண்டும்.

என்னுடைய கரூர் தொகுதியைப் பொறுத்த வரையில் புகளூர் நதி நீரேற்று நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கம் என்ற சங்கம் இருக்கிறது. அதிலே ஏறத்தாழ 2 ஆயிரம் ஏக்கர் வரை இந்த எச்.டி. சர்வீசிலே விவசாயம் நடைபெறுகிறது. அவர்களுக்கு இந்த சலுகைகள் இல்லை. ஆனால் பக்கத்திலே இருக்கிற விவசாயிகளுக்கு இந்த சலுகை கிடைக்கிறது. ஆகவே நம்முடைய அரசு எச்.டி. சர்வீஸ், எல்.டி. சர்வீஸ் என்று பார்க்காமல் எல்லா விவசாயிகளுக்குப் இலவச மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து உள்ளாட்சி துறையில் நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் திட்டத்தை அறிவித்து இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்தைப் பார்த்து மற்ற மாநிலங்களெல்லாம் பின்பற்றுகிற அளவிற்கு ஒரு புரட்சிகரமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த திட்டத்தில் குடிநீர் வசதிக்கும், சாலை வசதிக்கும், பள்ளிக் கட்டிடங்களுக்கும் முன் உரிமை கொடுத்து இருக்கிறார்கள். அதே நேரத்தில் நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக கிராமப்புறங்களில் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லுகிறபோது, தாய்மார்கள் எங்களுக்கு கழிப்பிட வசதி வேண்டும் என்று எல்லா ஊர்களிலும் கேட்கிறார்கள். ஆகவே பெண்களுக்கென்று கழிப்பிடங்களை கட்டும் திட்டத்தை கிராமங்களிலே இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல விவசாயிகள் எல்லா ஊர்களிலும் எங்களுக்கு களம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே அதையும் இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 1'-10

அடுத்து சாலை வசதிகளுக்கு ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாலையை தனியார் எடுத்துக்கொண்டு போட்டால் அவர்களே அந்த வரியை வசூலித்துக்கொண்டு அந்தப் பணத்தை திரும்பப் பெறலாம் என்ற அருமையான திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்தி அதை ஒரு பைலட் ஸ்கீமாக தஞ்சை மாவட்டத்திலே அதை முதன் முதலிலே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் நிச்சயமாக வெற்றி பெறும். எல்லா மாவட்டங்களுக்கும் அந்தத் திட்டத்தை அறிமுகப்



படுத்த வேண்டும். சில ஊர்களில் பொது மக்களே சேர்ந்து ஒரு சொசைட்டி அதாவது ஒரு கார்ப்பரேட் பாடி அமைத்துக் கொண்டு நாங்கள் பாலங்கள் கட்டுகிறோம், ரோடுகள் போடுகிறோம் என்றெல்லாம் இன்றைக்கு விரும்புகிறார்கள். ஆகவே எல்லா ஊர்களுக்கும் அந்த திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கரூரிலிருந்து திருச்சி செல்லுகின்ற சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. அதை போக்க வேண்டும். காரிலோ, பஸ்ஸிலோ செல்லுகிறோம் என்று சொன்னால் கடுமையான உடல்வலி ஏற்படுகிறது. பயணத்தை தவிர்த்துவிடுகின்ற மோசமான சூழ்நிலை இருப்பதாலே, கரூர்—திருச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயராலே இருக்கின்ற சத்துணவு திட்டம் சிறப்பாக நம்முடைய ஆட்சியிலே நடைபெறுகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் நம்முடைய சத்துணவு அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்து எந்தெந்த ஊர்களிலே சத்துணவுக் கூடங்கள் சேரழிந்து இருக்கின்றனவோ— முதலமைச்சர் அவர்களின் சார்பாக அந்த சத்துணவுக் கூடங்களை தனியார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தார்கள். பல ஊர்களில் தொழில் அதிபர்கள், கொடை உள்ளம் கொண்டவர்கள் எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, சத்துணவுக் கூடங்களைக் கட்டித் தருவதற்கும், இருக்கின்ற சத்துணவுக் கூடங்களைப் பராமரிப்பு செய்வதற்கும் முன் வந்திருக்கிறார்கள். அங்கெல்லாம் சென்று எல்லா சத்துணவு மையங்களையும் அதிலே சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுத் துறை இப்போது சமூகநலத் துறையோடு இருக்கிறது. அதிலே கல்வித் துறையும் கலந்து இருக்கிறது. உள்ளாட்சித் துறையும் கலந்து இருக்கிறது. இந்த சத்துணவுத் திட்டம் மிகப்பெரிய புரட்சிகரமான திட்டமாக இருப்பதால் சத்துணவுக்கு என்று தனியாக துறையை ஏற்படுத்தி இன்னும் அந்தப் பணியை விரிவுபடுத்த வேண்டும், வேகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நம்முடைய இதய தெய்வம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்த நாளை சத்துணவு நாள் என்று அறிவித்து கொண்டாட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்களிலே இன்றைக்கு இரண்டு ஆணையர்கள் இருக்கிறார்கள். ஒருவர் ரெகுலர் பி.டி.ஓ. என்றும் இன்னொருவர் ஏ.பி.டி.ஓ., அதாவது திட்டத்

கமிஷனர் என்றும் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு பேர்களுக்கும் அங்கே வேலை இல்லை. ஆகவே அரசுக்கு நிதி நெருக்கடி இருப்பதால் அதிலே ஒரு ஆணையரை எடுத்துவிட்டு, இருக்கின்ற ஒரு ஆணையரை வைத்து வேலை வாங்கினால் வேலையும் ஒழுங்காக நடக்கும், அதே நேரத்தில் அரசுக்குப் பணம் மிச்சமாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், இதைப் பரிசீலிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து பேரூராட்சியிலே இருக்கின்ற நிர்வாக அதிகாரிகள் எல்லாம் தனிக்காட்டு ராஜாக்களாக இருக்கிறார்கள். அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொன்னாலும் கேட்பதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொலைவில் இருக்கிறார்கள். பேரூராட்சி நிர்வாகிகள் எங்கோ இருக்கிறார்கள். ஆகவே அவர்களைக் கண்காணிப்பதற்கு அவர்களுக்கு இம்மீடியட் சுப்பீரியர், அதாவது அங்கே இருக்கின்ற சப்-கலெக்டர் அல்லது பி.டி.ஓ. விற்கு அந்த அதிகாரத்தை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்தில் இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரை சமுதாயத்தில் இருக்கின்ற சகல தரப்பினரும் சந்தோஷப்படுகின்ற அளவிற்கு ஒரு அருமையான நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உ. பலராமன் அவர்கள்.

*திரு. உ. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.15 மணி

இந்த ஆட்சியின் முதலாவது வரவு-செலவு அறிக்கையை அளிக்கிறபோது ஒரு தடுமாற்றம் இருக்கும் என்று தமிழகத்திலே எதிர்பார்த்தவர்களுக்கு எல்லாம் ஏமாற்றம் அளிக்கின்ற வகையிலே நிதி நிலையில் ஒரு குழப்பமான நிலை இருந்தாலும், இந்தியாவில் அந்த நிலை மொத்தத்தில் இருந்தாலும் தமிழகத்திலே எல்லாவற்றையும் ஓரளவுக்கு சரிக்கட்டி ஒரு நிறைவான, மன நிறைவான ஒரு நிதிநிலை அறிக்கையை இந்த அவையின் முன் வைத்த நிதி அமைச்சர் அவர்களை உளமார நான் பாராட்ட [illegible] கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆட்சி கருவில் இருக்கும் ஒரு குழந்தைக்கு தாயின் மூலம் சத்துணவு அளிப்பதிலிருந்து முதியோர் ஓய்வு ஊதியம் பெறுகிற வரை அவர்களுக்கு ஒரு வசதியை செய்து தந்து இருப்பது பாராட்டத் தகுந்தது ; வரவேற்கத் தகுந்தது. இந்த ஏழை எளிய மக்களுக்கு எவ்வளவு செய்தாலும் தகும் என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏன் என்றால் இந்த ஆட்சிக்கு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிற மக்கள் எல்லாம் சேர்ந்துதான் வாக்கு அளித்து, இங்கே தமிழகத்திலும், மத்தியிலும் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்திற்கும், வாழ்வுக்கும் அளிக்கப்படுகிற எந்தத் திட்டமும் போற்றத் தகுந்தது ; பாராட்டத் தகுந்தது ஆகும். குறிப்பாக நீங்கள் அளித்து இருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையில் ஏழை எளியவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகளில் புதிதாக படிக்க இயலாத குழந்தைகளுக்கு பள்ளிச் சாராக் கல்வியை ஏற்படுத்தி அதன் மூலம் வேலை அற்ற இளைஞர்களுக்கு உதவி செய்யவும், காய்கறி விற்கிற, பூ விற்கிற பெண்களுக்கு வங்கிக் கடன் அளிக்கவும், ஒரு கருணையோடு ஏற்பாடு செய்து இருக்கிறீர்கள். மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற தன்மையில் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கியிருக்கிறீர்கள். குடும்பத்திற்கு ஒரு வீடு, பெண்களுக்கு வேலை வாய்ப்பு போன்ற திட்டங்களில் அன்போடு அணுகி இருக்கிறீர்கள். அதே சமயத்தில் காவிரிப் பிரச்சினையிலும், கச்சத்தீவு பிரச்சினையிலும் மிகப் கண்டிப்பாக நடந்து கொண்டு இருக்கிறீர்கள். இந்த காவேரி நீர்ப் பிரச்சினையில் எது எப்படி இருந்தாலும் அனைத்துக் கட்சியின் ஒத்தக் கருத்தாக செயல்படுகிறது என்பதை இந்த அவையின் மூலம் எந்த நேரத்திலும் நிலை நாட்டுகிற வகையில் செயல் பட வேண்டுமென்று உங்கள் மூலமாக அனைவரையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்திற்காக, தமிழ் மக்களுக்காக, தமிழகத்தினுடைய நலத்திற்காக தமிழக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. வாழப்பாடியார் அவர்கள் தன்னுடைய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ததற்காக இந்த அவை பாராட்டு தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே போல் கச்சத்தீவில் மிகக் கராறாக ஒரு கருத்தை, அது சர்வதேசப் பிரச்சினையாக இருந்தாலும் தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்து வைத்ததற்காக பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். கச்சத்தீவு இரு நாட்டின் ஒப்பந்தப்படி அவர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தாலும் ஏற்கனவே நடந்த ஒப்பந்தத்தை அவர்கள் உதாசீனப்படுத்திய காரணத்தால் நாம் அந்தத் தீவை திரும்பப் பெறுவதில் தவறில்லை என்பதையும்

நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தினுடைய ஒட்டு மொத்த கருத்தாக தமிழக கடலோர மீனவர்களை காக்கின்ற செயலில் தமிழகத்து அனைத்துக் கட்சியும் ஒத்தக் குரலில் செயல்பட வேண்டும் என்ற என்னுடைய அவாவினை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.20 மணி.

இங்கே பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பாக, சென்னைக்கு, சென்னையினுடைய வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்டிருக்கிற தொகை, நான் எதிர் பார்த்ததை தவிட அதிகமாகவே இருக்கிறது. ஆனால், இந்தத் தொகையை எப்படி செலவிடப் போகிறீர்கள் என்பதற்கு பல திட்டங்களைச் சொல்லியிருந்தாலும்; குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்று திட்டங்கள், சுற்றுச் சூழல் மேம்பாடு திட்டங்கள், மின் வழங்கு ஏற்பாட்டின் சீரமைப்பு, மழை நீருக்கு வடிகால்கள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கழிவுப் பொருட்கள் அகற்றும் பணி முதலிய அனைத்துக்கும் சேர்த்து 5 ஆண்டு காலத்திற்கு 1,2..0 கோடி ரூபாய் என்று நிரணயித்து இருக்கிறார்கள். இந்த மாநகராட்சிக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை ஒரு நிபுணர் குழுவின் மூலம் செயல் படுத்துவதுதான் சாலச் சிறந்தது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினர், சென்னையில் ஒரு மாநகராட்சி மன்ற உறுப்பினராகத்தான் செயல்பட முடிகிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காலையிலேயிருந்து மாலை வரை வருகிற பிரச்சினைகள் அனைத்தும், சாக்கடை அடைப்பு, விளக்கு எரியாமை, குப்பை வாராமை என்கிற தன்மையிலேதான் இருக்கின்றன.

இங்கே பல உறுப்பினர்கள் அதிகாரிகளைப் பற்றிய குமுறலை வெளியிட்டார்கள். நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை. அதிகாரிகளை அழைத்து நான் பேசியபோது, மிக்க நகைச்சுவையோடு ஒரு காட்சி நடந்தது. வீதிகளிலே இருக்கிற மாட்டுச் சாணங்கள் வாரப்படவில்லை, ஏனென்று மாநகராட்சி ஊழியர்களைக் கேட்கிறபோது, அங்கே வடிகால் வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் இருந்தார்கள். அவர்கள் சொன்ன விளக்கத்தை இந்த அவைக்கு நினைவு படுத்துவது சாலப் பொருத்தம் என்று கருதுகிறேன். மாடு போடுகிற சாணத்தை ஏன் வாரவில்லை என்றால், அது சிறுநீரும் கழிக்கிறது ; அது வடிகால் வாரியத்தைச் சார்ந்தது ; ஆகவே, மெட்ரோ வாட்டர் அதிகாரிகள்தான் அதை பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறான். ஈரமாக இருந்தால் அவன் எடுக்கமாட்டானாம். காய்ந்து இருந்தால் கார்ப்பரேஷன் எடுக்குமாம். ஈரமாக இருந்தால் அதை மெட்ரோ வாட்டர் ஆட்கள்தான் எடுக்க வேண்டுமாம். இரண்டு அதிகாரிகளும் முடிவுக்கு வர முடியாமல் இட்டக்கட்ட 20 நிமிடங்கள் இதைப் பேசினார்கள். என்





இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், சென்னை நகரத்தினுடைய சீர்கேட்டிற்கு அதிகாரிகள் பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பதற்காகத்தான். குடிநீர் வழங்கு தலைப் பற்றி நீங்கள் தெரிவித்து இருக்கிறீர்கள். குடிநீரில் சாக்கடை நீர் கலக்காமல் ஒரு நாள் வந்தால் அது சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுகின்ற நாளாகவே இருக்கும். குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளை நான் அழைத்துச் சென்று வீதி வீதியாகக் காட்டி வருகிறபோது பல இடங்களிலே குடிநீரிலே புழுக்கள் வந்தன. சாக்கடை நீரும் வந்தது. அந்த மக்கள் அதைக் குவளையில் பிடித்துத் தந்தார்கள். அதிகாரி தந்த பதிலை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எவ்வளவு நேரம் நீங்கள் இந்த பம்ப்பை அடிக்கிற போது இப்படி சாக்கடை நீர் வருகிறது ; இரண்டு மணி நேரம். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு சரியாக வருகிறதா ; ஓரளவு தெளிந்து வருகிறது. அப்படியானால் இரண்டு மணி நேரம் நீங்கள் அடியுங்கள். தண்ணீர் தெளிவாக வந்த பிறகு நீங்கள் பிடித்து காய்ச்சிக் குடியுங்கள் என்றார். இது அதிகாரி என் முன்னிலையில் சொன்ன வார்த்தை. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நீங்கள் ஒதுக்குகிற பணத்தை ஒழுங்காகச் செலவு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். நேற்றைக்கு முன் தினம் மாநகராட்சிக் கட்டிடத்திற்குச் சென்ற போது பார்த்தேன். நிறைய பேர் மகிழ்ச்சியாக இருந்தார்கள். இவர்களுடைய மகிழ்ச்சிக்கு என்ன காரணம் என்று கேட்டேன். புதிதாக திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன, சாலை வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி என்று. ஆகவே, ஒப்பந்தக்காரர்களும், உயர் அதிகாரிகளும் மெத்த மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் செய்கின்ற திட்டங்கள் என்பது இந்த மக்களுக்குப் பயன்படத் தகுந்ததாக இருக்குமா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பூங்கா நகர்த் தொகுதியில், குறிப்பாகப் புளியந்தோப்பு பகுதியில் வருஷத்திற்கு மூன்று மாதங்கள், ஒரு நாள், இரண்டு நாட்கள் மழை பெய்தால் ஐந்தாறு அடி தண்ணீர் நிற்கும். அந்தத் தண்ணீர் இருக்கும் பகுதியில் சிக்கியிருக்கிற மக்கள் வெளியேறுவதற்கு மிக்க சிரமப்படுகிறார்கள். அவர்கள் வீட்டை விட்டும் வெளியே போக முடியாமல், முதல் மாடியிலே குடியிருந்து கொண்டு இருப்பவன் இறங்கி வருவதற்கும் இடைஞ்சலாக இருந்து கொண்டு ஒரு வார காலமாக இப்படி அவதிப்படுகிறார்கள். ஆகவே, தாழ்வான பகுதியாக இருக்கிற அந்தப் பகுதியை மேடாக ஆக்க வேண்டுமென்பதற்காகவும், அந்த மழை நீர் போவதற்கு உண்டான

[திரு. உ. பலராமன்] [1991 செப்டம்பர் 6

வழி என்ன என்பதற்காகவும் அதிகாரிகளைக் கேட்ட பொழுது அவர்கள், ''ஓட்டேரி நல்லா'', ''பக்கிங்ஹாம் கால்வாய்'' போன்ற பகுதிகளில் தூர் வாரினால்தான், இந்த மழை நீர் போகும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த அரசை நான் கேட்டுக் கொள்வது, ஒரு போர்க்கால அடிப் படையில் அங்கு தூர் வார வைப்பது நலம் என்று நான் கருது கிறேன். அப்படியில்லை என்று சொன்னால் மழைக் காலத் தில் அந்தப் பகுதிக்கு பத்து படகுகளை விட வேண்டிய அவசி யம் வரும். அது பி. அண்ட் சி. மில் சுவற்றை ஒட்டி இருக் கின்ற பகுதி. பி. அண்ட் சி. மில்லிலேயே ஐந்து அடி தண் ணீர் நிற்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்தத் தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்காமல் இருப்பதற் கும், அந்தப் பகுதி வாழ் மக்கள் ஆரோக்கியத்தோடு வாழ் வதற்கும் அதற்குத் 'தனியான கவனத்தைச் செலுத்தி; அந்த ஓட்டேரி நல்லா, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகிய பகுதிகளைத் தூர் வாருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சென்னையில், பல இடங்களில் சாக்கடை நீர் வீதிகளில் ஓடுவதைப்பற்றி சொன்னார்கள். மலேரியா கொசுக்கள் கால்வாய் முழுக்க நிரம்பியிருக்கின்றன. அந்தக் கால்வாயில் சிலர் தவறுதலாக கழிவுநீர் சாக்கடை பைப்பை கனெக்ஷன் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் கவனத்திற் கொண்டு, சென்னையை அழகு படுத்துவதற்கு முன்னால் கொஞ்சம் சீர்படுத்துங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வரியைக் குறைத்திருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, இந்த ஏழை எளிய மக்களில் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கின்ற என்னுடைய தொகுதியில், அதிக பட்சம் வேலை வாய்ப்பு அளிக்கின்ற ஒரு தொழில் எவர்சில்வர் பாத்திரம் செய்கின்ற தொழிலாகும். அந்தத் தொழிலுக்கு நீங்கள் 4 சதவிகித வரியாகக் குறைத்திருப்பதற்காகத் தனியாக, சிறப் பான நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

இந்த மாநகராட்சிப் பிரச்சினையையும், மற்றதையும் சந்திக்கின்ற அதே வேளையில் 32 இலட்சம் இளைஞர்கள் வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களில் 10 இலட்சம் இளைஞர்களுக்குப் பல்வேறு முறைகளில் நீங்கள் வேலை வாய்ப்பை அளித்திருக்கின்றீர்கள். அதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1991 செப்டம்பர் 6] [திரு. உ. பலராமன்]

தொழிலாளர்களைச் சார்ந்த குடும்பங்கள் மெத்த சிரமப் படுகின்றன. இந்த ஆண்டு அவர்கள் தங்களுடைய குழந்தை களைக் கல்விச் சாலைகளில் சேர்ப்பதற்கும் பல துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குடும்பங்களைக் காக்கின்ற மிகப் பெரிய பொறுப்பை, உடனடியாக அவர்களைக் காக்கின்ற பொறுப்பைத் தமிழகத்தினுடைய முதல்வர் கருணை யோடு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளை வைக்கிறேன்.

இன்னொன்று. பூங்கா நகர் என்கின்ற இந்தப் பெயரை மாற்றி விட்டால் கூட சிறப்பாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சாக்கடையில்தான் அங்கே பூக்கடையும் இருக்கிறது. மாநகராட்சிக் கட்டிடமும், சென்ட்ரல் இரயில் நிலையமும் அங்கே தான் இருக்கின்றன. சதர்ன் இரயில்வே தலைமை அலுவலகமும் அங்கே தான் இருக்கிறது. எல்லாப் பெரிய நிலையங்கள் இருந்தாலும், சகிக்க முடியாத தொகுதி யாக இருக்கிறது. அதை மாற்ற நீங்கள் முயற்சியுங்கள் என்கிற வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தி னுடைய இதயங்களில் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற மறைந்த தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தப் பகுதியில் வாழ்ந்த போதுதான் வறுமையின் நிலையை

முற்பகல் 11-30

முழுமையாக உணர்ந்திருந்தார்கள். ஆகவே, அவர் வாழ்ந்த பகுதிக்கு, இந்த அரசு நன்றிக் கடனாக அந்தத் தொகுதிக்கு எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்டி, பூங்கா நகர் என்கிற பெய ரினை மாற்றி, எம்.ஜி.ஆர். நகர் என்ற பெயரினை வைத்து, புதிய உத்வேகத்தோடு, அந்தத் தொகுதிக்கு பல நல்லத் திட்டங் களை இந்த ஆட்சி செயல்படுத்தவேண்டும் என்கிற என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த குழப்பநிலை யிலும், ஒரு தெளிவான அறிக்கையினைத் தரவல்லது தமிழகம், அதன் நிதியமைச்சர், அதன் முதலமைச்சர் என்கிற ஒரு சரித்திரச் சான்றினை, பேருண்மையை, பாராட்டத்தக்க நிலையை எடுத் ததற்கு உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். ஏழை எளிய மக்களுக்காகச் செயல்படுத்துகிற எந்தப் பணிக்கும் காங்கிரஸ் பேரியக்கம் துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னால் என்னுடைய கட்சி யின் உறுப்பினர், '6 மாதங்கள் அரசு போக்குவரத்துக் கழகங்கள் அமைச்சர் பொறுப்பிலே விட்டு, அது சரியாக இயங்கவில்லை என்றால், அவற்றை உடனடியாகத் தனியாருக்கு விடுங்கள்' என்று தெரிவித்த அந்தக் கருத்தை நான் கண்டிக்கிறேன். ஏனென்றால், அது காங்கிரஸ் கட்சியின் கொள்கை இல்லை என்பதை மட்டும் நான் கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக் கிறேன், நன்றி.

[1991 செப்டம்பர் 6

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

*டாக்டர் மு. அம்மமுத்து பிள்[illegible] : மாண்பு[illegible] பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, [illegible]தியத் துணைக் கண்டத்தின் தென்கோடி முனையில், மூ[illegible]டும் முத்த[illegible]பாளராகவ, கன்னியாகுமரி தொகுதியில், என்னை ஒரு [illegible]யழகத்தின் பிறகு ஒரு சட்டமன்ற உறுப்பினராக உருவாக்கிய [illegible] புரட்சித் ஒளி விளக்கு, எங்கள் இதய தெய்வம், தமிழக முதல்[illegible] உ[illegible]ய தலைவி அவர்களை வணங்கி என்னுடைய கன்னி ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு ச[illegible] உறுப்பினர்களே, முதலில் எனக்கு வாக்களித்த [illegible]க்க[illegible] பெரு மக்களுக்கு என் நன்றியைக் கூறிக் கொள்கிறேன். அகி[illegible] ந்திய அண்ணா தி.மு.க. தேர்தல் அறிக்கை[illegible] கூறப்ப[illegible]ள்ள வாக்குறு திகளின் மறு வடிவமே, 1991-92 [illegible] ஆ[illegible]ன் நிதிநிலை அறிக்கையாகும். ஏழைத் தாய்மார்களின் [illegible]ரத் துடைக்க தமிழக முதலமைச்சர் அறிவித்த முதல் ஆ[illegible]யா மலிவு விலை மதுக் கடைகள் மூடுதல் மூலம் அரசுக்கு நிதிப் [illegible]ற்றாக்குறை ஏற்பட்ட போதிலும், புதிதாக அதிக வரி விதிக்காமல், நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்திருப்பது பாராட்டிற்குரியது; வியக்கத்தக்கது. நிரந்தரமான தரிசு, சுரம்பு நிலங்களில் சாகுபடி செய்வதற்குரிய புதிய திட்டம் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இத் திட்டத்தில் 8 மாவட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதோடு, எங்கள் மாவட்டமாகிய குமரி மாவட்டத்தையும் சேர்க்க வேண்டுகிறேன்.

உலக வங்கி உதவியுடன் அணைக்கட்டு பாதுகாப்புத் திட்டம் ரூ 4,185 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என அறிவித்த இத் திட்டத்தில் எங்கள் மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை அணைக்கட்டைச் சேர்த்ததற்காக, குமரி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, அத்துடன் பெருஞ்சாணி அணைக்கட்டை யும் சேர்த்திடுமாறு வேண்டுகிறேன்.

காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் சமூக நலக் காடு வளர்ப்பு திட்டமும், மேற்கு மலைத் தொடர் மேம் பாட்டுத் திட்டமும் தொடர்ந்து செயல்படும் என நிதிநிலை அறிக்கையில் உள்ளது. இது வரவேற்கத் தக்கது. ஒரு புறம் கடலும், மறுபுறம் மலையும் சூழ்ந்துள்ள எல்லையாகக் கொண்ட கன்னியாகுமரித் தொகுதிக்கு இத் திட்டத்தின் மூலம் நன்மை பயக்கும் எனக் கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் நடப்பாண்டில் புதிதாக 20 கால்நடை மருந்தகங்கள் அளிக்க உள்ளன. அதில் இரண்டு கால்நடை மருந்தகங்கள் என் தொகுதியில் உள்ள பின்தங்கிய மக்கள் வாழும் பகுதிக்கு தொடங்க தாங்கள் உதவிட வேண்டுகிறேன்.



1991 செப்டம்பர் 6] [டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை]

: இந்த நிதிநிலை அறிக்கையில் தஞ்சாவூர், இராமநாதபுரம்,
சிதம்பரம், கன்னியாகுமரி, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். ஆகிய 5
மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கு கூட்டுறவுமுறையில், தேசியக்
கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் ரூ. 11 கோடி
செலவில் ஒருங்கிணைந்த கடல் மீனள மேம்பாட்டுத் திட்டம்
வரவேற்கப்பட வேண்டியது. மீனவ சமுதாய மக்கள் எனது
தொகுதியில் கூடுதலாக வாழும் பகுதியான கன்னியாகுமரி,
ஆரோக்கியபுரம், சின்னமுட்டம், கோவளம், லீபுரம் ஆகிய பகுதி
களுக்கும் வழங்க வேண்டுகிறேன். வறுமைக் கோட்டிற்குக்
கீழ் வாழும் மீனவ சமுதாய மக்களுக்கு ரூ. 3.2 கோடி செலவில்
இரண்டாயிரம் வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கும்
திட்டம் வரவேற்கத்தக்கது. மீன் தொழிலில் ஈடுபடும்போது,
இறக்க நேரிடும் மீனவர்களுக்கு ரூ. 15 ஆயிரத்திலிருந்து ரூ. 21
ஆயிரமாகக் கூட்டியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இந்த அரசு உதவி கிடைக்க உடனடியாக, மீன
வர்களுக்குக் கால தாமதமின்றி, உத்தரவை வழங்க வேண்டுமென
வேண்டுகிறேன்.

ஊரக வளர்ச்சிக்கு முக்கிய அங்கமான சிறப்புத் தன்னிறைவுத்
திட்டத்தின் கீழ் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி
ரூபாய் வழங்குவதன் மூலம், கிராம மக்களின் அடிப்படைத்
தேவைகளான கிராமச் சாலைகள், தெரு விளக்குகள், தொடக்கப்
பள்ளிக் கட்டிடங்கள், பாசன ஏரிகள் புதுப்பித்தல், சத்துணவு
மையங்கள் கட்டுதல் போன்றவை வரவேற்கத்தக்கன. தமிழ்
நாட்டை விரைவான தொழில் வளர்ந்து செழிக்கும் மாநிலமாக
ஆக்குவதற்கு, ஊக்க உதவித் தொகை உடனுக்குடன் வழங்குதல்,
கடன் வழங்குதல், போதுமான அளவிற்கு அடிப்படை வசதிகள்
செய்து கொடுத்தல், தொழில் மேம்பாட்டிற்கு உகந்த, தொழில்
வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் அமைந்த வரி ஏற்பாட்
டினைப் பின்பற்றுதல், ஏற்றுமதி வாய்ப்புமிக்க தொழில்களை
உருவாக்குதல் போன்ற கொள்கைகள் மிகவும் வரவேற்கத்
தக்கன.

முற்பகல் 11-35

சென்னையிலிருந்து குமரி செல்லும் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டத்தை மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்த தமிழக அரசினை மனப்பூர்வமாக பாராட்டு கிறேன்.

குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற அடிப்படைத் திட்டம் மூலம்
நடப்பு ஆண்டில் 1.22 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும்
திட்டம் பாராட்டுக்குரியதாகும். ஆதி திராவிட மக்களுக்கு
50,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமென அறிக்கையில் உள்
ளது. மீனவர்களுக்கு 2,000 வீடுகள் கிராம கூட்டுறவு வீட்டு
வசதி சங்கம் மூலம் 3,000 வீடுகள், கட்டிக் கொடுக்கும்

திட்டங்கள் சிறப்புடையதாகும். மாண்புமிகு வீட்டுவசதி வாரியத் துறை அமைச்சர் என் தொகுதிக்குக் கூடுதல் ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டுகிறேன். அனைவர்க்கும் நல்வாழ்வளிப்பது இவ்வரசின் குறிக்கோள் என்ற கருத்தின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு சுகாதார நிலையம் எனக் கணக்கிட்டு அமைப்பது வரவேற்கத்தக்கது. மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் எனது தொகுதியில் இத்திட்டத்தில் சங்கரம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையம் இருப்பு குலசேகரபுரத்திலும், வடக்கு தாமரைக் குளம் ஆகிய இடங்களில் இந்த நிதி ஆண்டில் ஆரம்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன். எனது தொகுதியில் இதுகாறும் கிடப்பில் கிடக்கும் உலக்கை அருவித் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவதன் மூலம் எனது தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை முற்றிலும் நீக்கப்படும் என நம்புகிறேன்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''.

கல்வியைக் கசடறக் கற்ற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். தொல்காப்பியம் நல்கிய தொல்காப்பியருக்கு ஆசானாக விளங்கிய அதங்கோட்டாசானையும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களையும், கலைத் துறைக்குக் கலைவாணரையும், ஆற்றலுக்கும் அறிவுத் திறனுக்கும் உரிய சேக்கு தம்பி பாவலரைத் தந்த மாவட்டம் எங்கள் குமரி மாவட்டம். இத்தனை ஆன்றோர்களும், சான்றோர்களும் இருந்தும் ஒரு அரசு கலைக் கல்லூரியோ, அரசு பொறியியற் கல்லூரியோ கிடையாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு கல்லூரியைத் திறப்பதற்கு வழி வகைகள் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இயற்கை ரப்பர் அதிகமாகக் கிடைக்கும் எனது தொகுதியில் தேர்வாளை ஒன்றியத்தில் ஒரு டயர் தொழிற் சாலையை மத்திய அரசு நிதியுதவியுடன் துவங்குவதற்கான வழி வகைகள் செய்யுமாறு வேண்டுகிறேன். 10 ஆண்டுகளாக எங்கள் தொகுதியில் வீரநாராயண மங்கலம் முதல் திருப்பதிசாரம் வரை உள்ள சாலையைச் செப்பனிடாததால் கர்ப்பிணிப் பெண்களை மருத்துவமனைக்குத் தொட்டிலில் தூக்கிக் கொண்டு செல்கிறார்கள். எனவே, மேற்படி சாலையை உடனடியாக போக்குவரத்துக்குத் தகுதியான சாலையாகச் சீர் செய்து கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் அழகப்பபுரத்தில் 10 ஆண்டுகளாக மின்சாரம் இல்லாமல் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இரண்டு மருத்துவர்களுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் இந்த இடத்தைப் பார்வையிட்டபோது மருத்துவர்களிடம் குளிர் சாதனப் பெட்டிக்கு மின்சாரம் இல்லாமல் எவ்வாறு தடுப்பு ஊசி போட இயலும் எனக் கேட்டேன். எனது தொகுதி மக்கள் நலம் கருதி மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மின் இணைப்பு வழங்கிட வேண்டுகிறேன். எனது தொகுதியில் ஆரல்வாய்மொழியில் அமைந்துள்ள கன்னியாகுமரி கூட்டுறவு நூற்





பாலைக்குப் போதிய பண வசதி, இட வசதி இருந்தும் விரிவு படுத்தாமல் இருந்து வருகிறது. கிட்டத்தட்ட 90-க்கும் மேற் பட்ட தொழிலாளர்கள் 15 ஆண்டுகளாகப் பணியாற்றியும் இது வரையிலும் நிரந்தரப்படுத்தப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் பணியில் அமர்த்திடவும், தொழிற்சாலையை விரிவுபடுத்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் திட்டுவிளை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தரவும், வாரியூர் இடைநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு பாரதியார் கூறியது போல், ''தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரேஷன் அரிசியின் விலையைக் குறைத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு ஏழை எளிய மக்களுக்காக இருக்கிறது என்பதனைத் தெளிவுபடுத்தி உள்ளது. செல்வந்தர்கள் சிறிது கூடுதல் வரியைச் செலுத்தினால் மட்டுமே உதவி தேவைப்படும் எளிய மக்களுக்குப் பயன்கிட்டும். இந்த நிதி நிலை அறிக்கை ஏழை எளிய மக்களுக்கும் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் வாழ்வு அளிக்கும் அறிக்கை ஆகும். பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய சட்டப் பேரவைத் துணைத்தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருமதி. ரமணி நல்லதம்பி அவர்கள்.

*திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது விவாதிக்கிற வாய்ப்பினைத் தந்தமைக்காக நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஏறத்தாழ 106 பக்கங்களைக் கொண்ட ஒரு நீண்ட அறிக்கை என்று சொல்லப்படுகிற வேளையில் உள்ளே அவைகளை ஒவ்வொரு பக்கமாகப் பார்க்கிறபோது மிகவும் நிதானமாக பலதரப்பட்ட மக்களையும் கருத்தில் கொண்டு தீட்டப்பட்ட ஒரு திட்டமாக இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொன்றாக எடுத்துப் பாராட்டிக் கொண்டிருந்தால் ஒதுக்கப்பட்ட நேரம் போதாது என்கிற நிலையில் இது திட்டமிட்டுத் தீட்டப்பட்ட ஒரு திட்டம், இது தெவிட்டாத இன்பம் தருகிற ஒரு திட்டம் என்று கூறி என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

தமிழக முதல்வர் அவர்கள் இங்கே சட்டம், ஒழுங்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அதை வெகுவாகப் பாராட்டுகிற நிலையில் இந்த காவல்துறையை நவீனப் படுத்துகிற அந்தத் திட்டம் மிகவும் சிறந்த திட்டம். காவல் துறை சரியாக இயங்கினால் தான் அது மக்களுக்கு நல்ல வகையில் பயன்தரும் என்ற சூழ்நிலை இருப்பதை அறிந்து அதை நவீனப் படுத்துகிறோம் என்று சொல்லியிருப்பதையும் நான் பாராட்டுகிறேன்.

காவல் துறையிலே உள்ள காவலர்களுக்காக ஒரு சிறு கோரிக்கையை முன் வைக்க நான் விரும்புகிறேன். சில இடங்களில் பந்தோபஸ்துக்காக வருஷா வருஷம் காவலர்களைப் போட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சீசன் நேரத்தில் குற்றாலத்தில் போடப்படுகிறது. திருச்செந்தூர் போன்ற சில கோயில்களில் விழா நடக்கிற போது வருஷா வருஷம் பந்தோபஸ்து போடுகிறார்கள். அப்படி பந்தோபஸ்துக்குச் செல்கிற காவலர்கள் தங்குவதற்கு வசதியான இடம் இல்லாமல் அவர்கள் தவிக்கிறார்கள். எனவே வருஷா வருஷம் பந்தோபஸ்து போடப்படுகிற இடங்களில் எல்லாம் காவலர்கள் தங்குவதற்கு ஒரு தங்கும் இடத்தை நிரந்தரமாகக் கட்டி அவர்களுக்கு உதவலாம்.

அடுத்ததாக வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. வேளாண்மை, பாசனம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஜனத்தொகையில் 70 சதவீதம் பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். ஆனால் விவசாயிகளின் எலும்பு முறிக்கப்பட்ட நிலையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களாகத் தான் அவர்கள் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள் ''பெரிஷபிள் கம்மாடிட்டிஸ்''. அதை அதிக நாட்களுக்கு வைத்து நல்ல விலை வரும்போது விற்கிற சூழ்நிலை என்பது இயலாத ஒன்று. அடுத்து இவர்கள் நீர் ஆதாரத்தையும், நிதியாதாரத்தையும் நம்பி வாழ்கிற ஒரு அவல நிலை இருக்கிறது. இந்த நிலையை எல்லாம் மாற்ற வேண்டும் என்றால் நிறைய அணைக்கட்டுக்களைக் கட்ட வேண்டும். குளங்களை எல்லாம் மராமத்து செய்ய வேண்டும். அப்படிச் செய்து வறட்சியில் இருந்தும், வெள்ளத்திலிருந்தும் காத்து நிரந்தரமாக நீர் ஆதாரம் பெறுவதற்காக எடுக்கப்படுகிற இந்த முயற்சிகளை எல்லாம் பாராட்டுகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்னதாகத் துவங்கப்பட்டு இடையிலே கைவிடப்பட்டிருந்த திட்டம் கொடுமுடியாறு அணைத் திட்டம். அது மூன்று தொகுதி மக்களின் வாழ்வை வளப்படுத்தக் கூடிய ஒரு நல்ல திட்டம். அதனுடைய இரண்டாவது கட்டுமானப் பணியைத் துவங்கி இருப்பதற்காக என்னுடைய அருகில் உள்ள இரண்டு தொகுதிகளின் மக்கள் சார்பாகவும் தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாத்தான்குளம், நாங்குநேரி,





இராதாபுரம் ஆகிய தொகுதி மக்களின் வயிற்றில் பால் வார்த்தது போல் இருக்கிறது இந்தச் செய்தி என்று கொடுமுடியாறு திட்டம் மீண்டும் துவக்கப்படுவதைக் குறித்துச் சொல்கிறார்கள். ஆகவே அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு இடத்தில் இப்படிப்பட்ட நீர் ஆதாரங்களுக்கு எல்லாம் ஏதாவது ஒரு கட்டணம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் Indian agriculturists are born in debts; living in debts are and dieing in debts என்பது ஒரு பிட்டர் ஃபேக்ட். இது ஒரு கசப்பான உண்மை. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், இலவச நீர் ஆதாரம் என்று கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆக அந்த நீருக்கு விதிக்கின்ற கட்டணத்தை நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்து விவசாயிகளைக் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து விவசாயிகளினுடைய நிதியாதாரத்தைப் பெருக்குவதற்கு மானியக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்த மானியக் கடன்களில் பெரும்பகுதி அதிகாரிகளால் சுரண்டுப்பட்டு விடுகிறது. இடைத் தரகர்களால் அபகரிக்கப்படுகிறது. ஆகவே விவசாயிகள் உண்மையிலேயே மேம்படுத்தப்படவேண்டும் என்று சொன்னால் அவர்கள் நிதியுதவி பெற வேண்டும் என்று சொன்னால் மானியம் இல்லாத, வட்டியில்லாத கடனை, அதாவது மானியத்தை வட்டிக்கு ஈடு செய்கிற அளவில் Adjust செய்து கொண்டு, வட்டி இல்லாத கடனை அவர்களுக்குத் தேவைப்படுகிறபோதெல்லாம் கொடுக்கின்ற வகையில், எளிய முறையில் கொடுக்கிற வகையில் ஏற்பாடு செய்தால் நிச்சயமாக அவர்களுடைய வாழ்வில் வசந்தம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து காடுகள் பாதுகாக்கப்படும் என்று அறிவித்து அதற்காக முக்கியத்துவம் கொடுத்து விவசாயிகள் தங்கள் சொந்த நிலங்களில் மரங்களை வளர்த்தால் அவர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்க முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அப்படிப்பட்ட காடுகள் வளர்க்கப்படுதவால் மழை பெய்யும் வாய்ப்பு ஏற்படுகிறது. காட்டு வளம் பெருகுவதால் அதனால் மேலும் சில பல நன்மைகள் நாட்டுக்கு ஏற்படும் என்ற வகையில் அதற்குக் கொடுத்திருக்கின்ற முக்கியத்துவத்தைப் பாராட்டுகிறேன்.

கால்நடை மருத்துவமனை ஒன்று என்னுடைய தொகுதியில் பணகுடி என்ற ஊருக்குத் தேவைப்படுகிறது. எனவே, புதிதாக மருத்துவமனை கொண்டுவரும் திட்டத்தில் பணகுடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் பெருமகனார் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி ரமணி நல்லதம்பி] [1991 செப்டம்பர் 6

அடுத்ததாக தேசிய கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தில் மீன் வளத்திற்காக சில மாவட்டங்களைச் சேர்த்திருக்கிறார்கள். தமிழகத்தின் கடலோரத்தில் [illegible] ஒரு பகுதி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கே ஏழு கடலோர கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே அதையும், நெல்லை மாவட்டத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாதிரி மீன்வளர்ப்பு கிராமங்களாக 10 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியில் 7 கடலோர கிராமங்கள் இருக்கின்றன. அதிலே இடிந்தகரை என்ற கிராமத்தையும் மாதிரி மீன் வளர்ச்சி கிராமமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழக அரசின் முன் வைக்கிறேன்.

அடுத்து மீனவர்கள் கடலில் செல்கிறபோது மரணம் ஏற்படுமானால் அவர்களுக்குக் கொடுக்கிற உதவித்தொகையை 15 ஆயிரத்திலிருந்து 21 ஆயிரமாக உயர்த்தியிருப்பதற்காக மீனவர்களின் சார்பாகப் பாராட்டி நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11·45

மீனவர்களுக்கு அந்த படகுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வந்தது. அது நிறுத்தப்பட்டுவிட்டது. அது மீண்டும் தாராளமாகக் கிடைக்க வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடல் நீரை மென் நீராக ஆக்குகின்ற சில நிலையங்களை சில இடங்களிலே நிறுவுவதாக அரசு குறிப்பிட்டுள்ளது. அப்படி ஒரு நிலை வருகின்றபோது, என்னுடைய தொகுதியிலே உள்ள உவரி என்கின்ற கடலோர கிராமத்திற்கு கடல் நீரை மென் நீராக ஆக்குகின்ற அந்த ஒரு நிலையத்தை தருவார்களானால் குட்டம், கூடுதாளை, கூட்டப்பனை, உவரி போன்ற பல்வேறு கிராமங்களுக்கு அது பயன் தருவதாக அமையும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து குடிநீருக்கு முக்கியத்துவம் தந்து குடிநீருக்கு அடி பம்ப், மேல்நிலைத் தொட்டி, மின் மோட்டார் இவைகளை எல்லாம் பழுது பார்ப்பதற்கான செலவுத் தொகை 4 மடங்காக உயர்த்தி உள்ளீர்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலை என்னவென்றால் அந்த பம்ப் ரிப்பேர் ஆனாலும் சரி, மேல்நிலைத் தொட்டிக்கான அந்த மின் மோட்டார், இணைப்பு ரிப்பேர் ஆனாலும் பழுது பார்க்க மாதங்கள் பல ஆகின்றன. மோட்டார் விலையை விட அதிகச் செலவு அந்த மின் மோட்டார் பழுது பார்ப்பதிலே செலவிடப்பட்டு வருகிறது. இதை எல்லாம் கருத்திலே கொண்டு அந்த திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 6] [திருமதி ரமணி நல்லதம்பி]

ஊரக வளர்ச்சி மேம்பாட்டு திட்டம் ஒன்றை அறிமுகம் செய்து ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய், அதாவது கிராமப்புறத்தின் அடிப்படைத் தேவைகளை எல்லாம் நிறைவு செய்வதற்காக, மின்சார வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி, கல்வி கட்டட வசதி, சத்துணவு மைய வசதி, சாலை வசதி, பேருந்து வசதி போன்ற அடிப்படை வசதிகளை மக்களுக்குத் தருவதற்காக அந்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் 48 பஞ்சாயத்துக்களிலே எங்கேயுமே விளக்கு எரிகிறதா என்று யாராவது கூற முன்வருவார்களா என்றால் ஒருவரும் இல்லை. இங்கே ஒரே இருளாக இருக்கின்றது.

தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புகள் எல்லாம் ஊரை விட்டு வெகு தொலைவிலே கட்டப்பட்டு அவர்கள் குடி இருந்து வருகிறார்கள். இணைப்புச் சாலைகள் இல்லை. பஸ்ஸையே பார்த்திராது, சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும், பஸ்ஸையே பார்த்திராத நிலையில் இருக்கின்றார்கள். பஸ்சின் பலனை பெற்றிராத கிராமங்கள் பல இருக்கின்றன. இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கிறபோது, அவர்களின் தேவை எத்தனை அளவில் கொடிய அளவில் இருக்கின்றது என்பதனைப் புரிந்து கொள்ள முடியும். அது மாத்திரமல்ல, என்னுடைய தொகுதி வறட்சி பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது இண்டஸ்ட்ரியலி மோஸ்ட் பேக்வேர்ட் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்னுடைய தொகுதி இந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்திலே சேர்க்கப்படாமல் போனது மிகவும் அதிர்ச்சியானது. பின் தங்கிய நிலையில் உள்ள இந்தத் தொகுதி, என்னுடைய இராதாபுரம் தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் தொகையை இந்தத் திட்டத்தில் ஒதுக்கி, குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி போன்ற பல்வேறு வசதிகளைப் பெருக்கித் தரவேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய கோரிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

இன்னும் ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை, அதாவது தேனி வளர்ப்பது, பட்டுநூல் நெசவு, கைத்தறி என்று பல்வேறு திட்டங்களுக்கெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அந்நிய செலாவணியை ஈட்டித் தருகின்ற இந்த பனைத் தொழிலைப் பற்றி குறிப்பிட இல்லை. பனைத் தொழிலாளர்களை பொருத்தவரையில் அவர்களுக்கு என்று ஒரு வாரியத்தை உண்டு பண்ணி, பனைத் தொழில், பனைப் பொருள் உற்பத்தி பெருக்குவதன் மூலமாக, அந்நிய செலாவணியை ஈட்ட முடியும். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும். அரசு பல்வேறு தரப்பினருக்கும், அதாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மீனவர்களுக்கு, நெசவாளர்களுக்கு எல்லாம் இலவசமாக வீடுகள் கட்டித் தர முன் வந்துள்ளமையைப்

பாராட்டுகிறேன். நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற வேளையிலே என்னுடைய பகுதியிலே உள்ள வள்ளியம்மாள் புரம், மடப்புரம் போன்ற பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உயிரையும் பணையம் வைத்து பனை ஏறுகின்ற தொழிலைச் செய்கின்ற பனை ஏறிகளுக்கும் இந்த இலவச வீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவர்களை மிகவும் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்த்து இவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களுடைய பிரச்சினைப் பற்றிப் பேசும்போது அவர்களுக்கு இலவசமாக வீடுகளைக் கட்டித் தருகிறார்கள். இன்னும் அவர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை, அந்த குடும்பத்திலே உள்ளவர்களுக்கு மாதம் ரூ. 250 என்று 10 ஆண்டுகளுக்கு தந்து ஊக்குவிக்கிறார்கள் இவைகளை எல்லாம் நெஞ்சாரப் பாராட்டுகிறேன், நெசவாளர்கள் சார்பாக.

என்னுடைய தொகுதியிலே வள்ளியம்மாள்புரம் என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே நெசவாளர்களுக்காக அரசே முழுப் பணத்தையும் போட்டு ஒரு கூட்டுறவுத் தொழில் சங்கத் கூடத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. அங்கே நூல்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். உற்பத்தியான பொருள்கள் ரூ. 15 லட்சம் மதிப்புக்கு தேங்கிய நிலையில் உள்ளது என்று சொல்கின்றார்கள். இந்த உற்பத்தியான துணிகள் விற்பனையானால்தான் அங்கே வேலை செய்கின்ற பெண்மணிகளுக்கு ஊதியத்தை உயர்த்த முடியும், அந்தத் தொழிலை தொடர்ந்து நடத்தமுடியும் என்று கூறுகிறார்கள். இதனை தமிழக அரசு கருத்தில் கொண்டு அங்கே வேலை செய்கின்ற ஒரு பெண் ஒரு சேலை 6 கெஜம் ஒரு நாளில் நெய்தால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியம் 10 ரூபாய்தான் என்று சொல்கிறார்கள். ஆக இது மிகுந்த குறைந்த ஊதியம், ஆனால் கடுமையான வேலை. ஒரு நாள் 12 மணி நேரம் அல்லது 10 மணி நேரம் ஒரு பெண் கடுமையாக உழைத்தால் 10 ருபாய் என்பது மிகவும் குறைந்த ஊதியமாக இருக்கின்ற காரணத்தினாலே அதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு விற்பனை ஆர்டர் கிடைக்கின்ற வகையிலே ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சார பிரச்சினை பற்றி இங்கே குறிப்பிடும் போது உற்பத்தியைப் பெருக்குகின்ற அந்த நல்ல எண்ணத்தைப் பாராட்டி கூடங்குளத்தினுடைய அந்த திட்டத்தை மத்திய அரசை விரைவுப் படுத்தக் கேட்டுக்கொள்வோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கூடங்குளத்தைப் பொறுத்த வரையில் அந்த புராஜக்ட் பொறுத்தவரையில் அது 2001-ம் ஆண்டிலே 2,000 மெகாவாட் மின்சாரம் தர இருக்கிறது





என்று குறிப்பிட்டுள்ளார்கள். அங்கே கூடங்குளம் புராஜெக்ட் வரும்போது அந்த கதிர் வீச்சினாலே அந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படும். மீனவர்களுடைய தொழில் பாதிக்கப்படும் என்ற அச்சமும் பதட்டமும் நிலவியுள்ளது என்றெல்லாம் நீங்கள் அறிவீர்கள் என்று நினைக்கிறேன்.

முற்பகல் 11-50

இந்த நிலையிலே அந்தப் பகுதி மக்கள் இந்தப் பெரிய திட்டத்தை தேசிய நலனிலே நாட்டம் கொண்டு, தேச மக்களின் முன்னேற்றத்திலே, தொழில் வளர்ச்சியிலே நாட்டம் கொண்டு, தங்களுடைய Ancestral Properties யை எல்லாம் கொடுப்பதற்கு முன்வந்து, இன்றை வரைக்கும் நஷ்டஈடு கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் வீடு கட்டக் கூடாது என்று ஒரு தடை உத்தரவும் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு சென்னையிலே பார்த்தால், எம்.எம்.டி.ஏ. அப்ருவல் இல்லாத கட்டடங்கள் எத்தனையோ இருக்கின்றன. அங்கே அவர்கள் தங்கள் வீடுகளை அந்தத் திட்டத்திற்காக தேவைப் படுகின்றபோது, ஊரையே காலி செய்து தர வேண்டிய ஒரு நிலை இருக்கும்போது, நஷ்டஈடு கேட்பார்கள் என்பதற்காக தான் புதிய வீடுகள் கட்டக்கூடாது என்ற நிலையை உருவாக்கி இருந்தார்கள். ஆனால் ஒரு பள்ளிக்கூடத்திற்காக அங்கே உள்ள தங்களுடைய நிலங்களை ஒப்படைத்து, அந்தத் திட்டத்தினால் ஏதாவது எதிர் விளைவுகள், கதிர் வீச்சினால் பாதிப்புகள் ஏற்படுமானால், அந்தப் பாதிப்புகளுக்கு எல்லாம் தங்களை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற அந்தத் தியாக உணர்வுள்ள அந்த ஊர் மக்களின் குழந்தைகள் படிக்கின்ற பள்ளிக்கூடம், இந்த பத்து ஆண்டுக் காலமாக இருந்து வந்துள்ள பள்ளிக்கூடம். இந்த 10 ஆண்டுக் காலம் அந்தப் பள்ளி நல்ல கல்வி சூழலிலே கல்வி கற்க வேண்டுமென்ற பெருந்தன்மை இல்லாமல் இடிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலையில் தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது ; 'கூடங்குளம் புராஜெக்ட் எக்ஸ்பெர்ட் ஒப்பீனியன்' கேட்டு இந்தக் கல்விக் கூடம் இருப்பதனால் எந்தவகையிலே இந்தத் திட்டம் பாதிக்கப்படுகிறது என்று கேட்டு தெளிவுபடுத்திக்கொண்டு, அதற்குப் பிறகு அதை இடிக்க முன்வர வேண்டும். ஏன் என்று கேட்டால், அவர்கள் எங்களுக்கு 'காம்பென்சேஷன்' வேண்டாம். 'when the proj ct demands the building, we will surrender the building without demanding any compensation' என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த சிறார்களின், குழந்தைகளின், மாணவர்களின் நலனைக் கருதி, தங்களுடைய அத்தனை நிலங்களையும் இழந்து, பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்ற அந்த மக்களின் குழந்தைகளின் நல

னைக் கருதி அந்தப் பள்ளிக்கூட கட்டிடத்தை இடிப்பதி லிருந்து தமிழக அரசு காப்பாற்ற முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு பல நடவடிக்கைகளைக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆசிரியர்களுடைய நியமனங்களைப் பெருக்க உத்தேசித் துள்ளீர்கள். இந்த நேரத்திலே சிறுபான்மைப் பள்ளிக் கூடங்களிலே பணியாற்றுகின்ற ஏராளமான ஆசிரியர்கள் பல்லாண்டுக் காலமாக பணி புரிந்து கொண்டு ஊதியம் பெறாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய நிலையை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தக் கல்வி ஆண்டின் முதல் மாதத்திலிருந்தே இவர்கள் ஊதியம் பெற தமிழக முதல்வர் அவர்கள் கருணை காட்ட வேண்டுமென்று அவர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள் கிறேன்.

சத்துணவுத் திட்டத்தை சத்தான திட்டமாக மாற்று வதோடு நில்லாமல் சுகாதார மையமாகவும், பாலர் பள்ளி யாகவும் நீங்கள் அறிவித்துள்ளீர்கள். அதை வெகுவாகப் பாராட்டி, கிராம மக்கள் சார்பாக வரவேற்கிறேன். அதே வேளையிலே சத்துணவுத் திட்டத்திலே வேலை செய்து கொண்டிருக்கின்ற பணியாளர்களுடைய வேலையை நிரந் தரப்படுத்தி, அவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. கற்று, பிற துறைகளிலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுடைய ஊதி யத்திற்கு நிகராக இவர்களுக்கும் ஊதியம் வழங்க அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று கேட்டால், இந்தத் திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் திட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, அவர் களுடைய காலத்திலே இவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு, இன்னமும் இவர்கள் எல்லாம் தத்தளித்துக் கொண்டிருக்கிற நிலைமைதான் இருக்கிறது. இவர்களுக்கு நீங்கள் உரிய அந்தஸ்தையும், நிவாரணத்தையும் அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பற்றி பலரும் பல கருத்துக் களைக் கூறினார்கள். டீசல் தட்டுப்பாடு என்று சொல்லி நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்துகள் அத்தனையையும் என் தொகுதியைப் பொறுத்த வரையில் விற்று விட்டார்கள். 10 பெர்சென்ட் பஸ் தான் நிறுத்துகிறோம் என்று சொன்னார்கள், டீசல் தட்டுப்பாட்டுக்காக. ஆனால் ஏறத்தாழ 13 பேருந்து களை என் தொகுதியிலே நிறுத்தியிருக்கிறார்கள். மீண்டும் இயக்க வேண்டுமென்று வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கேட் கின்றபோது அந்தப் போக்குவரத்துத் துறையைச் சார்ந்தவர் கள் சொல்கிறார்கள். 'ஏற்கெனவே விற்று விட்டோம்' என்று. மூத்தாதாள் வரை ஓடின பஸ்ஸை ஏன் விற்க வேண்டும்





நிறுத்திய உடன் விற்க வேண்டுமென்று சொன்னால் அது ஒரு மோசமான காரியம். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக் கிறோம். இயக்குவதற்கு இன்றைக்கு பேருந்து இல்லாத ஒரு நிலை இருக்கிறது. பேருந்துகளேயே காணாத இடம் இருக் கிறது. ஆகவே, என்னுடைய தொகுதி, கிராமங்கள் நிறைந்த ஒரு தொகுதி, மக்கள் ஒரு பேறுகாலம், அல்லது ஒரு எமர்ஜென்சி அல்லது சுகவீனமாக அவசரச் சிகிச்சைக்காக குழந்தைகளை, வயதானவர்களைக் கொண்டு செல்ல வேண்டுமென்றால் பேருந்து வசதி இல்லாமல் தவிக்கிறார்கள். பேருந்துகளைப் பற்றி குறிப்பிடும்போது போக்குவரத்துக் கழகம் எல்லாம் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். எப்படி இந்த செலவுகளைக் குறைத்து திறம்படச் செயல்படுத்த முடியும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த போக்குவரத்துத் துறையிலே உயர்மட்ட அதிகாரிகளாக இருக் கிறவர்கள் எல்லாம், அதாவது கார்ப்பரேஷனில், பி.டபிள்யூ.டி. எஸ்.ஈ. (S.E.)க்கும், எலெட்க்ரிசிட்டி எஸ்.ஈ.க்கும் ஈக்குவல் ஆக அந்தஸ்தில் உள்ளவர்கள்தான். அவர்களுக்கு எல்லாம் ஏ.சி. இடையாது. இந்த போக்குவரத்துத் துறையைச் சார்ந்த எம்.டி., ஜி.எம். இவர்களுக்கு எல்லாம் ஏ.சி. ரூம். இப்படிப் பட்ட செலவுகளை எல்லாம்— நஷ்டத்தில் இயங்கிக் கொண் டிருக்கும் ஒன்றில் ஏ.சி. இருக்கிறது என்றால் செலவு— இவைகளை எல்லாம் நீங்கள் தவிர்க்க வேண்டும். இரண்டாவது, நேசமணி போக்குவரத்துக் கழகம் என்ற ஒரு போக்குவரத்துக் கழகம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசுவது லாபத்தில் இருக்கிறவர்களுக்கு எல்லாம் ஏ.சி. கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்வது மாதிரி ஆகிவிடும். கொஞ்சம் பார்த்து ஜாக்கிரதையாக பேசுங்கள்.

முற்பகல் 11-55

திருமதி ரமணி நல்லதம்பி: நன்றி. நேசமணி போக்கு வரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் நான் போக்கு வரத்து அமைச்சருக்கு ஒரு மனு கொடுத்து நேரில் பேசி யிருக்கிறேன். அது என்ன என்று கேட்டால் பாலம் ஒன்று உடைந்துவிட்ட காரணத்தால் திருச்செந்தூருக்கு கன்னியா குமரி மாவட்டத்தில் இருந்து செல்கிற அத்தனை பாஸ்ட் பாசஞ்சர்களும் மன்னார்புரத்திலிருந்து இட்டமொழிக்கு செல் வதற்காக திசையன்விளை வழியாகத் திருப்பி விடப்பட்டன. அந்த பஸ் மூலமாக நாள் ஒன்றுக்கு மட்டும் 450 ரூபாய் லாபம் ஏற்பட்டு இருந்தது. வருவாய் அதிகமாக உயர்ந்து இருந்தது. திசையின் விளையில் ஒரு புளோட்டிங் பாப்புலேஷன். அதாவது பக்கத்து வில்லேஜில் இருந்து அங்கே வருகிற மக்களே ஒரு 25 ஆயிரம் பேர் இருப்பார்கள். இவர்களுக்கு அது பெரும் உதவியாக இருந்தது. அதை நிறுத்தி விட்டார்கள். அதை

மீண்டும் இயக்குவதற்கு கேட்டிருந்தேன். அந்த எம்.டி.
பதில் கொடுத்திருக்கிறார். '13 கிலோமீட்டர் கூடுதல்
என்கிற காரணத்தினால் அப்படி இயக்க முடியவில்லை' என்று.
கண்டக்டர், டிரைவருக்கு இன்சென்டிவ் ஆக ஒரு 50 ரூபாய்,
25 ரூபாய் கூடுதல் கொடுத்து இந்த 13 கிலோமீட்டரையும்
பார்த்தும் பாராமலும் ஓட்டுங்கள் என்று சொன்னால் நிச்சய
மாக ஓட்டுவார்கள். லாபத்திலே இயக்க வேண்டும், மக்களுக்கு
சேவை செய்ய வேண்டும், கிராமப் புறத்து மக்களை திருப்திப்
படுத்த வேண்டுமென்ற நிலை அவர்களுக்கு இருக்குமேயானால்
நிச்சயமாக இப்படிப்பட்ட பொறுப்பற்ற பதிலை அவர்கள்
தரமாட்டார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு, மீண்டும்
அந்தப் பேருந்து திசையின்விளை வழியாகச் செல்ல ஆவன
செய்ய வேண்டும். அடுத்து பாயின்ட் டு பாயின்ட் என்று
எல்.எஸ்.எஸ். பேருந்துகள் குறைந்த அளவு எண்ணிக்கையுடைய
பாசஞ்சர்களை ஏற்றிக்கொண்டு போகிறது. ஆனால் தனியார்
பேருந்தில் 60, 100 டிக்கட் போகிறது. ஒரு பேருந்து வைத்
திருக்கிறவர்கள் சீராக, இலாபத்தில் நடத்துகிறார்கள். இத்
தனை பேருந்துகளை வைத்துக் கொண்டு, நஷ்டத்தில் ஓடு
கிறதென்று சொன்னால், நல்ல நிர்வாகத் திறமையுள்ளவர்
களை அங்கே மாற்றி மாற்றிப் போட்டுப் பார்க்க வேண்டும்.
நஷ்டத்திற்குக் கணக்கு கேட்க வேண்டும். அவ்ர்கள் எல்லாம்
20 வருடங்களுக்கு ஒரே பேருந்தை ஓட்டுகிறார்கள். கணபதி,
ஸ்ரீராம் பாப்புலர் என்னும் தனியார் நிறுவனங்கள் எல்லாம்.
இவர்கள் 2 வருடங்களுக்குகூட ஓட்டமாட்டேன் என்கிறார்கள்.
ஏன் என்று கேட்டால் பெல் இல்லை, பிரேக் இல்லை, விற்று
விட்டோம் என்கிறார்கள். ஏதோ ஒரு கர்ரணத்தைச் சொல்லி,
குறைந்த விலைக்கு அவற்றை விற்று வெகுவான நஷ்டத்தை
ஏற்படுத்துகிறார்கள்.

அடுத்து, ஸ்பேர் டிரைவர்ஸ், கண்டக்டர்ஸ் எண்ணிக்கை
மிகக் குறைவாக இருக்கிறது. அதனால் ஸ்பேர் பஸ்கள்கூட
ஓட முடியவில்லை என்ற குறையை ஓட்டுநர்களும், நடத்து
னர்களும் கூறுகிறார்கள். கட்டபொம்மன் போக்குவரத்துக்
கழகத்தைப் பொறுத்த வரையில் ஓட்டுனர்கள், நடத்துனர்கள்
தேர்வு நடந்து பல ஆண்டுகள் ஆகின்றன. அதையும் கருத்தில்
கொண்டு, நீங்கள் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரையில்,
20 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளை எல்லாம் 32
படுக்கைகள் உள்ள மருத்துவ மனைகளாக உயர்த்துவதாகக்
கூறியுள்ளீர்கள். மிக்க மகிழ்ச்சி. திசையின்விளையில் இந்த
மாதிரி உள்ள பிரைமரி ஹெல்த் சென்டர், 20 படுக்கை கொண்ட
மருத்துவமனையாக ஏற்படுத்தப்படுமென்று அறிவித்து, இது
வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத நிலை நிலவு
கிறது. ஆகவே இதைக் கருத்திற்கொண்டு, 32 படுக்கை
வசதியுள்ள மருத்துவ மனையாக அதை அறிவித்து, அதற்கு





உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அடுத்து பள்ளிக்கூடங்களுக்கு நிறைய கட்டி
டங்கள் கட்ட வேண்டுமென்று சொல்லும்போது, செட்டி
குளம் அரசு உயர்நிலைப் பள்ளியைப் பற்றி கூற நினைக்கிறேன்.
ஏனென்று கேட்டால், 20, 25 வருடங்களாக அந்த உயர்நிலைப்
பள்ளி மரத்தடியிலும், ஓலைக் கொட்டகையிலும் இயங்கி
வருகிறது. அறிக்கையில் 100 பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடம்
கட்டுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. செட்டிகுளம் பள்ளிக்
கூடத்தையும் அதிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, இராதாபுரம், தொகுதியின் தலைநகராக இருக்
கிறது. அங்கே பிணப் பரிசோதனை அறை, ஜுடிஷியல் சப்-
மாஜிஸ்டிரேட் கோர்ட் கிடையாது. இவைகளை எல்லாம்
கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று கூறி, இந்த
நிதிநிலை அறிக்கை சிறந்த நிதிநிலை அறிக்கை, இது விவசாயப்
பெருங்குடி மக்களையும், அடித்தள மக்களையும் வெகுவாகக்
கவரக்கூடிய நிதிநிலை அறிக்கை என்று சொல்லிக்கொள்ள விரும்
புகிறேன். டூ வீலர்களைப் பொறுத்தவரையில் 50 சி.சி.
வரையில் சலுகை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை
100 சி.சி. வரை ஆக்கினால், மாணவர்கள், அரசு ஊழியர்கள்
போன்றவர்கள் அவசரமாகப் பணிக்குச் செல்ல உறுதுணையாக
இருக்கும். எனவே அவர்களுடைய தேவையையும் உணர்ந்து,
100 சி.சி. வரையில் விலக்கு அளிக்க வேண்டுமென்று கூறி,
வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. கா. பூ. முனுசாமி அவர்கள்.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அறிவுசால் ஆன்றோர்களும், அரசியல்
வல்லுனர்களும், மனித நேயம் கொண்ட தலைவர்களும் உலகம்
வியந்த இராஜதந்திரிகளும் அமர்ந்து பணியாற்றிய இந்த
மாமன்றத்தில், மேலே குறிப்பிட்ட அத்தனை குண நலன்களும்
ஒன்றிணைந்து, இன்று அரசு நடத்திக் கொண்டிருக்கிற எங்க
ளுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்
களுடைய கருணையால் இந்த மாமன்றத்தில் என்னையும் அமர
வைத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் கருத்துக்களை வழங்கு
வதற்கு வாய்ப்பு அளித்த என் தாய்க்கு இதய சுத்தியோடு
என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் முதலில் சமர்ப்
பிக்கிறேன். அதே நேரத்தில் புரட்சித் தலைவி அவர்களுடைய
வேண்டுகோளை ஏற்று, எனக்கு வாக்களித்த வாக்காளப் பெரு
மக்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

[திரு. கா. பூ. முனுசாமி] [1991 செப்டம்பர் 6

மேலும் நிதிநிலை அறிக்கையை இங்கே கொண்டு வருவதற்கு முன்பாக தர்மபுரி மாவட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வ ரவர்கள் தத்து எடுத்துக்கொண்டு, முதற் கட்டமாக கிட்டத் தட்ட 40 கோடி ரூபாய் செலவில் கருப்புக் கல் மெருகூட்டும் தொழிற்சாலையும், அதே நேரத்தில் அங்கே வாழ்ந்து கொண் டிருக்கிற ஏழை எளிய மக்கள் பயன்பெறத்தக்க வகையிலே சமூக நலத் திட்டங்களையும் அளித்தமைக்கு மாவட்ட மக்களின் சார்பாகவும், தர்மபுரி மாவட்டத்தினுடைய மாண்புமிகு உறுப் பினர்கள் சார்பாகவும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

(நண்பகல் 12-00)

மேலும் இந்த மாநிலம் சுதந்திரம் அடைந்ததற்குப் பின்பு இதுவரையில் ஆண்ட ஆட்சியாளர்கள் எதிர்நோக்க முடியாத அளவிற்கு நிதிநிலை நெருக்கடியை எதிர்நோக்கி, இந்த ஆண்டு, 1991-92 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை சாதாரண மக்களும், தொழிற் துறையை கொண்டவர்களும், அரசு அலுவலர்களும் அத்தனை பேரும் பயந்து கொண்டிருந்த வேளையில், காரணம் விலைவாசிகள் வெகுவாக உயர்ந்து கொண்டிருக்கிறது ; எதைக் குறிப்பிட்டாலும் கைக்கு எட்டாத அளவிலே விளங்குகின்ற நேரத்தில், போடுகின்ற வரவு—செலவுத் திட்டம் எப்படி எந்தச் சூழ்நிலையில் தாக்கும் என்று பயந்து கொண்டிருந்த வேளையில் நாங்கள் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையில் என்னென்ன திட்டங்களை முன்வைத்து, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதைச் செய்வோம் என்கின்ற அந்த அறிக்கையை ஏற்று, எத்தனையோ இடையூறுகளைச் சந்தித்து, அந்தத் தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலே இந்த நிதிநிலை அறிக் கையை இங்கே அளித்து இருக்கிறார்கள். அதற்காக நான் இங்கே அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

கடந்த கால ஆட்சி தான்தோன்றித்தனமாக தனக்கும், தங்களுடைய இயக்கத்திற்கும், தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் வாழ வைத்துக் கொள்கின்ற வலிகயிலே, அவர்களுக்கு உதவி புரிகின்ற பண முதலைகள் சார்பாக நிதிநிலை அறிக்கையைக் கொண்டு வந்த காரணத்தினால், இதுவரையில் இருந்த இந்த நெருக்கடி, அந்த $1\frac{1}{4}$ ஆண்டுக் காலம் ஆண்டவர் களுடைய ஆட்சியில் மேலும் அதிகமானது. அதே நேரத்தில் அவர்கள் ஆண்ட அந்தக் காலத்தில் போக்குவரத்துத் துறை யிலும், ஆலயங்களிலும், மேலும் பொது நிறுவனங்களிலும் அவர்கள் தன்னிச்சையாகச் செயல்பட்ட காரணத்தினால் நிதிநிலை இன்னும் மோசமான நிலைக்கு வந்தது. இருந் தாலும் இதையெல்லாம் கருத்தில் கொண்டு ஏழை எளியவர் கள் வாழ்கின்ற வகையில், ஏழை மக்கள் பயன் பெறுகின்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளதை நான்



1991 செப்டம்பர் 6] [திரு. கா. பூ. முனுசாமி]

மனதார வரவேற்கிறேன். மேலும் இவ்வளவு இக்கட்டான சூழ்நிலைகள் இருந்தாலும் எங்களுடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கையிலே கூறியது போல, ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடனேயே கிட்டத்தட்ட 322 கோடி ரூபாய் ஆண்டு வருமானத்தை இழந்தாலும், நாங்கள் சொன்னதைச் செய் வோம் என்கின்ற செயல் வடிவத்தைக் காட்டுகின்ற வகையிலே மலிவு விலை மதுவை ஒழித்து, 322 கோடி ரூபாய் இழந்தாலும் அந்த மலிவு விலை மதுவை ஒழித்ததோடு மட்டுமல்லாமல், சொன்னதைச் செயலாக்குகின்ற வகையிலே பல கோடி ரூபாயை இன்று முதலீடாகச் செய்து கொண்டிருக்கிற அந்த மா மேதையை நான் பாராட்டுவதற்கு வயது இல்லை என்று சொன்னாலும், அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

இங்கே இந்த மலிவு விலை மதுவைக் குறிப்பிடும்போது ஒரு கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையில் மாண்புமிகு காங்கிரசு பேரியக்கத்தினுடைய உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். காங்கிரசினுடைய கொள்கையை இன்றைய முதல்வர் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அதை இங்கே வன்மையாகக் கண்டிக் கிறேன். காரணம், எப்போதுமே ஒரு கொள்கை யாரால் நிறைவேற்றப்படுகிறதோ, யார் நிறைவேற்றுகிறார்களோ அவர்கள் தான் அந்தக் கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக ஆகிவிடுகிறார்கள். இங்கே புரட்சித் தலைவியை, பொதுச் செயலாளராக இருந்து கொண்டிருக்கிற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் கொள்கையை நிறைவேற்றி இருக்கிறது. எனவே, இந்தக் கொள்கை புரட்சித் தலைவியின் தலைமையின் கீழ் இருக்கின்ற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கொள்கையாகும். எனவே, இங்கே சொல்வதற்குக் காரணம், . . . . . . .

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, பெயரைச் சொல்வதால். . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கன்னிப் பேச்சு.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : துணைத் தலைவர் அவர்களே. . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கன்னிப் பேச்சு. பின்பு உங்களுக்கு வாய்ப்புத் தரப்படும். கன்னிப் பேச்சில் எதுவும் குறுக்கீடு வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்பே உறுப்பினராக இருந்தவர். இந்த மரபுகள் தெரியும். தயவுசெய்து அமரவும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பெயரைச் சொன்னால், . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வாய்ப்புத் தரப்படும்.

திரு. கா. பூ. முனுசாமி : இங்கே காங்கிரசு கொள்கை என்று சொல்லும்போது பக்கத்து மாநிலத்திலே ஆண்டு கொண்டிருக்கிற கர்நாடக மாநிலமும் காங்கிரசு மாநிலமாகத் தான் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏன், அங்கே அந்தக் கொள்கை தோல்வி அடைந்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எனவே இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்தக் கொள்கைக்குச் சொந்தக்காரர்கள் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(பிற்பகல் 12-05)

அதே நேரத்தில் இன்னுமொன்றை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். யார் எந்தச் சூழ்நிலையிலும் எங்களுடைய இயக்கத்திலே கூட்டுச் சேர்ந்தாலும் எங்களுடைய உழைப்பையும், இதய தெய்வம் புரட்சித் தலைவியின் உழைப்பையும் வேண்டுமென்றால் பகிர்ந்து கொள்ளலாம். ஆனால் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி இரத்தத்தைச் சிந்தி, வியர்வையைச் சிந்தி ஈட்டிய புகழை யாராவது பங்கு போடுவார்கள் என்று சொன்னால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுகூரக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த திட்டத்தை உருவாக்கி, கிட்டத் தட்ட கோடிக்கணக்கான ஏழைத் தாய்மார்களுடைய வயிற்றில் பாலை வார்த்தினார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள். ** என்று சொன்னால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : It is too much. It is too much. It should not be on recorded. ஆகவே அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி, விவாதங்களுக்கு இடம் தராமல் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிற கருத்துக்கும், காங்கிரஸ் கொண்டிருக்கிற கருத்துக்கும் இருக்கிற தார தம்மியங்களைச் சரியாக புரிந்துகொள்ளாமல் உணர்ச்சி வயப்பட்டு கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். கொள்கை என்பதைப் பொறுத்தும், குறிக்கோள் என்பதைப் பொறுத்தும் ஒருவருக்கொருவர் பறிக்கவோ, எடுக்கவோ முடியாது. கொள்கை என்பது எல்லோருக்கும் பரவலாகக் கூட இருக்கும். ஆனால் மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில், இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் கட்சிக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதிக—அதிக அல்ல—வேறுபாடே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது, '' நாங்கள் கொண்டிருக்கிற கருத்தையே நிறைவேற்றியிருப்பதற்கு பாராட்டுகிறேன் '' என்று எடுத்துரைத்தார்கள். இதிலே தவறு இல்லை. இதை வன்மையாகக் கண்டிக்க வேண்டிய அவசியமில்லை. கண்டிக்கக் கூடியதுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் உணர்ச்சி வயப்பட்டு கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் ஆண்டபோதும் மதுவிலக்குக் கொள்கை தீவிரமாகக் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்கள் ஆண்டபோதும் தீவிரமாகக் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது. இடையில் நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக, அதற்குரிய காரண விளக்கங்கள் சொல்லப்பட்டு தளர்த்தப்பட்டிருக்கிறது. அதைத் தவிர கொள்கையைப் பொறுத்தவரையில் அதை நிலைநாட்ட வேண்டும் என்ற தன்மையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலும் நிலைநாட்டப்பட்டது. புரட்சித் தலைவருடைய வழி வந்த இந்த அரசு மேலும் அந்தக் கொள்கையை தீவிரமாக நிலைநாட்ட வேண்டும் என்ற அடிப்படையில் இன்று முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்கள் தீவிரமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். வேண்டுமென்றால் அகில இந்திய அளவிலே நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் சில மாநிலத்தார் என்று நாம் குறிப்பிடலாமே தவிர இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கொண்டிருக்கிற கருத்துக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிற கருத்துக்கும் எந்த வேறுபாடும் இல்லை.

காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் ஆள்கிறது மைசூரில் என்றாலும், அவர்களுடைய கொள்கை, போக்கு வேறாக இருக்கிறது. இந்த மாநிலத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய போக்கு வேறாக

[1991 செப்டம்பர் 6

இருக்கிறது. ஆனால் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது தான் நமக்கு முக்கியமே தவிர, இமாச்சலப் பிரதேசத்தில் எப்படி இருக்கிறார்கள், மிசோரத்தில் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் அதிகம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் நிதி நிலைக்கு வரும்படியும், எனக்கு உதவியாக இருக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இதில் விவாதம் தேவையில்லை என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் விவகாரங்களுக்குள்ளே செல்லாமல் விஷயத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினருக்கு மனம் வருத்தம் தரக் கூடிய அந்தப் பேச்சை 'எக்ஸ்பஞ்ச்' செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * * என்ற அந்த சொற்றொடர் நீக்கப்படலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்பிட்ட அந்தச் சொற்றொடரை மட்டும் நீக்குமாறு ஆணையிடுகிறேன். உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

பிற்பகல் 12-10

திரு. கா. பூ. முனுசாமி : அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி தமிழகத்திற்கு அத்தியாவசியமான, தேவையான குடிநீர்த் திட்டத்தையும், தொழில் துறையில் தாழ்ந்து கிடக்கிற தமிழகம் இந்திய துணைக் கண்டத்தில் முதன்மை மாநிலமாக வர வேண்டும் என்ற பேரவாவின் அடிப்படையில் இந்த நிதி நிலை அறிக்கையில் தொழில் முன்னேற்றத் திட்டங்களையும் அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். முதன்மை மாநிலமாக வரவேண்டுமென்ற பேரவாவின் அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது என்பதை அறிந்து அதை நான் வரவேற்கிறேன். அதில் இங்கே குறிப்பிடும்போது, வேளாண்மைத் துறையிலே, நிதிநிலை அறிக்கையின் அடிப்படையில் இதுவரையில் சுதந்திரம் பெற்ற நாளிலேயிருந்து, இந்த மாநிலத்திலே தரிசு நிலங்களான, விவசாயத்திற்குப் உட்படுத்தப்படாத அனைத்து நிலங்களையும் ஏற்று, அதன் அடிப்படையில் திட்டத்தட்ட 1.50 கோடி ரூபாய் அளவில் 85,000 ஏக்கர் நிலப்பரப்பை விவசாயத்துறைக்கு ஈடுபடுத்திய



1991 செப்டம்பர் 6] [திரு. கா. பூ. முனுசாமி]

இந்த நிதிநிலை அறிக்கையினை நான் மிகவும் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், அந்தத் தரிசு நிலங்களை தர்மபுரி மாவட்டத்தை முதலாவதாக எடுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை அமல்படுத்த இருப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், தொழில் துறையில் பின்தங்கிய நிலையில் இருக்கிற இந்த மாநிலம் முன்னுக்கு வரவேண்டுமென்ற அவாவில் பல தொழிற்சாலைகளைத் துவக்குகிற தொழில் அதிபர்களுக்குப் பல சலுகைகளை இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவரையில் மைய அரசு நம் மாநிலத்தில் எட்டு சதவிதம் முதலீடு செய்திருந்ததை இப்போது ஐந்து சதவிதமாகக் குறைத்திருக்கிறார்கள். இன்று மையத்தில் ஆளுகிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து அந்த ஐந்து சதவித முதலீட்டை மீண்டும் எட்டு சதவிதமாக மாற்றுவதற்கு பரிந்துரை செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். மேலும் அனைத்துத் துறையிலும் இந்த நிதிநிலை அறிக்கை சாதாரண அடிப்படையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற ஏழை விவசாயிகளுக்கும் ஏழைத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கிற அளவில் உள்ள நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது. எனவே இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, அதே நேரத்தில் என்னுடைய மாவட்டத்தினுடைய சில கோரிக்கைகளை இங்கே முன்வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விரைவில் முடிக்க வேண்டும்.

திரு. கா. பூ. முனுசாமி : தர்மபுரி மாவட்டம் மலைகள் சூழ்ந்திருக்கிற காரணத்தால், நிலத்தடி நீர் மிகவும் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் எந்த இடத்தில் ஆழ்துளைக் கிணறுகள் போட்டாலும், 400 அடி 300 அடி என்று போட்டாலும் நீர் கிடைக்காத அவல நிலையில் நாங்கள் இருக்கிறோம். இதே நிலை நீடித்தால் இன்னும் நான்கைந்து ஆண்டுகளில் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத நிலை அங்கே ஏற்பட்டு விடும். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் ஒரு பணிவான வேண்டுகோளை வைக்கிறேன். காவிரி நீர் எங்களுடைய மாவட்டத்தைத் தொட்டுக் கொண்டு சென்றாலும் அந்த காவிரிலிருந்து ஒரு சொட்டு நீர் கூட நாங்கள் பெறுவது இல்லை. எனவே ஒகனேக்கல் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசிலிக்கவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு உறுப்பினர் ஆர். டி. அரங்கநாதன் அவர்கள்.

*திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் சட்டப் பேரவைத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களின் பெருவாரியான ஆதரவாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியாலும், தொகுதி மக்களுக்கு சிறப்பான சேவைகளைச் செய்யப் பணித்து இந்த மாமன்றத்திற்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய என் தொகுதி வாக்காளர்களுக்கும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது வந்த மாமணியாய் எங்களை வாழவைத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய இதயம் முழுவதும் நிறைந்த நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய கன்னி உரையைத் தொடங்குகிறேன்.

1991–92 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது நமது இதயதெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏழைகள் ஏற்றம் பெற வேண்டுமென்ற உயரிய எண்ணத்தில் பெண்களுக்கு முன்னுரிமைகளைத் தந்து, சலுகைகளை வழங்கி பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடும் சீரிய எண்ணத்தைக் கண்டு இந்த நாடே வியக்கிறது. அந்த அளவுக்கு ஏழை மக்களுக்கு வரிச்சுமை எதுவும் இல்லாமல் தயாரிக்கப்பட்டுள்ளது இந்த நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களின் பெருமையை, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்காலத்திலிருந்து அவர்களுடைய நிதிநிலை அறிக்கைகள் பெருமையுடையதாக இருந்ததை இந்த நாடே அறியும். அந்த அளவுக்கு சிறப்பாக இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து தமிழக மக்களுக்கு அளித்திருக்கிற நிலையில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காக தமிழக அரசு பத்து அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை தமிழகத்தில் இருக்கிற லட்சோபலட்சம் ஏழை ஆதிதிராவிடர், பழங்குடியினர் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள்.

தனி மனிதனுடைய வரிச்சுமையைக் குறைப்பது அரசின் கடமை என்ற கருத்தை உணர்ந்து இந்த நிதிநிலை அறிக்கையில் 50 க. செ. மீட்டருக்கு குறைவான இருசக்கர வாகனங்கள் மீதுள்ள வரியை முற்றிலும் நீக்கி இருக்கிறார்கள். இதனை நடுத்தரமக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.





விவசாயம் தமிழகத்தின் உயிர் நாடியாக இருப்பதை உணர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விவசாயிகள் உளமாற மகிழும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் மூலமாக பல்வேறு சலுகைகளை அறிவித்து இருக்கிறார்கள். விவசாயத்திற்கு ஆதாரமான ஏரிகள், குளங்கள் போன்றவை பராமரிக்கப்படும் என்று அறிவித்திருக்கும் கருத்து விவசாயிகள் வயிற்றில் பால்வார்ப்பது போல உள்ளது என்று விவசாயிகள் மகிழ்கிறார்கள். அதே நேரத்தில் பல நீர்ப்பிடிப்பு பகுதிகளை கடந்த ஆட்சியாளர்கள் ஆட்சியில் பலர் ஆக்கிரமித்துள்ளதை அப்புறப்படுத்தி, ஏரிகள், குளங்கள் விவசாயத்திற்கு பயன்படும் வகையில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி நீர் பங்கீடு பிரச்சினையில் தமிழக விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் அனைத்தையும் நான் உளமாற பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழக மக்களுடைய ஏகோபித்த வரவேற்பைப் பெற்று, எல்லாத் தரப்பு மக்களும் மகிழ்ச்சி அடைகிற அளவுக்கு உருவாக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை மனமாற பாராட்டிப் பேச எனக்கு வாய்ப்பைத் தந்த இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியின் தேவைகள் சிலவற்றையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சீரோடும் சிறப்போடும் ஆரம்பித்திருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் என்னுடைய தொகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் வளர்ச்சியில் நமது தமிழகம் முதலிடம் பெறவேண்டுமென்று நமது அரசு துடிப்புடன் செயல்படும் இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியான விருத்தாசலம் நகரில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய மாண்புமிகு குடியரசுத் தலைவர் அன்று தமிழகத் தொழில் அமைச்சராக இருந்தபோது அவரால் தொடங்கப்பட்ட பீங்கான் தொழிற்சாலை கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக மூடிக் கிடக்கிறது. செராமிக் தொழில் நுட்பத்தில் இந்தியாவில் முதலிடத்தில் இருந்த இந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறந்து தமிழகத்தில் தொழில் வளம் பெருக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு பாதிக்கப்பட்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது சுரங்கப் பாதை பணிகளுக்காக விவசாயிகளிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட விவசாய விளை நிலங்களுக்கு நட்டயீடாகக் கொடுக்கப்பட வேண்டிய நட்டயீட்டுத் தொகையையும், நிலம் கொடுத்தவர்களுக்கு வீட்டிற்கு ஒருவருக்கு

[திரு. ஆர். டி. அரங்கநாதன்] [1991 செப்டம்பர் 6

கொடுக்கப்பட வேண்டிய வேலை வாய்ப்பையும் நெய்
வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தார் இதுவரையில் சரிவர
கொடுக்காமல் இருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, நெய்வேலி பழுப்பு
நிலக்கரி நிறுவனத்தைத் துரிதப்படுத்தி பாதிக்கப்பட்ட
மக்கள் அனைவருக்கும் நியாயம் வழங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியில் உள்ள விருத்
தாசலம் மற்றும் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியங்களிலும்,
விருத்தாசலம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளிலும்,
சாலை வசதி, குடிநீர் வசதி, மின் வசதி ஆகியவற்றுக்கு
முதலிடம் கொடுத்து, அங்கே சிறப்புத் தன்னிறைவுத் திட்
டத்தை அமல்படுத்தும்படி வேண்டிக் கேட்டுக் கொள்
கிறேன்.

விருத்தாசலம் நகரின் மக்கள் தொகைப் பெருக்கத்தின்
காரணமாக போக்குவரத்து நெரிசல் அதிகரித்துவிட்டபடி
யால் நகரின் வெளிப் பகுதிகளை இணைக்கும் புறவழிச்
சாலை ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரில் உள்ள வியாபாரிகள், வியாபார
ரீதியாக தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய
ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். இன்றையதினம் மற்ற
மாநகரங்களோடு விரைவாகத் தொடர்பு கொண்டு, தேவை
யான உணவுப் பண்டங்களைக் கொண்டுவருவதற்கும், தொலை
பேசி ஒரு அத்தியாவசியத் தேவையாக இருந்து வருகிற இந்த
நேரத்தில், விருத்தாசலம் நகரத்தில் இன்னும் எஸ்.டி.டி.
தொலை பேசித் தொடர்பு கொண்டுவருவதற்காக ஆக்கப்
பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, முடிக்கப்பட்டு இருக்கிற நிலை
மையில், இன்னும் எஸ்.டி.டி. கால் வசதி அங்கே வழங்கப்படா
மல் இருக்கின்ற காரணத்தால், பெரிதும் பாதிக்கப்பட்டு
இருக்கின்ற அந்த வியாபாரிகளுக்கு உறுதுணையாக இருப்
பதற்கு அந்தப் பகுதியிலே, விருத்தாசலம் நகரத்தில், விரை
வாக எஸ்.டி.டி. கால் இணைப்பு, எஸ்.டி.டி. போன் கிடைப்
பதற்கு ஆவன செய்யுமாறு மத்திய அரசை மாண்புமிகு
முதல்வர் அவர்கள் வலியுறுத்துமாறு அன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் மேற்கி
லிருந்து கிழக்காக ஓடிவரும் மணிமுத்தா நதி என்னும் ஆறு
விருத்தாசலம் ஒன்றியத்திலே எரனூர் என்னும் இடத்தில்
மேற்கில் சுமார் 20 கிராமங்களையும், கிழக்குப் பகுதியில்
கா. புத்தூர் என்னும் இடத்தில் சுமார் 30 கிராமங்களை



1991 செப்டம்பர் 6] [திரு. ஆர். டி. அரங்கநாதன்]

யும் இரண்டாகப் பிரிக்கிறது. இதனால் மழை, வெள்ளக் காலங்
களில், அந்தக் கிராமங்களில் இருக்கும் மக்கள் பாதிக்கப்படு
கிறார்கள். போக்குவரத்து, மற்றும் விவசாய விளை பொருட்
களை நகரத்திற்குக் கொண்டு வருவது ஆகியவை தடைப்படு
கிறது. ஆகவே அந்த இரண்டு பகுதிகளையும் இணைக்கின்ற
வகையில், ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்றை அமைத்து
அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கனவை நனவாக்கித் தர
அன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு விருத்தாசலத்தில்
துவங்கப்பட்ட கலைக்கல்லூரியில் ஆண்கள் எண்ணிக்கை
யில் சரிபாதிக்கு மேல் பயின்று வருகிற, பயின்று கொண்
டிருக்கும் பெண்களுக்கு என அந்த நகரத்திலே பெண்கள் கல்
லூரி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு முதல்வர்
அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நகரில் அமைந்திருக்கும் பொது மருத்துவமனையில்
போதிய கட்டிட வசதி, படுக்கை வசதி, மற்றும் நவீன சிகிச்சைக்
கருவிகள் போதிய அளவில் இல்லை. 52 ஆயிரம் மக்கள்
வசிக்கும் அந்த நகரத்தில் உள்ள அந்த மருத்துவமனை
யில் அதிகமான நவீன வசதிகளைச் செய்து தருவதற்கு
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை
அன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆதி திராவிட மக்கள் வாழும் பகுதிகளில், என்
னுடைய தொகுதியிலே குறிப்பாக உள்ளடங்கி இருக்கிற கிரா
மங்களில், உள்ள காலனிப் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட
குடிநீர், சாலை வசதி மற்றும் மின்சார வசதி போன்ற அத்தி
யாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து தரும்படி அன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் செம்மை மிக்க ஆட்சியை சிறப்போடு செய்ய புறப்
பட்டு இருக்கும் எங்கள் புது யுகத்தின் புரட்சித் தலைவி,
அவர்களே, உங்கள் ஆட்சியின் சிறப்பு மென்மேலும் தழைத்
தோங்க எங்கள் நெஞ்சார்ந்த பாராட்டுதல்களைத் தெரி
வித்துக் கொண்டு, எல்லாத் தரப்பு மக்களுக்கும் பயன் தரக்
கூடிய இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, பேசுவதற்கு
வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும்
நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து டாக்டர்
எம். மோசஸ்.

*டாக்டர் எம். மோசஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை
அறிக்கையின்மீது என் கருத்துக்களைக் கூற வாய்ப்புத் தந்த
உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த

நிதிநிலை அறிக்கையானது செவிக்கோர் உணவாக இருந்தது. அதுவும் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கம்பீரமாக இரண்டு மணி நேரம் 20 நிமிடங்கள் நின்றவாறே ஒரு நீண்ட அறிக்கையைத் தந்தார்கள். அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்தக் காவல்துறையில் உள்ள Men force is very little when compared to the work they have to do. சாதாரணமாக ஒரு காவல்துறைக்கான ஏரியாவை பார்ப்போமேயானால், 6 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர்,

பிற்பகல் 12-25

15 கிலோ மீட்டர் ரேடியசில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு எட்டு, 10, 12 போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நாம் அதிகமாக எதிர்பார்க்கிறோம். நம் உயிரையும், உடலையும், உடைமைகளையும் எல்லாவற்றையும் பாதுகாக்க வேண்டிய அந்த காவல்துறையினரின் எண்ணிக்கை போதாது என்ற ஒரு பெரிய குறை இருக்கிறது. வாகன வசதியே இல்லை. ஆகவே எல்லா காவல் நிலையங்களுக்கும் ஒரு ஜீப் வசதி செய்து கொடுக்க வேண்டும். சப்-இன்ஸ்பெக்டர் நிலையில் உள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு எல்லாம் ஒரு மோட்டார் சைக்கிள் நாம் கொடுக்கவேண்டும். உடனடியாகக் கொடுக்க முடியாவிட்டாலும், படிப்படியாக அவற்றை நாம் கட்டாயமாக கொண்டு வந்தால்தான், அவர்களுடைய சேவை நமக்கு அதிகமாகக் கிடைக்கும்.

ஒரு பொருள் களவாடப்பட்டுவிட்டது. ரூ. 300 மதிப்புள்ள சாமான் திருடுபோய் விட்டது என்று சொன்னால், போலீஸ் ஸ்டேஷனுக்கு 15 கிலோமீட்டர் தூரத்திற்குப் போக வேண்டும். ஒரு டாக்சி எடுத்து, 2 தடவை போவதற்கு டாக்சி வாடகையே ரூ. 300, ரூ. 500-க்கு வந்துவிடும். அந்த காவல் துறை அதிகாரிகள் எல்லாம் அவ்வளவு தூரத்திற்கு நடந்து போக முடியாது. சைக்கிளில் போகமுடியாது. பஸ்ஸிலும் போக முடியாது. அவர்களுக்கு மேன்பவர் இல்லை. காலையில் போனால் திரும்ப வரவேண்டும். ஆகவே அதற்கான நல்ல வாய்ப்புகளை நாம் உருவாக்கவேண்டும்.

அதேபோல் இந்த கள்ளச் சாராயத்தை—மலிவு விலை மதுக் கடைகளை நாம் ஆணையிட்டு நிறுத்தினோம். ஆனால் கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டி நடவடிக்கை எடுத்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை மனதார பாராட்டுகிறேன். இதுவரை எத்தனை முறையோ கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கான முயற்சிகள் எடுத்தபோதும் அது நல்லமுறையில் நடைபெறவில்லை. ஆனால் ஒரு காவல்





நிலையத்து ஏரியாவில் கள்ளச் சாராயத்தை வடிக்கவோ, விற்கவோ செய்தால், அந்த போலீஸ் அதிகாரிகளைக் கண்டிப்பேன் என்று சொன்னார்கள். அதிலிருந்து இந்த கள்ளச் சாராயம் இருந்த இடமே தெரியாத அளவிற்கு எங்கள் குமரி மாவட்டம் திகழ்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் அதே சமயத்தில் இன்னும் அதிக தீங்கு இழைக்கக்கூடிய ஒரு பொருள் அங்கு அதிகமாகிக் கொண்டு வருகிறது. அதுதான் அரிஷ்டம் என்று சொல்வது. சட்டப்படி ஒரு க்வாலிபைடு வைத்தியரிடம் எல். 2 லைசன்ஸ் இருக்குமானால் அவர் அரிஷ்டம் உற்பத்தி செய்யலாம். அந்த அரிஷ்டத்தை இன்னொரு க்வாலிபைடு வைத்தியருக்குத்தான் விற்கலாம். அப்போது அது 'comes under the Drugs Control Act. ஆனால் அந்த ட்ரக் இன்ஸ்பெக்டர் யாரும் அதைக் கவனிக்கவில்லை. இது எல்லா வெற்றிலை பாக்குக் கடைகளிலும் கிடைக்கிறது. போதைக்காக அதைக் குடிக்கிறார்கள். ஒரு மருந்தாக அதை உபயோகிக்கிறார்கள் என்று சொன்னால், 2 அவுன்ஸ், 4 அவுன்ஸ் என்ற அளவில் அதை உபயோகிக்கலாம். ஒதை 2, 3 புட்டிகள் வாங்கிக் குடிப்பது என்பது இப்போது சர்வசாதாரணம். எல்லா வெற்றிலை பாக்குக் கடைகளிலும் கிடைக்கின்ற அளவிற்கு இது மலிந்து இருக்கிறது. இதிலே காவல் துறையினர் சிறப்பு கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் ஏழைகளுக்கு கொடுக்க வேண்டியது தான். அரசாங்கத்தில் இலவசமாக நாம் செய்வது எல்லாம் ஏழைகளுக்குப் போய்ச் சேரக் கூடியதாக இருக்க வேண்டும். அது இலவசமாகக் கிடைக்கும் என்று சொன்னால், அதை எல்லோரும் பகிர்ந்து கொள்கிறோம். வசதி உள்ளவர்களுக்கு எல்லாம் அந்த இலவச சலுகைகள் கொடுப்பதனால் தான் நாடு உருப்படாமல் இவ்வளவு தூரத்திற்கு சீரழிந்து கொண்டு வருகிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதனால் ரூ. 550 கோடி நஷ்டம் என்று சொல்கிறார்கள். ஒரு பம்ப்செட் வைத்திருப்பவனுக்கு இலவச மின்சாரம் கொடுங்கள். 5 ஹார்ஸ் பவருக்கு வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு கொடுங்கள். ஆனால் 10, 15 பம்ப் செட்டுகள் வைத்திருப்பவர்கள் ஏழை விவசாயிகளா? அவர்கள் ஏன் கட்டணம் கட்டக்கூடாது? ஆகவே தயவு செய்து இலவச மின் இணைப்பை விவசாயிகளுக்குக் கொடுப்பதிலே, ஒரு பம்ப் செட் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் கொடுங்கள். அதற்கு மேல் வைத்திருப்பவர்களுக்குக் கட்டாயம் சார்ஜ் பண்ணித்தான் ஆக வேண்டும்.

சாலைகளைப் பொறுத்தவரையில் எங்களுடைய குமரி மாவட்டத்தில் மிகவும் மோசமாக இருக்கின்றன. உறுப்பினர் திரு. அம்மமுத்துப் பிள்ளை அவர்கள் கூட சொன்னார்கள். சாலையைப் பற்றித்தான் சொன்னார்கள். ஆனால் எல்லா சாலைகளும் அப்படித்தான் இருக்கின்றன. இதற்காக ரூ. 2.80 கோடி தேவைப்படுகிறது. ஆனால் அரசாங்கம் ஒதுக்கி இருப்பது

ரூ. 58 இலட்சம் தான். இது காணாது. இன்னும் கூடுதலாக நீங்கள் இதற்கு நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீருக்கு நீங்கள் கொடுத்திருக்கிற முக்கியத்துவத்தைப் பாராட்டுகிறேன். நாகர்கோவில் டவுனானது எப்போதும் குடிநீர் பற்றாக்குறை இருந்து, கஷ்டப்படுகின்ற ஒரு நகரம். அங்குள்ள குடிநீர்த் திட்டம் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் 75,000 ஜனத்தொகை உள்ளவர்களுக்காக உருவாக்கப்பட்ட திட்டம். ஆனால் இன்றைக்கு ஒரு இலட்சத்திற்கு மேல் வாக்காளர் இருக்கிறார்கள். நாகர்கோவில் டவுன் இப்போது டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆகியிருக்கிறது. 'ஃப்ளோட்டிங் பாபுலேஷன்' நிறைய இருக்கிறது. ஆனால் ஏற்கெனவே இருந்த திட்டத்தில் ஒரு முன்னேற்றமும் இல்லாததால் அடிக்கடி குடிநீர் பற்றாக்குறை வருகிறது. ஆகவே அங்கே நிரந்தரமாக இந்தக் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு பழையாற்றின் பக்கத்திலே 2, 3 பெரிய கிணறுகளை அமைத்து, அந்த நீரையும், கோணத்தில் ஒரு பெரிய கிணற்றையும் அமைத்து அந்த தண்ணீரையும் சேர்த்து சுத்தம் செய்து கொடுத்தால், நிரந்தரமாக அங்கே குடிநீர் பற்றாக்குறை குறையும் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று அந்த பெருஞ்சாணி அணை வந்த நாளிலிருந்து எங்கள் மாவட்டத்தில் குளங்கள் அவ்வளவும் பராமரிக்கப்படாமல் பி.டபுள்யூ.டி. யினர் முழுமையாக விட்டே விட்டார்கள். ஆக என்னவாயிற்று? எல்லா குளங்களிலும் இப்போது என்க்ரோச்மெண்ட். என்க்ரோச்மெண்ட் மட்டுமல்ல, குளங்களே தெரியாமல் நிறைந்து போய்விட்டது.

பிற்பகல் 12—30

அதனாலே நிலத்தடி நீர் வரமாட்டேன் என்கிறது. இந்தப் பெருஞ்சாணி பேச்சிப்பாறை இல்லாத காலத்திலேயே நெல்விளையும் நாடு நாஞ்சில் நாடு என்ற பெயர் பெற்ற இடம் அது. ஏனென்றால் அப்போது குளங்களின் மூலமாக பாசன வசதி இருந்தது. அதனாலே இந்த ஆக்கிரமிப்பு அவ்வளவையும் போர்க்கால நடவடிக்கை எடுத்து அகற்ற வேண்டும். அத்தோடு கரைகளைப் பலப்படுத்த வேண்டும். கரைகளைக் கொஞ்சம் தண்ணீர் தாராளமாகப் போட்டால்—எங்கள் மாவட்டத்திலே ஒரு விஷயம் என்னவென்றால், நத்தம் என்ற பிரிவே, புறம்போக்கே கிடையாது. ஏழை எளியவர்கள் யாராவது வந்து ஒரு சென்ட் பட்டா போட்டுக் கொடுங்கள் என்று கேட்டால், எங்களுக்கு நத்தம் நிலமே கிடையாது, ஆகையினர்லே இல்லை என்று விரட்டி விடுகிறார்கள். ஆகவே வாட்டர் கேட்ச்மென்ட் ஏரியாவை விட 6 அடி 7 அடி உயர்ந்த கரையாக இருக்குமானால் அதிலே ஒரு சென்ட் நிலத்தை யாராவது ஒரு ஏழை மக்களுக்கு, ஆதித்திராவிட பழங்குடி மக்களுக்கு விடு கட்ட கொடுக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோல ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு என்று எவ்வளவோ நன்மைகளை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் 'பேசிக்'காக அவர்களுக்கு ஒரு கம்யூனிட்டி சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால், 'அவர்கள் எங்களுக்கு ஒன்றுமே வேண்டாம் ஐயா, என்று போகக் கூடிய நிலைமையிலேதான் இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே நிலைமை அப்படித்தான் இருக்கிறது. மற்ற மாவட்டங்களிலேயும் நிலைமை அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு கம்யூனிட்டி சர்டிபிகேட்டிற்காக பத்து தடவை போகிறான், 15 தடவை போகிறான். ஆகையினால் அதிகாரிகள் அதிலே கொஞ்சம் கவனம் செலுத்தி உடனடியாகக் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும்.

தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்து கழகங்களைப்பற்றிச் சொன்னார்கள். நான் அதைப்பற்றி ரொம்ப சொல்ல விரும்பவில்லை. நேஷனலைசேஷன் வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினைக்கு நான் போகவில்லை. ஆனால் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே, அதேபோல நீலகிரி மாவட்டத்திலே 100-க்கு 100 சதவீதம் Nationalisation is there அப்படி முழுமையாக நேஷனலைசேஷன் பண்ணி வைத்து விட்டு தேவைக்கு நாங்கள் ஒரு ரூட் கேட்டால் கூட, ஒரு பஸ் கேட்டால் கூட it is not economical, விடமுடியாது என்று பதில் சொன்னால், நாங்கள் விடமாட்டோம். கார்ப்பொரேஷனிலேயும் கேட்போம் விட மாட்டோம், அரசாங்கத்திடமும் நாங்கள் போராடத்தான் செய்வோம், மாவட்ட ரீதியாக. 1988-க்குப்பிறகு பஸ்ஸுக்காக ஒரு ரூட் கூட தந்தது கிடையாது. இப்போது போய் கேட்டால் டீசல் ஷார்ட்டேஜ் என்று வேறு சொல்லுகிறார்கள். டீசல் ஷார்ட்டேஜ் 10 பெர்சன்ட் கட் என்று சொல்லி நிறுத்தி வைக்கிறார்கள். அது மட்டுமல்ல லாபகரமாக ஓட வேண்டும் என்றால் 50 பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய பஸ்ஸிலே 150 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு போனால் அந்த ரூட் லாபம் அங்கே தான் விடுவோம் என்று சொல்லுகிறான். சரி நீங்கள் லாபம் இல்லை என்று சொல்லக்கூடிய ரூட்டையாவது, உங்களால் முடியாது என்று சொல்லக் கூடிய ரூட்டையாவது நேசமணி கார்ப்பொரேஷன் தனியார்களுக்கு கொடுக்கட்டும். மற்ற மாவட்டங்களிலே உங்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை. தனியார் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. நீங்களும் தாராளமாக அதிலே போய்விடுகிறீர்கள். ஆனால் எங்கள் மாவட்டத்திலே வேறே தனியார் பஸ்களே கிடையாது. எங்கே போகவேண்டுமென்றாலும் இந்த நேசமணி கார்ப்பொரேஷனுக்குப் போய்த்தான் தொங்க வேண்டியிருக்கிறது. அவர்களிடம் ஒரு நாள், நேற்றைக்கு 3 தடவை இந்தப் பஸ் போகவில்லையே ஏன் என்று கேட்டால், நேற்றைக்கு முகூர்த்த நாள், லேபரர்ஸ் எல்லாம் லீவு எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள், அதனால் விட முடியவில்லை என்று பதில் சொல்லக்கூடிய அளவுக்கு அங்கே இருக்கிறது என்று சொன்னால், நாங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறோம்.

தேர்தல் நேரத்திலே எக்ஸ்டெண்ட் பண்ணித் தருவதாகச் சொல்லப்பட்டு அங்கே போன நேரத்திலே அடித்தான். இதற்கு ஒரு முடிவை நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த பத்து சதவீத

டீசல் கட்டையாவது எங்கள் மாவட்டத்திலே நீங்கள் எடுத்து தான் ஆகவேண்டும். அதே மாதிரி பப்ளிக் டிஸ்டிரிப்பியூஷன் சிஸ்டம். Public Distribution System for tne poor என்று இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 10 பெர்சன்ட் கட் என்பது தமிழக அரசால் போடப்பட்டது அல்ல, மத்திய அரசால் போடப்பட்டிருக்கிறது. மேலும் சிரமங்களை இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால் நீங்கள் சொல்லுகிறீர்கள். அத்தோடு நேசமணி போக்குவரத்துக் கழகத்தைப் பற்றிச் சொன்னார்கள். அரசாங்க போக்குவரத்து கழகங்கள் தான் இன்றைக்கு தமிழகம் முழுவதும் லாபகரமாக இல்லாத இடத்திலே கூட அதிகமாக ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். நீங்கள் ஒரு உண்மையான காரணத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். 88—லே இருந்து புதியதாக ஒரு இடம் கூட கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள். ஆனால் புரட்சித்தலைவியினுடைய அரசாங்கம் நிச்சயமாக அதற்கான ஏற்பாட்டை உங்களுக்குச் செய்யும்.

டாக்டர் எம். மோசஸ் : நன்றி. Public Distribution System is for the poor. அதிலே என்ன கஷ்டம் என்று பார்த்தால் ஏழை எளிய மக்களுக்கு, பாவப்பட்டவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்க வேண்டும், வசதி உள்ளவர்களுக்கு கொடுக்கக் கூடாது. ஆனால் இப்போது வசதி உள்ளவர்களுக்கும் கார்டுகள் தேவைப்படுகிறது. எனக்கும் கார்டு இல்லை. லைசன்ஸ் ஏதாவது எடுக்க வேண்டுமென்றால் ரேஷன் கார்டிலே உள்ள முதல் பக்கத்தைக் கொண்டு வா என்று சொல்லுகிறார்கள். பாஸ்-போர்ட் எடுக்க வேண்டுமென்றால் ரேஷன் கார்டிலே உள்ள கடைசி பக்கத்தைக் கொண்டு வா என்கிறான். என் பிள்ளைக்கு ஒரு கம்யூனிட்டி சர்டிபிகேட் எடுக்க வேண்டுமென்று சொன்னால் ரேஷன் கார்டைக் கொண்டு வா என்கிறான். எனக்கு ரேஷன் கார்டு இல்லாமல் வாழ முடியும். எனக்கு கடவுள் அந்த வசதியை தந்திருக்கிறான். எனக்கு எதற்கு ரேஷன் கார்டு. ஆகவே நான் பணிவோடு சொல்லிக் கொள்வதெல்லாம் ஏதாவது ஒரு லிமிட் வையுங்கள். 3000 ரூபாய் என்று வையுங்கள். 3,000 ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்தால் அவனுக்கு அடையாள அட்டை கொடுங்கள். ரேஷன் கார்டு அவனுக்கு தேவையில்லை. மூவாயிரத்திற்கு கீழே உள்ளவர்களுக்கு எல்லோருக்கும் ரேஷன் கார்டுகள் கொடுங்கள். ரேஷன் கார்டுகள் பிரச்சினை இதிலேயே தீர்ந்து போய்விடும். அதற்கு மேலே ரேஷன் கார்டுகள் கொடுப்பதினால் தான் ரேஷன் கார்டுகள் இல்லை என்ற குறையும் இருக்கிறது. எங்கேயோ ஒரு தவறு நடந்து விடுகிறது. முக்கியமாக நடந்திருக்





கக் கூடிய தவறு இதுதான். தேவை இல்லாதவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவை உள்ளவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆகவே நிச்சயமாக அதைச் செய்ய வேண்டும்.

அதைப்போன்று பாமாயில் கொடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாகர்கோவில் வந்தபோது சில பேர் அவரிடத்திலே சொன்னார்கள். அவரும் அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டார்கள். பத்திரிக்கைகளிலேயும் பார்த்தேன். ஆனால் அது நடக்கவில்லை. மீண்டும் முயன்று பாமாயில் கிடைப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

எவ்வளவு தான் நாம் ஹெல்த்துக்காக செலவு செய்தாலும் அந்த பப்ளிக் ஹெல்த் செக்டார் நாம் கட்டாயமாக பார்க்கவில்லை என்று சொன்னால் வியாதிகள் அதிகமாகத்தான் செய்யும். Sanitation is very very important. நாகர்கோவில் டவுனை எடுத்துக்கொண்டால் முன்னாலே 36 வார்டுகள் இருந்தன. அந்த 36 தான் இப்போது 44 ஆக பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. வார்டுக்கு ஐந்து துப்புறவுத் தொழிலாளி என்று பார்த்தால் 220 பேர் வேண்டும். ஆனால் அங்கே வேலை செய்பவர்கள் வெறும் 56 பேர்கள். அந்த டிஸ்ட்ரிக் ஹெல்த் ஆபீசரைக் கேட்டால் நான் என்ன சார் செய்ய முடியும், ஒரு ஆள் இரண்டு ஆட்களுக்கு மேலே அனுப்ப முடியவில்லை என்கிறார். ஆகவே அங்கு இந்த சானிடரி வொர்க்கர்களினுடைய நம்பரை 200-க்கு மேலே கூட்டுவதற்கு அரசாங்கம் ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல் மின் விளக்கு எரியவில்லை என்ற கம்ப்ளைண்ட். எங்களுடைய ஊரில் டவுனில் எங்கே போனாலும் லைட் எரியவில்லை லைட் எரியவில்லை என்கிறார்கள். உடனே போய் முனிசிபல் கமிஷனரை கூப்பிட்டுச் சொன்னால், உடனே போட்டுவிடுகிறார்கள். அடுத்த நாள் போனால் திரும்பவும் ஃப்யூஸ் ஆகி விடுகிறது. கேட்டால் பதில் சொல்கிறார்கள். இதை மிகவும் கவனமாகக் கேட்க வேண்டும். எங்களுக்கு அரசாங்கம் சொல்லியிருக்கிறது. குறைந்த விலை யார் சொல்கிறார்களோ அவர்களிடமிருந்து தான் நாம் வாங்க வேண்டுமென்று. குவாலிட்டி பற்றி எங்களுக்கு கவலை இல்லை, என்று சொல்கிறார்கள். நாம் எல்லோரும் ட்யூப் லைட் உபயோகிப்பவர்கள் தான். இரண்டு வருஷம் கேரண்டி உள்ள லைட் நமக்கு எவ்வளவோ தரமாகக் கிடைக்கிறது. விலை கூடினாலும், நல்ல தரமான ட்யூப் லைட்ஸ் வாங்கிப் போட்டால் இரண்டு வருஷம் அல்ல மூன்று வருஷங்கள் உபத்திரவம் இல்லாமல் இருக்கும். ஆகவே இதனை கவனத்தில் கொண்டு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

[டாக்டர் எம். மோசஸ்] [1991 செப்டம்பர் 6

அடுத்து எங்கள் மாவட்டத்திலே எந்த அரசாங்கம் வந்தாலும் என்ன கோபமோ தெரியவில்லை; நல்ல அதிகாரி யைத் தருகிறார்கள். இதுவரை இரண்டே இரண்டு கலெக்டர் கள் தான் மூன்று, மூன்று வருடங்கள் இருந்தார்கள். மதிப் பிற்குரிய அம்பாசங்கர் அவர்களும், மதிப்பிற்குரிய முத்துசாமி அவர்களும், மற்றபடி எங்களுக்கு வருஷத்திற்கு மூன்று கலெக்டர்கள். நீங்கள் கலெக்டர் கைக்கூலி வாங்கினால் அல்லது அதிகார துஷ்பிரயோகம் செய்தார் என்றால் மாற்றுங் கள். எங்களுக்கு கவலை இல்லை. இப்போது நல்ல ஆள் இருக்கிறார். நல்ல ஆளாக இருந்தால் உடனே நீங்கள் மாற்றி விடுகிறீர்கள். அது ஏன்? ஏன் எங்களிடம் இந்தக் கோபம் என்று தெரியவில்லை. எந்த அரசாங்கமாக இருந் தாலும் அப்படித்தான். கன்னியாகுமரி மாவட்டமா? அந்தக் கலெக்டரை மாற்று. ஒரு நல்ல ஆள் மூன்று வருடங்களாவது இருந்தால் தான் அந்த மாவட்டத்திற்கு நல்லது செய்ய முடியும். 6 மாதத்திற்கு ஒரு முறை, 9 மாதத்திற்கு ஒரு முறை என்று நீங்கள் ஒரு வருடத்திலே மூன்று கலெக்டரை மாற்றி விடுகிறீர்கள். நாங்கள் 3 வருடத்திற்கு ஒரு கலெக்டரை மாற்ற வேண்டும் என்று சொல்கிறோம்; நீங்கள் ஒரு வருடத்திற்கு மூன்று கலெக்டர்களை எங்களுக்குத் தருகிறீர்கள். இது மிகவும் சங்கடமான காரியம். எங்கள் ஜில்லாவில் எல்லாம் நல்ல காரியம் நடக்க வேண்டும் என்றால், அந்த மாதிரி கலெக்டர்களை மாற்றக் கூடாது என்று உங்களை பணிவோடு வேண்டிக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. இராம சுவாமி அவர்கள்.

* திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, உத்தம தாய், அன்னை சத்தியா ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வி, ஆதி லட்சுமியின் அவதாரம், அஷ்ட லட்சுமியின் திரு உருவம் பெண் இனத்தின் பெருந்தகை, பேருளின் இருப்பிடம், எங்கள் கண் முன்னே தோன்றும் கண் கண்ட தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம் எங்கள் தங்கத் தலைவி, இதய தெய்வமாகிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களில் விழுந்து வணங்கி என் முதற் பேச்சைத் தொடங்குகின்றேன்.

என்னை 45,000 வாக்குகளுக்கும் அதிகமான வித்தியாசத்தில் தேர்ந்தெடுத்த சங்கராபுரம் வாக்காளப் பெரு மக்களுக்கும், எனக்கு பேச வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 6] [திரு. சி. இராமசுவாமி]

எளிய மக்கள், பாட்டாளி மக்கள், பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் இவர்களுக்கான திட்டங்கள், குறிப்பாக பெண்களின் மேம்பாட்டுத் திட்டங் களை அறிவித்து அனைத்து தரப்பினரும் பாராட்டும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் கற்பக விருட்சமாகவும், காமதேனுவாகவும் இந்த நிதிநிலை அறிக்கை காட்சியளிக்கிறது. இறவா மருந்து என்னும் தேவர்கள் அருந்தக்கூடிய தேவாமிர்தமாக இந்த நிதிநிலை அறிக்கை ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் காட்சியளிக்கிறது.

(பிற்பகல் 12-40)

சட்டம் படித்தவர்களும், பட்டம் படித்தவர்களும், பண்பாளர்களும், அறிவாளர்களும், பாட்டாளி தொழிலாளர் களும் பாராட்டும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையானது முந்தைய அரசின் வார்த்தை ஜாலங்கள் போல் இல்லாமல் நல்ல பல மேம்பாட்டு திட்டங்களை அறிவித்து ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில், புரட்சிகரமாக, எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் தலைமையில் நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். ஏழை எளிய மக்கள், நடுத்தர குடும்பத் தினருக்கு வரிச் சலுகை அளித்து உள்ளார்கள். அதை நான் பாராட்டுகிறேன். வசதியானவர்களுக்கு கூடுதல் வரி விதித்து இருப்பதற்கு நான் பாராட்டுகிறேன்.

பெண்கள், குழந்தைகள், முதியோர் மேம்பாட்டுக்கான புதிய திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள் அதை நான் வரவேற் கிறேன். அரசு ஊழியர்களுக்கு சலுகை அளித்து இருக்கிறார்கள் அதை நான் வரவேற்கிறேன். குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டும் திட்டம், இதுபோன்ற எல்லாத் துறைகளிலும் புதுப் புது திட்டங் களை அறிவித்து இருக்கிறார்கள் அதை நான் பாராட்டுகிறேன். நகர்ப்புறத்தில் உள்ள சைக்கிள் ரிக்ஷா, மாட்டு வண்டிக்கு விற்பனை வரியை நீக்கியதை பாராட்டி வரவேற்கிறேன். இந்த பட்ஜெட்டில் தையல் இலை, பார்லிக்கு முழுச் சலுகை அளித்து இருப்பதை வரவேற்கிறேன். 6 வகை உயிர் காக்கும் மருந்துக்கு வரி ரத்து செய்து மக்கள் நலன் பெற அமைத்த இந்த பட்ஜெட்டை நான் வரவேற்கிறேன். மஞ்சள், மிளகாய், தனியா, புளி, சீயக்காய் இவைகளுக்கு வரி குறைப்பு சலுகை அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன். தமிழகத்தின் நலன் கருதி ஏழை எளிய மக்களுக்கு வரிச் சலுகை கொடுத்த, நல்லெண்ணத்தை உணர்ந்து உங்களைப் பாராட்டி மக்களுக்கு பயன்படும் பட்ஜெட்டாக அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன்.

பட்ஜெட் பற்றி ஏதேதோ நினைத்தவர்களுக்கெல்லாம் பிரமிப்பு ஊட்டும் வகையில் எல்லாத் தரப்பினரையும் புரிந்து மக்கள் நலனுக்காகப் போடப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை

நான் வரவேற்கின்றேன். இந்த ஒன்பதாவது நிதிக் குழுவில் தமிழகத்திற்கு போதுமான அளவுக்கு நிதி கிடைக்கவில்லை. தமிழகத்தின் திட்டங்களுக்கு ஒதுக்கியுள்ள நிதி மிகவும் குறைவாக இருந்தாலும் இந்த நிதிநிலை பற்றாக்குறை நேரத்திலும் தமிழக மக்களுக்கு ஒரு அற்புதமான, புரட்சிகரமான பட்ஜெட்டை அளித்த எங்கள் இதய தெய்வம் Not only a great R volutionary Leader but also a great administratcr என்பதை இந்த பட்ஜெட் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். It is a revclutionary budget என்பதை நான் கூறுகின்றேன்.

ஏழை எளிய மக்களுக்கு காமதேனுவாக, கற்பக விருட்சமாக இருக்கின்ற இந்த பட்ஜெட்டை எல்லா மக்களும் பாராட்ட வேண்டுமென்று கருதுகிறேன். கன்சைன்மெண்டு வரிக்கு உரிய சட்டத்தைப் போட மத்திய அரசு கால தாமதம் செய்தாலும் இந்த நிலையிலும் ஒரு நல்ல பட்ஜெட்டை எல்லோரும் பாராட்டக் கூடிய வகையில் சமர்ப்பித்து இருப்பதற்கு பாராட்டுகிறேன்.

என் சங்கராபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். கல்வராயன் மலையில் வாழும் மலைவாழ் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குடிநீர் பிரச்சினை மிகவும் மோசமாக இருக்கிறது. இந்த நிலை நீடித்தால் இன்னும் ஒரு மாதத்தில் மக்கள் மிகவும் கஷ்ட நிலைக்கு ஆளாகி விடுவார்கள். எனவே, தமிழக முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். சங்கராபுரம் தொகுதியில் உள்ள குடிநீர் பிரச்சினையை நல்ல முறையில் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாலை வசதிகள் மிகவும் மோசமாக உள்ளன. சாலைகளை செப்பனிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வராயன் மலையில் வசிக்கும் மலைவாழ் மக்கள் குடிநீர் இல்லாமலும், சாலை வசதி இல்லாமலும், சுகாதார வசதி இல்லாமலும், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பின் தங்கிய தொகுதியான சங்கராபுரம் தொகுதிக்கு, சங்கராபுரத்தில் ஒரு கலைக் கல்லூரியும், மூங்கில்துறைப்பட்டியில் ஒரு பொறியியல் கல்லூரியும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வராயன் மலையில் நிறைய மூங்கில் கிடைக்கிறது. எனவே, கல்வராயன் மலையில் ஒரு காகித தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வழக்கறிஞர்களின் நீண்ட நாள் கோரிக்கையான சப்—கோர்ட் ஒன்றை கள்ளக்குறிச்சியில் நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வராயன் மலையில் ஒரு டி.வி. ஸ்டேஷன் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





பொதுவாக, நான் தமிழகத்து முதலமைச்சரை பணிவோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன், வழக்கறிஞர்கள் இறந்தால் சென்னை உயர்நீதி மன்றம் 10 ஆயிரம் ரூபாய் மட்டுமே கொடுக்கிறார்கள். மிக குறைந்த தொகையைக் கொடுக்கிறார்கள். எனவே வழக்கறிஞர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வழக்கறிஞர்களின் என்ரோல்மெண்டு பீஸ் பணம் எக்கச்சக்கமாக கோடிக் கணக்கில் சேர்ந்திருக்கிறது. எனவே நலிவுற்ற வழக்கறிஞர்கள், வழக்குகள் இல்லாத வழக்கறிஞர்களுக்கு நீண்ட கால தவணையாகக் கடன் கொடுத்து அவர்கள் வாழ்வு மேம்பட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-45)

சங்கராபுரம் தொகுதியில் தண்ணீர் பஞ்சம் மிகவும் கடுமையாக உள்ளது. எனவே, அந்த தண்ணீர் பஞ்சத்தை நல்ல முறையில் தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வராயன் மலையில் வாழும் மக்கள் ரேஷன் கார்டுகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே சாலை வசதியும் இல்லை. நியாய விலைக் கடைகளும் சரியான முறையில் இல்லை. அங்கே நியாய விலைக் கடைகளை அதிக அளவுக்கு ஏற்படுத்தி ரேஷன் கார்டுகள் இல்லாதவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். கள்ளக்குறிச்சியிலும், சங்கராபுரத்திலும் எஸ்.டி.டீ. வசதி இல்லை. அதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சங்கராபுரத்தில் ஒரு நவீன மருத்துவ மனையைத் திறந்து ஏழை எளிய மக்களுக்கு சுகாதார வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூங்கில்துறைப்பட்டி சர்க்கரை ஆலையை இப்போது எக்ஸ்பான்ஷன் செய்வதாகச் சொல்கிறார்கள். இந்த சர்க்கரை ஆலை இப்போது நல்ல இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. சர்க்கரை ஆலையில் ஒரு ஹவருக்கு 100 டன் வீதம் ஒரு நாளைக்கு 22 மணி நேரத்தில் 2,200 டன் சர்க்கரை, கரும்பு கிரஷ் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதில்லை. எனவே, எக்ஸ்பான்ஷன் தேவையில்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எக்ஸ்பான்ஷன் செய்வதால், (விரிவுபடுத்துவதால்) 15 கோடி ரூபாய் அளவுக்கு செலவழிக்க வேண்டி வரும். அந்த 15 கோடி ரூபாயை செலவிட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற பாய்லரில் நல்ல முறையில் ஸ்டீம் இருக்கிறது ; சர்க்கரை உற்பத்தி செய்கிறது ; மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. எனவே, அவர்களுக்குக் கொடுத்துள்ள 22 மணி நேரத்தில் சர்க்கரை ஆலையில் மணி ஒன்றுக்கு 100 டன் வீதம் அரைத்தால் ஒரு நாளைக்கு 2,200 டன் அரைக்கலாம். புதிதாக சர்க்கரை ஆலையை

[திரு. சி. இராமசுவாமி] [1991 செப்டம்பர் 6

விரிவுபடுத்தினால் 300 டன் தான் அதிகமாக அரைக்க முடியும். எனவே, அந்த 300 டன்னுக்காக 15 கோடி ரூபாயை செலவு செய்ய வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கி, சர்க்கரை ஆலையின் எக்ஸ்பான்ஷன் திட்டத்தை உருவாக்கி அரசுக்குக் கொண்டு வருகிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படி இருப்பின் அதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நாளொன் றுக்கு இப்போது அவர்கள் அரைப்பது 2,200 டன் அரைப் பதற்கு பதிலாக 2,000 டன் கூட அரைப்பதில்லை, கரும்பை கிரஷ் செய்வதில்லை. எனவே, அதை எக்ஸ்பான்ஷன் செய்வதால் அரசாங்கத்திற்கு நஷ்டமேயொழிய லாபம் இல்லை. எனவே, தமிழக அரசை நான் கேட்டுக் கொள்வது இருக்கின்ற பாய்லரிலே ஒரு மணிக்கு 100 டன் விதம் 22 மணி நேரத்திற்கு 2,200 டன் அரைக்கக் கூடிய பாய்லர் இருப்பதால் எக்ஸ்பான்ஷன் வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபாதையில் கடை வைத்திருந்தவர்கள், அதாவது பூ விற்பவர்கள், காய்கறி விற்பவர்கள் காவல் துறையாலும், முந்தைய அரசாலும் அகற்றப்பட்டிருந்தார்கள் அவர் களுக்கு இப்போது குறைந்த வட்டியில் கடன் வசதி செய்து பெண்கள் மேம்பாடு திட்டத்தை அறிவித்த புரட்சித் தலைவி, இதய தெய்வம் அவர்களைப் பாராட்டுகிறேன். கர்ப்பிணிப் பெண்களுக்கு, பாலூட்டுகிற தாய்மார்களுக்கு 8 மாதங் களுக்கு இலவச சத்துணவும், சுகாதார வசதிகளையும் செய்து தந்த கருணை உள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுகிறேன். ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்று 5 ஆண்டுகளுக்குள் 10 இலட்சம் வீடுகள் கட்டப்படுகிற திட்டத்தைப் பாராட்டுகிறேன்.

தீர்க்கப்படாத அரசு ஊழியர்களின் விவகாரத்தைத் தீர்க்க அலுவலர் குழு அமைப்பதைப் பாராட்டுகிறேன். குடும்ப பாதுகாப்பு நிதியை 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி யதைப் பாராட்டுகிறேன். வீடு கட்ட முன் பணம் கிடைக்க, கூடுதலாக 10 கோடி ரூபாய் வரிச் சலுகைகள் அளித்திருப்பதை பாராட்டுகிறேன். ஆண்டுக்கு ரூபாய் 5 மட்டுமே செலுத்தி னால், அறுவை சிகிச்சைக்கு ரூபாய் 25 ஆயிரம் வரையில் மானிய உதவி அளிப்பதைப் பாராட்டுகிறேன். மகளிர் மேம்பாட்டுக்கென, அவர்களுடைய நல்வாழ்வுக்கென, 170 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி இருப்பதையும் பாராட்டுகிறேன். எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்திற்கு ரூபாய் 235 கோடி ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். சத்துணவு மையங்களில் இளம் சிறுவர்களுக்கும் கல்விப் பயிற்சி அளிக்கப்படும் என்கிற திட்டத்தைப் பாராட்டுகிறேன். முதியோருக்கு மீண்டும் இலவச அரிசி அளிக்கும் திட்டத்தை யும் பாராட்டுகிறேன். ஆண்டுக்கு இரண்டு முறை இலவச வேட்டி, சேலை கொடுப்பதையும் பாராட்டுகிறேன். எனவே,



1991 செப்டம்பர் 6] [திரு. சி. இராமசுவாமி]

எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. ஆர். சிங்காரம் அவர்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிதி அமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் விளக்க விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளித்த பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் சுருக்கமாக சில வார்த்தைகளோடு முடிக்க நான் எண்ணு கிறேன். ரூ. 1,600 கோடி திட்டத்தில், தமிழகத்தினுடைய புரட்சித் தலைவியாம், செல்வி ஜெயலலிதா அவர்கள் தாய்மார்களுக்கும், ஏழைகளுக்கும், நடுத்தர வர்க்கத்திற்கும், ஆதி திராவிட மக்களுக்கும், மீனவ மக்களுக்கும் மிகப் பெரிய அளவில் வரப் பிரசாதமான ஒரு பட்ஜெட்டை கொடுத்து இருக்கின்றார்கள். இதிலே, ஏழையெளிய மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள், ஆதி திராவிட மக்கள், தாய்மார்கள் படுகின்ற கஷ்டங்கள் இதையெல்லாம், அவர்களுடைய நாடி நரம்புகளையெல்லாம் பிடித்துப் பார்த்து அந்த அளவிற்கு மக்களெல்லாம் மகிழ்கின்ற அளவிற்கு மிகப் பெரிய நல்லதொரு பட்ஜெட்டை, மிகப் பல சிரமங்களுக்கு இடையில் பல்வேறு அணுகு முறையில் இந்த பட்ஜெட்டை தயாரித்து இருக்கிறார்கள், அதற்காக நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 12-50)

எனக்கு ஒரு குறை உண்டு. விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பல முறை பேசியிருக் கிறோம். விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய் வோம் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையிலே கூட சொல்லியிருந்தார்கள் ஆனால் அது இங்கே காணப்படவில்லை. இருந்தாலும் விரைவிலே இந்தப் பிரச்சனைத் தீர்க்கப்படும் என்று நம்புகிறேன். அதற்கான விவரங்களைக் கேட்டிருப் பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். விரைவிலே விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்த வரையில் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னதாக இருந்த அரசுக்கு இந்த விவசாயிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டு மென்ற உணர்வோ முயற்சியோ இல்லாதபோது, அப்போ

[திரு. ஆர். சிங்காரம்] [1991 செப்டம்பர் 6

இருந்த மத்திய அரசு 10,000 ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்வதாகச் சொல்லியது. அதைக் கூட முழுமையாகப் பெற்று, விவசாயிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும், அவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற உணர்வற்ற நிலையில். இவர்களாக எதுவும் செய்யாமல் ஏதோ அவர்கள் கொடுப்பதை வாங்கி இவர்களுக்குக் கொடுக்கின்ற முறையில் 'போஸ்டாபீஸ்' வேலை செய்வதைப் போல செய்து வந்தார்கள். ஆனால் இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் கடனைத் தள்ளுபடி செய்கின்ற அந்தப் பாங்கினை நாம் பெற்றிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் விவசாயிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னால், விவசாயிகள் பற்றி என்னதான் நினைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. 1981, 1982, 1983 1984, 1985 ஆம் ஆண்டுகளை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு ஆண்டும் கடுமையான புயல், வறட்சி, வெள்ளம் என்று வந்து கொண்டே இருந்தது. ஒரு வருஷம் கடுமையான புயல் அடித்து பயிர்கள் சேதம் அடைந்ததால் அப்போது கூட்டுறவுச் சங்கக் கடனைத் திருப்பி செலுத்த முடியவில்லை. இருந்தாலும் கடனைத் தள்ளுபடி செய்யாமல் 'கன்வர்ஷன்' என்ற முறையில் கடனை மாற்றி வைத்தோம். அடுத்த ஆண்டு கடுமையான வறட்சி பயிர் போட்டு, எல்லாம் போய் விட்டது. கூட்டுறவுச் சங்கக் கடனைக் கட்ட முடியவில்லை. அந்தக் கடனையும் மாற்றி வைத்தோம். அடுத்த ஆண்டு கடுமையான வெள்ளம் அதனால் பயிர்கள் எல்லாம் அழுகி, முழுமையாகக் 'குளோசல்' ஆகிவிட்டன.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே நாம் எல்லோரும் போராட்டம் நடத்தி அவர்களைக் கேட்டோம். அப்போது அவர்கள் 5 ஏக்கருக்குக் கீழே உள்ளவர்களுடைய கடனை எல்லாம் தள்ளுபடி செய்து கொடுத்தார்கள். ஆனால் 5 ஏக்கருக்கு மேல் இருக்கிற விவசாயிகள் பெரிய விவசாயிகள் என்று சொல்லி, அவர்களுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. ஆனால் அவர்கள் கட்ட வேண்டிய 5,000 ரூபாய்க்கு இன்றைக்குப் பார்க்கும்போது 15,000 ரூபாய் வந்திருக்கிறது. 5,000 ரூபாய்க்கு வட்டி, அபராத வட்டி, அதன் மேல் போட்ட ** இப்படி எல்லாம் சேர்த்து 15,000 ரூபாய் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் வட்டி என்று சொன்னது இருக்கட்டும். அடுத்துச் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1991 செப்டம்பர் 6]

திரு. ஆர். சிங்காரம் : விவசாயிகளுடைய வேதனையைப் பற்றிச் சொன்னதால் அந்த வார்த்தை வந்து விட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குட்டி வட்டி என்று இருக்கலாம். ** என்று இருக்கக்கூடாது (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம் : நன்றி. கடந்த ஆண்டுகளில் அந்த அளவுக்கு கடுமையான வெள்ளம், கடுமையான புயல், கடுமையான வறட்சி என்று இப்படி மாறி, மாறி வந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொடர்ந்து ஒரு சாகுபடி கூட செய்ய முடியவில்லை. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் வரவில்லை ; காவிரி பாசனத்தை நம்பியிருந்தவர்கள் பயிர் செய்ய முடியவில்லை. அதனால் போராட்டம் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையிலும் உற்பத்தி செய்யப்பட்ட நெல் விலை உயரவில்லை. போராட்டம் நடத்தப்பட்டது. இதை எல்லாம் கருதிப் பார்த்து, இந்த அரசு விவசாயிகளுடைய பிரச்சனைகளுக்கு ஒரு நல்ல முடிவு காண வேண்டும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய உணர்வுகளைப் புரிந்து, கொண்டு, ஏதோ பெரிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் சிறு விவசாயிகள் என்று பார்க்காமல் சலுகைகளை அளிக்க முன்வர வேண்டும். பெரிய விவசாயிகளுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் நிறைய வருமானம் வருகிறது என்ற எண்ணத்தை தயவுசெய்து மாற்றிக்கொள்ள வேண்டும். ஒரு ஏக்கர் வைத்திருக்கிற சிறிய விவசாயிக்கு ஆயிரம் ரூபாய் நஷ்டம் வருகிறது என்றால் 5 ஏக்கர் வைத்திருக்கிற நடுத்தர விவசாயிக்கு 5,000 ரூபாய் நஷ்டம் வருகிறது. 10 ஏக்கர் வைத்திருக்கிற பெரிய விவசாயிக்கு 10,000 ரூபாய் நஷ்டம் வருகிறது. இதுதான் விவசாயிகளைப் பொறுத்த நிலைமை. ஆகையால் சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்ற உணர்வுகளை மாற்றி, எல்லா விவசாயிகளுக்கும், வட்டி, அபராத வட்டிகளையாவது தள்ளுபடி செய்திருக்கலாம். இந்த வட்டியைத் தள்ளுபடி செய்துவிட்டு, வாங்கிய கடனை மூன்று ஆண்டுகளுக்கு 'கன்வர்ஷன்' செய்து கொடுத்து பயிர்க் கடன்கள் வழங்க வழிவகை செய்யலாம். இதனால் நலிந்து போன கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிர் அளிக்கலாம். ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலையை நீங்கள் தயவுசெய்து மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று, என்னுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு இருக்கின்ற, தமிழகத்தினுடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களை நான் கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்த நிதியமைச்சரவர்களை நான் கேட்டுக்கொண்டு, இந்த அமைச்சரவையையும் கேட்டுக் கொண்டு, நான் அடுத்த பிரச்சினைக்குப் போகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஆர். சிங்காரம்] [1991 செப்டம்பர் 6

பிற்பகல் 12-55

இங்கே மதுவிலக்குப் பிரச்சினையைப் பற்றி நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தக் கள்ளச் சாராயத்தை யாராலும் ஒழிக்க முடியாது; ஒழிக்கவே முடியாது. ஒழிக்கவே முடியாது என்று சொன்னவர்களெல்லாம் (குறுக்கீடு) சொல்கிறேன். கேளுங்கள், சொல்ல வருகிறேன், பொறுங்கள். — என்று சொன்னவர்கள் எல்லாம்—மூக்கிலே விரல் வைத்துப் பேசுகின்ற அளவிற்குத் தமிழகத்திலே கள்ளச் சாராயமே அற்றுப் போய்விட்டது புரட்சித் தலைவி ஆட்சியில் என்று சொல்லுகின்ற அளவிற்கு இன்று 90 சதவீதம் கிராமங் களிலே கள்ளச்சாராயம் காலி (குறுக்கீடு) கேட்டுக்கொண்டு இருங்கள். ஆக, ஏன், இதே புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டார்கள். ஆனால், யாரும் கேட்கவில்லை. ஆனால், அதற்கு மாறாகச் சற்று அதிகமாகிவிட்டது. அதன் பிறகு, யாருடைய எந்த யோசனையையும் கேட்காமல், புரட்சித் தலைவி, அவர்கள், தானே சிந்தித்து இந்த அடிப்படைக்குக் காரணமாக இருக்கின்ற இவர்களை சரியான ஒரு சஸ்பென்ட் நடவடிக்கை எடுத்து உத்தரவிட்டால்தான் இது நடக்கும் என்று கருதித்தான். வி.ஏ.ஓ. சஸ்பென்ட், சப்-இன்ஸ்பெக்டர் சஸ்பென்ட் என்று போட்டவுடன், தண்டோராக்கள் பறக் கின்றன. தண்டோரா, தண்டோரா, தண்டோரா. கள்ளச் சாராயம் காய்ச்சினால் நடவடிக்கை என்றெல்லாம் தண்டோரா பறக்கின்றது. சப்-இன்ஸ்பெக்டர் ஓடி ஓடிப்போய், கள்ளச் சாராயம் யாரும் காய்ச்சக் கூடாது என்று, மாமூல் வாங்கியவர் களெல்லாம் அங்கே ஓடிவிட்டார்கள். ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலையில், புரட்சித் தலைவி உத்தரவு போட்டு விட்டார்கள். ஆக, இனிமேல் நாம் சமாளிக்க முடியாது. இந்த உத்தியோகம் போய் விடும்போல் இருக்கிறது. மூடடா கடையை, மூடடா கடையை, சீக்கிரம் மூடடா என்கின்ற அளவிற்குப் பரப்பரப் பான சூழ்நிலையை ஏற்படுத்தி, தமிழகத்தில் கள்ளச் சாராயம் இல்லாத அளவிற்குக் கொண்டு வருவதற்கான தீவிர முயற் சியை எடுத்து நடவடிக்கை எடுத்த புரட்சித் தலைவியை மன்தார, இதயமாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆனால், அந்தப் போலீஸ் ஸ்டேஷனிலே தற்பொழுது சப்-இன்ஸ்பெக்டரை மாற்றியிருக்கிறோம். ஒழுங்கு படுத்துகிறோம். ஆனால், மாமூல் வாங்கிய அந்தப் போலீஸ் காரர்கள், அந்தக் கரங்களெல்லாம் அப்படியே இருக்கின்றன. பழக்கப்பட்டவர்கள். யார் சாராயம் காய்ச்சுவார்கள் என்று இவர்களுக்குத் தெரியும். அவர்கள் அங்கே இருக்கின்றார்கள். புரட்சித் தலைவியினுடைய உத்தரவினால் ஏதும் ஆகிவிடுமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். ஏதாவது இடையில் ஒரு மாதம், இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் ஏதாவது பெறலாம் என்று யாராவது அரசியல்வாதிகள் லையிட்டு ஏதாவது செய்வார்களோ [illegible] அவர்கள்



1991 செப்டம்பர் 6] [திரு. ஆர். சிங்காரம்]

மீண்டும் பழக்கப்பட்ட போலீஸ்காரர்கள் போல் மாமூல் வாங்கிக் கொண்டு காய்ச்சச் சொல்லுவார்கள். ஆக, அந்தப் போலீஸ் ஸ்டேஷனிலே இருக்கின்ற அத்தனை போலீஸ்காரர் களையும், ஒரு மூன்று நான்கு போலீஸ் ஸ்டேஷன்கள் தள்ளி மாற்றுங்கள். அங்கே இருப்பவர்களை இங்கே போடுங்கள். இவர்கள் அதே பாணியில்தான் இருப்பார்கள் என்றாலும் ஒரு பய உணர்வு ஏற்படும். ஆக, இதைச் செய்தால் நாம் சமாளிக்க முடியாது என்ற உணர்வு ஏற்படும். ஆகவே தான், அப்படிப்பவர்களை இங்கே இருந்து அங்கே மாற்றி, அங்கேயிருந்து இங்கே மாற்றி, இப்படிப்பட்ட ஒரு சீர்திருத் தத்தைச் செய்தால்தான் இதை ஒழுங்குபடுத்த முடியும்.

அதற்கும் மேலாக, பொதுமக்கள், அதிகாரிகள் கொண்ட கமிட்டியை ஊர் ஊராக, ஊராட்சி வாரியாக அமைத்து, இந்தக் கமிட்டிக்கு அதிகாரங்களைக் கொடுத்து அந்த மாதிரி மக்களுடைய ஒரு உணர்வை ஏற்றுக்கொள்ளு கின்ற, மக்கள் ஏற்றுக் கொள்ளுகின்ற கமிட்டியாக அமைத்து, சீர் செய்தால் நிச்சயமாக நூற்றுக்கு நூறு ஒழிந்து விடும்.

பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், கள்ளச் சாரா யத்தைப் பாதி ஒழித்துவிட்டார்களே, இந்தப் பொம்பளைக்கு என்ன தெரியும் என்று சொன்னவர்களெல்லாம் இன்று கள்ளச் சாராயத்தை ஒழித்து விட்டார்களே, நமது பிழைப்பு போய் விட்டதே என்றெல்லாம் முனகிக் கொண்டு இருக்கிறார் கள். அப்படிப்பட்ட அவர்களுக்கெல்லாம் சரியான பாடம் கொடுக்கின்ற முறையில் தொடர்ந்து இதைச் செயல்படுத்த வேண்டும். இங்கே பிராந்திக் கடையையும் மூடிவிட்டு ஒருவழியாக மது விலக்கை அமல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விடுதலைப் புலிகள். விடுதலைப் புலிகளைப் பற்றிப் புரட்சித் தலைவி அவர்களும், எங்களுடைய அருமைத் தலைவர், தானைத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களும் பல்வேறு முறைகளில், பல்வேறு நேரங்களில் துணிச்ச லாக, தைரியமாக, ஹிட் லிஸ்டிலே பெயர் இருந்தாலும், தைரியமாக எடுத்துச் சொல்லி, விடுதலைப் புலிகளை ஒழித்த ஒரு பெருமை, அருமைத் தலைவி, புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களைச் சாரும் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) உன்னைக் கொன்று விடுவேன் என்றெல்லாம் மிரட்டியவர்கள், எந்த நேரத்திலும் உன்னைக் காலி செய்து விடுவேன் என்று மிரட்டிய இதே விடுதலைப் புலிகள் தமிழகத்திலே இன்று ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்து கொண்டிருக் கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த முதல்வர் சொன்னார் 'நாங்களெல்லாம் பேசினோம் சட்டமன்றத்திலே; எங்கு பார்த் தாலும், ஆயுதக் கலாச்சாரம் இருக்கிறது. அங்கே முகாம் இருக்கிறது, என்று அருமைத் தலைவர் வாழப்பாடி அவர்கள்

[திரு. ஆர். சிங்காரம்] [1991 செப்டம்பர் 6

சொன்னார்கள். புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா
அவர்கள் சொன்னார்கள். நாங்களும் சட்டமன்றத்திலே
சொன்னோம். அவர்கள் சொன்னார்கள், அவர்களுக்கு இங்கே
வேலை இல்லை ; அவர்கள் அங்கே ராஜாக்களாக இருக்கிறார்
கள்; அவர்கள் அங்கே மந்திரிகளாக இருக்கிறார்கள்; அவர்
களுக்குச் சகலவிதமான வசதிகளும் அங்கே கிடைக்கின்றன;
இங்கே வர வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்
கள். அதன் பிறகு புரட்சித் தலைவி ஆட்சி ஏற்றபிறகு
என்ன ஆயிற்று ? எந்த எந்த இடங்களிலே, எங்கெங்கே
மெஷின்கள் இருந்தன? எந்தெந்த அமைப்புகள் எங்கெங்கே
இருந்தன ? என்ன நிகழ்ச்சிகள் நடந்தன? என்னுடைய
அருமைத் தலைவர், தானைத் தலைவர், உலகம் போற்றும்
உத்தமத் தலைவர் திரு. இராஜீவ் காந்தியை நாம் பறிகொடுக்
கின்ற அளவுக்கு அன்று திராவிட முன்னேற்றக் கழக அரசு
இருந்து; விடுதலைப் புலிகளை ஊக்குவித்து, இன்று கொலை
செய்யப்பட்டிருப்பதற்குக் காரணமே, அந்த ஆட்சிதான் என்று
நான் பகிரங்கமாக சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

(திரு. இளம்வழுதி அவர்கள் தம் இருக்கையை விட்டு எழுந்தார்.)

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் அமர வேண்டும்.
அவருடைய கருத்தைச் சொல்கிறார். உங்களுக்கு அந்த
வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசலாம். தயவுசெய்து அமருங்
கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள்
தொடர்ந்து பேசுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : அதே நேரத்தில், இன்று கடலோரப்
பகுதியிலே 'பெல்ட்' எல்லாம், விடுதலைப் புலிகள் உள்ளே
வராத அளவுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. என்
னுடைய தொகுதி மல்லிப்பட்டிணம் பகுதியிலே தேவி படை
....(உறுப்பினர் திரு. இளம் வழுதி நின்று கொண்டே இருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் அமர வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன். குறுக்கிடக் கூடாது. தயவு
செய்து உறுப்பினர்கள் அமர வேண்டும்.

திரு. இளம்வழுதி: எங்கள் கட்சியை குறை சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லலாம்.
அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உங்களுக்கு
வாய்ப்பு வரும்போது நீங்கள் அதற்கு பதில் சொல்லலாம்.
ஆகவே, நீங்கள் இதிலே உணர்ச்சிவசப்பட வேண்டிய அவசியமே
இல்லை. உறுப்பினர் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

(உறுப்பினர்கள் திரு.அ. செல்வராசன், திரு. இளம்வழுதி
ஆகிய இருவரும் நின்று கொண்டே இருந்தனர்.)



1991 செப்டம்பர் 6]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அமர வேண்டுமென்று
நான் கேட்டு கொள்கிறேன்.

திரு. அ. செல்வராசன் : நாங்கள் சொல்வதை நீங்கள்
ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, நாங்கள் வெளிநடப்புச்
செய்கிறோம்.

திரு. இளம்வழுதி : எங்கள் கட்சியை எவ்வாறு குறை
சொல்லலாம் ?

திரு. ஆர். சிங்காரம் : அன்று அவ்வாறு அவர் சொன்னதற்கு
நான் காரணம் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள், அவருடைய தலைவர்
வெளிநடப்பு செய்கிறேன் என்று சொன்னதற்குப் பின்பும்
பேசுவது முறையல்ல. அதை அவருடைய தலைவர் அனுமதிக்
கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இளம்வழுதி : அதைத்தான் நானும் சொல்லி
வெளிநடப்பு செய்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச்
செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. ஆர். சிங்காரம் : அன்று இதே அவையிலே நாங்கள்
இந்தப் பிரச்சினையைக் கிளப்பினோம். இந்தப் பிரச்சினையை
கொண்டு வந்தோம். அன்று என்ன சொன்னார், அன்றைய
முதல்வர்? இங்கே தமிழகத்திலே அவர்களுக்கு வேலை இல்லை.
இங்கு அவர்கள் முகாமே கிடையாது; அங்கே அவர்கள் ராஜாக்
களாக இருக்கிறார்கள்; மந்திரிகளாக இருக்கிறார்கள். அவர்
களுக்கு இங்கே வேலை இல்லை என்று சொன்னாரா? இல்லையா?
ஆதாரம் என்னிடம் இருக்கிறது. அதன் பிறகு, புரட்சித் தலைவி
ஆட்சிக்கு வந்த பிறகு, எந்த இடத்திலே முகாம் இருந்தது;
யார் யாரை எங்கெங்கே கைது செய்தார்கள்; அதனால் நடந்த
விளைவு என்ன என்பதையெல்லாம் நாம் பார்த்துக் கொண்
டிருக்கிறோம். அது எந்த ஆட்சி? தி.மு.க. ஆட்சிதானே? வேறு
ஆட்சியா?

ஆக, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு அடிப்படைக் காரண
மாக இருந்தவர்களை நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினேன்.
அந்தச் சூழ்நிலையில், கடற்கரை பூராவும் நின்று, உள்ளே
விடுதலைப் புலிகள் நுழையாதபடி 'பெல்ட்'—'ஸ்ட்ராங்' கான
'பெல்ட்' அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு எங்கே
விடுதலைப் புலிகளைப் பிடிக்க வேண்டுமென்று,
பார்த்தாலும்,

தன் உயிர் போனாலும் பரவாயில்லை என்று ஒரு துணிவான நடவடிக்கை எடுத்திருக்கிறார் ஒரு பெண் முதலமைச்சர் என்று சொன்னால், அதைப் பாராட்ட வேண்டும்.

ஆக, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்—அது பற்றி நீங்கள் எல்லாம்—சிலபேர் சாதாரணமாக நினைக்கலாம்—அதில் எவ்வளவு பெரிய 'சீரியஸ் மேட்டர்' இருக்கிறது என்பதை சற்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இன்று திரு. வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களைச் சென்று பார்க்க வேண்டுமென்று சொன்னால்கூட, போலீசாரை சோதித்து அனுப்புகிறார்கள். காரணம், தன் உயிருக்கு அவர் பயப்படவில்லை. தைரியமாக துணிச்சலாக அறிக்கை விட்டுக் கொண்டு, விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொண்டிருக்கிற அளவுக்கு இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு இன்று புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்து, மக்களுக்கு—சாதாரண மக்களுக்கு—சாதாரணமான மீனவ மக்களுக்கு, தொழில் செய்கின்ற அளவுக்கு பாதுகாப்புக் கொடுத்த புரட்சித் தலைவியை மீண்டும், மீண்டும் பாராட்டுகிறேன்.

அடுத்து, இங்கே நேவிப் படை ஒன்று அமைக்கப்பட்டது. நேவிப் படை, விடுதலைப் புலிகளை உள்ளே விடாமல் இருப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சில தவறுகள் செய்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தயவு செய்து உடனடியாக அதிலே தலையிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்கள் சாதாரணமாக 'கார்டு' இல்லாமல் சென்றிருந்தால், உடனடியாக கடல் ஓரத்தில் இருப்பவர்களைப் பிடித்து அடிப்பது, தொல்லைக் கொடுப்பது போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் மல்லிப்பட்டினம், அதிராமப்பட்டணம், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளிலெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. தயவு செய்து உடனே ஒரு 'வார்ன்' செய்து, அப்படியெல்லாம் அவர்கள் செய்ய வேண்டாமென்று உத்தரவிட வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இன்று காவிரித் தாய்—'ஒரிஜினல்' தாய் சுப்ரீம் கோர்ட்டிலே போயிருக்கிறாள். 'ஒரிஜினல்' தாய் சுப்ரீம் கோர்ட்டிலே போய் நிற்கிறாள். அவளுடைய நிழல் தாய் அங்கே இருந்து ஓடிவந்து, ''என்னுடைய அருமைத் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களே, நீங்கள் எங்களுக்காக ராஜினாமா செய்து விட்டீர்களா? உங்களுடைய ராஜினாமாவுக்கு நாங்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம். இதற்காகப் போராடிய புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களின் மடியிலே போய் தவழ்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, வாழப்பாடி ராமமூர்த்தியை கைகொடுத்து, புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களின் மடியிலே தவழ்ந்த காரணத்





தினால், 3 லட்சம் கன அடி— வரலாறு காணாத புதுமை, மேட்டூரிலே 3 லட்சம் கன அடி—தண்ணீர் பொங்கி வழிந்து, தஞ்சை மாவட்ட மக்கள் எல்லாம் மகிழ்ச்சிக் கடலிலே பொங்கு கிற அளவுக்கு அங்கே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இரண்டு போக சாகுபடி செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு யோகம் வேண்டும். சில பேர் ஆட்சிக்கு வந்தால், மழையே பொழியாது. (சிரிப்பு).

பிற்பகல் 1.05

சிலபேர் ஆட்சிக்கு வந்தால்—மேட்டூரிலே 22 அடி இருக்கிறது. 20 அடி, 18 அடி, 14 அடி போய் விடும். அப்படி குறைந்து செல்கிற ஒரு யோகமும் இருக்கிறது. புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் விறு, விறு என்று 22, 30, 42, 50, 62, 70, 82 என்று போய்விடும். ஆனால் அதையெல்லாம் மீறி இராஜீவ் காந்தி யோகம், புரட்சித் தலைவர் யோகம் எல்லா யோகங்களையும் மீறி புரட்சித் தலைவியுடைய யோகம் மேலே போய்விட்டது. இதில் யாரும் பொறாமைப்பட்டு பிரயோசனம் இல்லை. ஆக, பட்ஜெட் பற்றி சொன்னால், 2½ மணி நேரம், பாவம், நாவலர் ரொம்ப சிரமப்பட்டுப் போனார். அந்த அளவுக்கு சிரமப்பட்டுத் தயார் பண்ணியிருக்கிறார்கள், புரட்சித் தலைவி அவர்களும், பைனான்ஸ் மினிஸ்டர் அவர்களும். ஆனால் அந்த இரண்டரை மணி நேரமும் இந்த பட்ஜெட்டிலே என்ன நடந்தது என்பதை ஒவ்வொருவரும் கூர்ந்து கவனித்துக் கொண் டிருந்தோம். யாராவது எழுந்தோமா, யாராவது வெளியிலே போனோமா. ஒருவரும் எழுந்திருக்கவில்லை. அதுதான் வரலாறு. பைனான்ஸ் மினிஸ்டர் எங்கள் ஊர்க்காரர். அவ ருக்குக் கிடைத்த பெருமை அதுதான். இரண்டரை மணி நேரம் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி யாரும் எழுந்து போகவில்லை. எதிர்க் கட்சியும் சரி யாரும் எழுந்து போகவில்லை. அந்த அளவுக்கு ஒரு மிகப் பிரமாதமான பட்ஜெட்டை இந்த அரசு கொடுத் திருக்கிறது.

துணைத் தலைவர் முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மீன் வளத்தைப் பொறுத்த வரையில் நீங்கள் இங்கே பலகோடி ரூபாய்த் திட்டங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். எங்கள் பகுதியிலே 15 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அதிராமபட்டிணம், மற்ற பகுதிகள் எல்லாம் இருக்கின்றன. அந்த மீனவர்களுக்கு மீன் ஏற்ற முடியவில்லை. போக்குவரத்து அமைச்சரிடம் சொன்னேன். ஏற்பாடு செய்தார். இருந்தாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் மிகவேகமாகப் பாய்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் கள். நான் கட்சியின் தோழமைக் கட்சி என்பதற்காகச் சொல்லவில்லை. உண்மையைச் சொல்கிறேன். பாய்ந்து கொண் டிருக்கிறார்கள். நீங்கள் பாய்கின்ற வேகத்திற்கு அதிகாரிகள்

[திரு. ஆர். சிங்காரம்] [1991 செப்டம்பர் 6

இல்லை. நீங்கள் ஒரு முடிவை எடுத்தால், அவர்கள் ஒரு முடிவை
எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி என்றால் அவர்கள்
யார்? அதை நீங்கள் புரிந்து கொண்டு களையெடுத்து
எங்கெங்கு சாதகமான—சாதகமான என்று சொல்வதை விட,
நம்முடைய திட்டங்களைச் செயல்படுத்துகிற, நீங்கள் சொல்
கின்ற உண்மைகளை மறைக்காமல் இருக்க, நீங்கள் சொல்வதை
ஒன்றுக்குப் பத்தாக வெளியில் சொல்லாமல் இருக்க தனக்கு
நம்பகமான நல்ல அதிகாரிகளை ஆங்காங்கு ஒன்றியத்திலிருந்து
மாநிலம் வரை நியமித்துக் கொண்டு இருக்கிறீர்கள். விரைவில்
மேலும் நியமித்து போலீசாரையும் சரிவர நியமித்து ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சந்தன மரத்
திருடன் வீரப்பன் என்ன ஆனான்? தி.மு.க. ஆட்சியிலே பல்வேறு
நேரங்களில் பல்வேறு கோணங்களில் எல்லாம் இதோ, அதோ,
அதோ, இதோ என்று சொன்னார்கள். ஆளையே காணவில்லை.
இன்னும் பிடிக்கவில்லை. ஆக, அன்று அவர்களுடைய உடந்தை
யோடு நடந்தது என்று நினைக்கிறேன். ஆகவே, நீங்கள் துரித
மாக நடவடிக்கை எடுத்து அந்த வீரப்பனை உடனடியாகக்
கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் புரட்சித் தலைவி—புரட்சித்
தலைவி என்று சொன்னால், நான் அதற்கு விளக்கம் வேறு ஒரு
நாளைக்குச் சொல்கிறேன். புரட்சித் தலைவி என்று அந்த அம்
மாவை ஏன் நான் சொல்கிறேன் என்று, உங்களுக்குத் தெரியாததை
நான் சொல்கிறேன். ஒரு கோடி ரூபாய் திட்டம்—இன்று நாட்
டிலே ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய். நான் போன ஊர்
பூராவும் பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். குடும்பக் கார்டு
இல்லை, தெரு விளக்கு இல்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை—
இப்படிப் பெட்டிஷன் கொடுத்து இருக்கிறார்கள். இதற்கெல்லாம்
கொண்டுபோய் எஸ்டிமேட் போட்டுக் கொடுத்தால் 16 கோடி
ரூபாய் வேண்டும். அதிலே ஒரு கோடி ரூபாய் திட்டத்திலே
உடனடியாக 50 சதவீதம் காரியத்தை செய்வதற்கான சாத்தியக்
கூறுகள் இருக்கின்றன. அதிலே என்னுடைய ஒன்றியத்திற்கும்
கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு 3 ஆண்டுக் காலத்திலே
தன்னிறைவு பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்கு
மேலே ஜே.வி.பி. திட்டம் வருகிறது. இராஜீவ் காந்தி போட்ட
திட்டம். பஞ்சாயத்து ராஜ் மீண்டும் வந்தால் இதே 1 கோடி
ரூபாய் திட்டம் கொண்டு வந்து ஜே. வி. பி. திட்டம் கொண்டு
வந்தால் நிச்சயமாக 3 ஆண்டுக் காலத்திலே தன்னிறைவு பெற்று
விட முடியும். ஆக இதிலே அதிகாரிகளை வேலை வாங்க வேண்
டும். அந்த அளவிற்கு சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்
டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டுகிறேன்.
அதே நேரத்திலே, இந்த மீன், நண்டு, இறால் போன்றவற்றை
ஏற்றிச் செல்வதற்கு பஸ்ஸிலே ஏற்ற மறுக்கிறார்கள். ஒரு
நேரத்தில் மாணவர்கள் போராட்டம் செய்கிறார்கள். மறுக்
கிறார்கள். ஒரு நேரத்தில் டிரைவர், கண்டக்டர் அவர் இப்
படி நடந்து கொள்ளவில்லை. மறுக்கிறார்கள். ஒரு நேரத்தில்



1991 செப்டம்பர் 6] [திரு. ஆர். சிங்காரம்]

ஏற்றுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆக
கடலோரப் பகுதியிலே எல்லா இடங்களிலும் அதே சூழ்நிலை.
ஆகவே மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் அவர்கள் உட
னடியாக அதற்குத் தனிப் பேருந்து ஏற்பாடு செய்ய வேண்டும்
அல்லது ஒவ்வொரு பேருந்திலும் பின்னாலே ஒரு பெரிய பாக்ஸ்
போல வைத்து அதிலே அந்தக் கூடைகளை வைத்து, முன்னாலே
பிரயாணிகள் ஏறிக்கொள்ளலாம். அப்படிப்பட்ட ஒரு ஏற்
பாட்டைச் செய்ய வேண்டும். இதை நான் ஆறாவது முறையாக
சட்டமன்றத்திலே பேசுகிறேன். இப்பொழுது உங்கள் ஆட்சி
யிலே அல்ல. அந்த ஆட்சியிலே 5 முறை பேசி விட்டேன்.
கவர்னர் உரையிலே பேசிவிட்டேன். இப்பொழுதும் பேசு
கிறேன். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குடிநீரைப்
பொறுத்தவரையில் ஊர்களில் போர் வைத்திருக்கிறார்கள்.
ஓவர் ஹெட் டேங்க் வைத்திருக்கிறார்கள். இருக்கின்ற ஓவர்
ஹெட் டாங்க் இயங்கவில்லை. இருக்கின்ற போர் இயங்க
வில்லை. போன ஆட்சியிலே ரிப்பேர் ஆகிவிட்டது. இந்த
ஆட்சியிலாவது விரைந்து காரியம் செய்வதற்கு நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று நான் உங்களை வேண்டி விரும்பிக்
கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

கல்வியைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவி அவர்கள்
ஒரு நல்ல திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். குழந்தைக்கு
100 ரூபாய் என்ற அடிப்படையில் வேலையில்லாத பட்டதாரி
கள் பயன்படுவதற்குரிய வகையில் திட்டம் கொடுத்திருக்கிறார்
கள். அதிலே சிறு குழந்தைகளுக்காகவும் நல்லதொரு திட்
டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். சிறு குழந்தைகளைப்
பொறுத்தவரையில் அவர்கள் 3ஆவது, 4ஆவது வகுப்புகளுக்குச்
சென்றால் நாமெல்லாம் அவர்களின் புத்தகங்களைக்கூட தூக்கிக்
கொண்டுதான் போக வேண்டும். அந்த அளவிற்குப் புத்தகங்
கள் இருக்கின்றன. ஒரு மூன்று பேர் படிக்க வேண்டிய புத்த
கங்களை அவர்கள் ஒரு நாளைக்குத் தூக்கிக்கொண்டு போகி
றார்கள். அவ்வளவு பெரிய சிலபஸ். உள்ளே படித்துப் பார்த்
தால் 7ஆவது வகுப்புக் குழந்தைகளுக்கு இருக்க வேண்டிய பாடம்
3ஆவது வகுப்பு, 4ஆவது வகுப்பு பிள்ளைகளுக்கும் இருக்கிறது.
அதையெல்லாம் கல்வி அமைச்சர் அவர்கள் படிப்பார்கள் என்று
நினைக்கிறேன். அவற்றைப் படித்துப் பார்த்து அவர்கள் சீர்
திருத்தம் செய்ய வேண்டும். இப்படி நிறைய சிலபஸ் கொடுத்
திருக்கிறார்கள். ரொம்ப "டஃப்" ஆக இருக்கிறது. அதை
லைட் ஆக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

புரட்சித் தலைவர் இருந்த காலத்தில் ஹையர் செகண்டரி
ஸ்கூலில் டீச்சர்ஸ் ட்ரெயினிங் வைத்திருந்தார்கள். அதை ஒரு
பாடமாக வைத்திருந்தார்கள். அதை மீண்டும் கொண்டுவர
வேண்டும் என்று நாங்கள் கேட்டோம். மீண்டும் கொண்டு
வந்தால் ரொம்ப சௌகரியமாக இருக்கும். எனவே, மாண்பு

மிகு புரட்சித் தலைவி அவர்களும், நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், மூன்று பேர்களும் கலந்து பேசி தயவு செய்து மீண்டும் கொண்டு வந்தால் புரட்சித் தலைவருக்கும் பெருமை; நமக்கும் 10 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் என்று கொடுத்து சீட் வாங்க வேண்டிய நிலைமை இல்லாமல் இருக்கும். ஏழைப் பிள்ளைகள் எல்லோரும் படிக்க வசதியாக இருக்கும். அதுபோல் வேலைவாய்ப்புக்கும் சௌகரியமாக இருக்கும். வாத்தியார் வேலைக்குத்தான் டிமான்ட் அதிகம். இன்றைக்கு அவர்கள் 3,000 ரூபாய் சம்பளம் வாங்குகிற சூழ்நிலை இருக்கிறது. மைக் சரியாக இல்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மைக் மீது குறைபாடு இல்லை. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது என்பதைத் தான் அது அறிவிக்கிறது, திரு. சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தின்படி 1.10-க்கு நீங்கள் முடிக்க வேண்டும். இப்போது 1.11-லே போய்க்கொண்டிருக்கிறீர்கள். திரு. சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியிலே நீண்ட பல வருடங்களாக ஒரு பெண்கள் கலைக் கல்லூரி துவங்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். பல வருடங்களாக முயற்சி எடுத்து அதற்கான நிதி எல்லாம் வசூல் செய்து கமிட்டி எல்லாம் போட்டு வைத்திருக்கிறோம். பேராவூரணி பற்றி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்; மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்; புரட்சித் தலைவி அவர்களுக்கும் தெரியும்; நிதியமைச்சருக்கும் தெரியும். பட்டுக்கோட்டைக்கு அடுத்துதான் பேராவூரணி. பட்டுக்கோட்டையும் இப்போது வளர்ந்து வருகிற ஒரு ஊர். அங்கேயும் கல்லூரி அமைக்கலாம். அங்கே ஆண்கள் கல்லூரி அமைத்தால் பேராவூரணியில் பெண்கள் கல்லூரி அமைக்கலாம். மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ., இருக்கிறார். அவரும் கேட்டிருக்கிறார். ஆகவே பேராவூரணி என்பது மிகக் கடைக்கோடி. அந்த ஊரிலே இருந்து ஆண்டுக்கு 300 பிள்ளைகள் வெளியே அட்மிஷன் ஆகிறார்கள். அந்த அளவுக்கு அதிகமான பிள்ளைகள் அங்கே இருக்கிறார்கள். அது ரொம்ப ஏழ்மையான தொகுதி. சிங்காரம்-ஏழைத் தொண்டன் தொகுதி. ரொம்பவும் தாழ்த்தப்பட்ட தொகுதி என்று கூடச் சொல்லலாம். அந்தத் தொகுதிக்கு ஒரு கல்லூரி துவக்க நீங்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம். அதற்கான நிலம் மற்ற ஏற்பாடுகளை எல்லாம் நாங்கள் செய்து கொடுக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.





இங்கே நான் அன்று அமைச்சரைப் பார்த்தேன். கிராஃப்ட் டீச்சர்ஸ்-க்காக புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஒரு ஜி.ஓ. போடப்பட்டது. அவர்களை வருஷா வருஷம் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படி உத்தரவு போட்டு அந்த வருடமே சிலபேரை வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள். ஆனால், அதன் பிறகு நடந்த ஆட்சியில் புரட்சித் தலைவர் உத்தரவு என்ற காரணத்தால் அதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். எடுக்க முடியவில்லை. சுமார் 600 பேர்தான் இருக்கிறார்கள். அன்றைக்குக்கூட லேடீஸ் எல்லாம் வந்து பார்த்தார்கள். தொடர்ந்து நிரந்தரம் செய்து உத்தியோகம் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே காப்புறுதித் திட்டம். நல்லதொரு அருமையான வேலையைச் செய்திருக்கிறீர்கள். 10 ரூபாய் பணம் கட்டி புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் எல்லா அக்ரிகல்சுரல் லேபரர்ஸ்-ம் சேமித்து வைத்தார்கள். அவர்கள் இறந்து போனால் 5,000 ரூபாய் தரப்படும் என்ற உத்தரவு போட்டிருந்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஆனால், அதன் பிறகு வந்த ஆட்சி அந்தத் திட்டத்தை சின்னா பின்னப்படுத்தி ஒன்றுமே இல்லாமல் செய்து விட்டது. அவர்களே ஒரு உத்தரவு போடுகிற மாதிரி போட்டு இறந்து போனால் 3,000 ரூபாய் என்று சொல்லி பிறகு அதையும் இல்லாமல் செய்து விட்டார்கள். அதன் பிறகு அந்தப் பணத்தை உடனடியாக ''ரீஃபண்ட்'' பண்ண வேண்டும் என்று கேட்டோம். ஆனால், 10 ரூபாய் கட்டியதற்கு ஆறே முக்கால் ரூபாய் தான் ''ரீஃபண்ட்'' கொடுத்தார்கள். அது ஏன்? எங்கள் பணம் உங்களிடம் இருக்கிறது. அதற்கு வட்டிதான் கொடுக்க வேண்டும். அப்படி வட்டியும் கொடுக்காமல் அதைக் குறைத்து ஆறே முக்கால் ரூபாய் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் சில பேருக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். பல பேருக்குக் கொடுக்கவில்லை. அதையும் ஒழுங்குபடுத்தி இந்தத் திட்டத்திற்கு 5,000 ரூபாய் என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி. சாதாரண பாமர மக்களை, நடுத்தர மக்களை, ஆதி திராவிட மக்களை, தாய்க்குலத்தைக் கவருகிற இந்த பட்ஜெட்டை நான் இதயப்பூர்வமாக, மனப்பூர்வமாகப் பாராட்டி நிதியமைச்சர் அவர்களையும், புரட்சித் தலைவி தானைத் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களையும் மனதாரப் பாராட்டி விடைபெறுகிறேன்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. ஆ. கு. சீனிவாசன்.

*திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என் நன்றியை முதற்கண் சமர்ப்பிக்கிறேன்.

[திரு. ஆ. கு. சீனிவாசன்] [1991 செப்டம்பர் 6

இந்தப் பேரவையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்த தமிழகத் தாய்மார்களின் தலைமகளாகிய புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய சார்பிலும் பெரணமல்லூர் தொகுதி கிராமப்புற மக்கள் சார்பிலும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் என் தொகுதியிலே கிராமத்தில், கிராம மக்களிடம் சென்று வோட்டுக்களை சேகரிக்கும் சமயத்தில் கிராம மக்கள், ஏழை எளிய மக்கள் கேட்டுக் கொண்ட வாக்குறுதிகள் என்னவென்று சொன்னால், நாங்கள் கிராமங்களில் வாழ்கிறோம். வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறோம்; தண்ணீர் வசதி பற்றாக்குறையில் இருக்கிறோம்; கடன் பெற முடியாமலும், வாழ்வதற்கு வழியில்லாமலும் இருக்கிறோம். படிப்பதற்குப் பள்ளி வசதி இல்லாமலும் இருக்கிறோம். ரோடு வசதி இல்லை. எங்கள் கிராமங்களிலே பஸ் என்பதே தெரியாமல் நாங்கள் வாழ்கிறோம் என்ற குறைகளைக் கூறினார்கள். அதை நிவர்த்தி செய்யும் அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள், இந்த பட்ஜெட்டில் எல்லாம் மக்கள் நலன் கருதி நிவர்த்தி செய்திருக்கிறார்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து என்னுடைய பெரணமல்லூர் தொகுதியில், பெரணமல்லூர் தலைநகரமாக இருக்கிறது. அங்கு இருந்து, அந்த டவுனிலிருந்து மருத்துவ வசதிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், செய்யாறு, ஆரணி, போளூர், வந்தவாசி என்று 20 கிலோ மீட்டர் சுற்றளவில் செல்ல வேண்டியுள்ளது. மருத்துவ வசதி இல்லாமலே மக்கள் வாழ்ந்து கொண்டு, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், அந்தப் பகுதிக்கு அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்று அவசியம் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அதே சமயத்தில் சேத்பட்டு நகரம், பெரணமல்லூர் நகரம் இந்த இரண்டு இடத்திற்கும் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அது நாளுக்கு நாள் இடிந்து கொண்டும், விழுந்து கொண்டும் இருக்கிறது. மாணவர்கள் மரத்தடியில் படித்துக் கொண்டு இருக்கின்றார்கள். அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் படித்த மாணவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதால் குலத் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் காடுகள் நிறைந்திருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் கிழக்குப் பகுதியில் அதிகமான இடங்கள் இருக்கின்ற காரணத்தினாலே தொழில்பேட்டைகள் நிர்மாணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொழிற்பேட்டை பகுதியாகவும் மிகமிக பின்தங்கிய பகுதியாகவும் அங்கீகாரம் செய்யக் கோருகிறேன். அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். பாலிடெக்னிக்குகள், ஐ.டி.ஐ., தொழிற்பேட்டைகள் துவக்கக் கோருகிறேன். இதனால் வேலைவாய்ப்புகள் இன்மையை நிவர்த்தி செய்ய முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஏன்



1991 செப்டம்பர் 6] [திரு. ஆ. கு. சீனிவாசன்]

இதைக் கேட்கிறேன் என்று சொன்னால், வேலைவாய்ப்புக்காக நகரங்களுக்குச் செல்லும்போது அங்கு அங்கேயுள்ளவர்களுக்கே பற்றாக்குறை இருப்பதால் வேலை இல்லை என்று திரும்பி வந்துவிடுகிறார்கள். ஆகவே, இதையும் மேலும் நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

நிதி நிலைமை பற்றிய நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும் சமயத்தில் கிராமத்தில் உள்ள மக்கள், அடித்தளத்தில் உள்ள மக்கள் வாழ்க்கைக்கு அவர்களுக்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் பூர்த்தி செய்திருக்கிறார்கள்.

அதில் காவல்துறையை எடுத்துப் பார்க்கும் சமயத்தில் காவல் துறையை நவீன முறையில் சீர்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். காவல் துறையில் பொது மக்கள் நலனுக்காகத்தான் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராம மக்கள் முக்கியமாக, அவசரமாகவும் மற்றும் விசேஷமாகவும் காவல் துறையை அணுகும்போது அங்கே ஆட்களே இல்லை என்று கூறுகிறார்கள். ஏற்கெனவே ஒரு, காவல் நிலையத்தில் குறிப்பிட்ட ஒரு வேலைக்காகத்தான் எஸ்.ஐ., ஹெட் கான்ஸ்டபிள், காவலர்கள் குறிப்பிட்டு நியமிக்கப்பட்டு உள்ளார்கள். அவசர நிமித்தமாக சில தேவைகள் இருக்கும்போது காவலர்கள் இல்லை என்று கூறுவதால் அங்கு பொது மக்களுக்குத் தேவையான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகவே, காவல் நிலையத்திற்கு அவசர வேலைகளை நிர்வகித்துச் செய்வதற்கு அதிகமான காவலர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பு செய்ய வேண்டுமென்றால், அந்தக் கலவரங்கள் ஏன் ஏற்படுகின்றன என்று கேள்விகளாகக் கேட்கும் சமயத்திலே ஏற்கெனவே சொத்துரிமை, அரசியல் சம்பந்தம் போன்றவைகள், இது போன்ற சில சூழ்நிலைகள் காரணமாகத் தான் சட்டம் பாதிக்கப்படுகிறது. அதற்காக முன் கூட்டியே உளவுப் பிரிவுகள் இருக்கின்றன. அதற்கு வேண்டிய வசதிகளையும், படிகளையும், போக்குவரத்து வசதியும் அதிகமான அளவில் கொடுத்து, கூடுதலான காவலர்களை நியமித்து நிர்வாகத்தை ஊக்குவிக்க வேண்டும்.

பிற்பகல் 1-20

அப்படி செய்தால்தான் சட்டம் ஒழுங்கை நல்ல முறையில் பாதுகாக்க முடியும். காவலர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும். உணவுப் பிரச்சினை, இருப்பிடப் பிரச்சினை, சம்பளப் பிரச்சினை, T.A. ஆகியவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். காவலர்கள் திடீரென்று வெளியூருக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், சிறப்புக் காவல் படையில் உள்ளவர்களுக்கு குடும்பங்கள் இல்லை. ஆனால், பல

பகுதிகளுக்கும், பல மாநிலங்களுக்கும், சில மாவட்டங்களுக்கும் திடீரென்று செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. உடனே, பணம் இல்லை என்ற கஷ்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை நிவர்த்தி செய்து அவர்களுக்கு வேண்டிய படிகளை வழங்க வேண்டும். அதே சமயத்தில் அவர்களுடைய குடும்பம் ஒரு பகுதி, அவர்கள் ஒரு பகுதி என்று இருப்பதால், அவர்கள் முழுமையாக வேலை செய்வதில் சில சிக்கல்கள் இருப்பதால் நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்களிடமிருந்து வேலையை முழுமையாகப் பெறவோ, வேலை திறனைப் பெறவோ முடியவில்லை. அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் என்னென்ன என்று கண்டு அறிந்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

அதற்கடுத்து, கல்வித் துறையைப் பொறுத்த வரையில் கிராமப் புறங்களிலிருந்து நகரங்களுக்கு சென்று மேல் கல்வி படிக்க வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. காரணம், வசதியான குடும்பத்தில் படித்தவர்கள், அந்த இடங்களைப் பூர்த்தி செய்து விடுகிறார்கள். கிராமத்திலிருந்து செல்பவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. காரணம் என்னவென்று சொன்னால் ஆங்காங்கே தனியார் துறையிலே இன்ஸ்டிட்யூசன் ஏற்படுத்தி ஒரு வியாபாரத் தன்மையில் கல்வி நிலையங்களை ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை அங்கீகாரம் அளிக்காமல், ஆசிரியர் பயிற்சிகள் மற்றும் கல்வி நிறுவனங்களை எல்லாம் கண்காணித்து அங்குள்ள குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மையைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் கஷ்டப்பட்டு விவசாயம் செய்கிறார்கள். ஆனால், விற்பனைக்கு செல்லும்போது அவர்கள் என்னென்ன செலவு செய்தார்கள் என்கிற கணக்கை எடுத்துப் பார்க்கிற போது அவர்களுக்கு நஷ்டமாகத்தான் இருக்கிறது. உரங்கள் விலை ஏறிவிட்டன என்று கூறுகிறார்கள். மத்திய அரசின் பட்ஜெட்டிலே அதைப் பற்றி அறிவித்தார்கள். அவர்கள் அங்கே உரத்தின் விலையை ஏற்றி விட்டார்கள். அது குறித்தும் மான்யக் குறைப்பு செய்து கண்காணிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

டீசலில் ஒரு லிட்டருக்கு 10 பைசா என்று ஏற்றப்பட்டுள்ளது. அதே சமயத்தில் பஸ் முதலாளிகள் டிக்கட்டின் விலையை ஏற்றி விட்டார்கள். அது பொதுமக்களுக்குப் பெருத்த இடைஞ்சலை ஏற்படுத்தும். ஆகவே, அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இதே சமயத்தில் புரட்சித் தலைவி ஆட்சியில் ஏழையெளிய மக்களின், அடித்தளத்தில் வாழும் மக்களின் நல்வாழ்வுக்காக என்னென்ன வசதிகளைச் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் இந்த பட்ஜெட்டிலே நிவர்த்தி செய்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு எனக்குச் சட்டமன்றத்தில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மிக்க நன்றி.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை உறுப்பினர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற உள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு. இன்று மாலை 5 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள 10 மாடிக் கட்டிடத்தின் குழுக் கூட்ட மண்டபத்தில் உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற இருக்கிறது. அதைத் தொடர்ந்து நாளை 7-9-1991 மற்றும் தொடர்ந்து திங்கள், செவ்வாய் ஆகிய தேதிகளிலும் மாலை 5 மணி முதல் அந்தப் பயிற்சிக் கருத்தரங்கு தொடர்ந்து நடைபெற இருக்கிறது. இன்று தொடங்க இருக்கும் பயிற்சிக் கருத்தரங்கை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தொடங்கி வைக்க இருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஏனைய துறையின் அதிகாரிகளும் அதில் கலந்துகொள்வார்கள். பயிற்சிக் கருத்தரங்கு பற்றிய குழு விவரம் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பயிற்சிக் கருத்தரங்கில் உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, திரு. வெ. தமிழரசு.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு, பேசுகின்ற வாய்ப் பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், ஆத்தூர் தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, அந்த அரசின் முதல் பட்ஜெட்டை அளித்த மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா வழி வந்த நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசியல் வாரிசான மாண்புமிகு புரட்சித்

மக்களுக்காக, நலிவடைந்த மக்களுக்காக, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்காக பல்வேறு திட்டங்களை இங்கே அறிவித் திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களின் அடிப்படைத் தேவை யான உண்ண உணவு, இருக்க இருப்பிடம், உடுக்க உடை என்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பட்ஜெட்டாக இது அமைந்திருப்பதை மனமாரப் பாராட்டுகிறேன். உதாரணமாக வேளாண்மைத் துறையிலும், ஊரக வளர்ச்சித் துறையிலும் கிராம மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர் வழங்குதல், கிராமச் சாலைகள், தெரு விளக்குகள், தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள், ஏரிகளைப் புதுப்பித்தல், சத்துணவு மையங்கள் கட்டுதல், தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல் போன்றவை களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதை மனமாரப் பாராட்டுகிறேன்.

இந்த நல்ல நேரத்தில் மிகவும் வறட்சியான எனது ஆத்தூர் தொகுதிக்கு மேட்டூர் குடிநீர்த் திட்டத்தை துரிதமாக நிறை வேற்ற பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஆத்தூர் ஒரு தாலுக்காவாக இருப்பதால் அங்கே ஒரு இன்ஜினியரிங் கல்லூரி, பாலிடெக்னிக், ஒரு மகளிர் கல்லூரி இல்லாததைத் தெரிவித்து, நம்முடைய மரியாதைக்குரிய கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் புரட்சித் தலைவி அவர் ளும், அவற்றை அங்கே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பணி வோடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி தொழிலில் பிற்பட்ட தொகுதி என்ப தால், அங்கே கிரானைட் தொழிற்சாலை அமைப்பதற்கான மூலப் பொருட்கள் அதிகமாக உள்ளதால், அந்தத் தொழிற் சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் வசிஷ்டா நதி குறுக்கே நீண்ட காலமாக நிறைவேறாமல் உள்ள இராமநாயக்கன்பாளையம், முல்லைவாடி, கோரையாற்றின் குறுக்கேயும், கல்பனூர் ஆகிய இடங்களில் தரைப் பாலங்கள் — காஸ்-வே பிரிட்ஜ் அமைக்க வேண்டுகிறேன்.

முல்லைவாடியில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், மஞ்சினியில் ஒரு மேல்நிலைப் பள்ளியும் ஏற்படுத்த வேண்டுமென்று பணி வோடு வேண்டுகிறேன். கோபாலபுரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்திட அனுமதி வழங்கிய முதல்வர் அவர்களுக் கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



38 கிராமங்கள் அடங்கிய பெரிய கல்ராயன் மலைவாழ் மக்கள் வணங்கிவரும் புனிதத் தலமான கரியராமர் கோவிலைப் புதுப்பிக்க அனுமதி வழங்கியதற்காகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள மோசமான நிலையை உணர்ந்து, தற்போது ஆத்தூர் நகராட்சிக்கு குடிநீர் லாரியில் வழங்க 9 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கியதற்கும் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

நீண்ட நாள் கோரிக்கையான ஆத்தூர் தொகுதியில், ஆத்தூர் தாலுக்காவாக இருப்பதால், அங்கே ஒரு சப்-கோர்ட் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் குச்சிவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாய மக்களுக்காக, அவர்கள் நலன் கருதி இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, நம்மு டைய மாண்புமிகு அண்ணன் கே.ஏ.கே. அவர்களும், மாண்புமிகு இராஜாராம் அவர்களும் முயற்சி எடுத்ததன் காரணமாக 'சேகோசர்வ்' அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வந்தது. கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக ஆட்சியில் இருந்த வர்களின் அக்கறையின்மையின் காரணமாக தற்போது "சேகோ சர்வ்" கடுமையான நிதி நெருக்கடிக்கு உள்ளாகி, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டு, நிதிநிலை அறிக்கை யைப் பாராட்டி, பேச அளித்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்
ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய நூல்கள்

1. 1991–92 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 62 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (62 புத்தகங்கள்).

2. 1991–92-ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

3. 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக்கடன்—திருப்பிச் செலுத்துதல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

4. 1991–92 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

5. 1991–92 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 39—சாலைகள், பாலங்கள் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

6. 1991–92 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 56—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

7. 1991–92 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 57—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

8. 1991–92 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

9. பதவிகள், சம்பள விதங்கள் பற்றிய விவர அறிக்கை (1991–92) (ஆங்கிலம்).

10. 1991–92 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.

11. 1991–92 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பு.



12. 1991–92 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

13. 1991–92 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-2 திட்டங்கள்).

14. 1991–92 ஆம் ஆண்டு திட்டம் (திட்டம்—வரவு-செலவுத் திட்ட இணைப்பு 1991–92 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு).

15. 1991–92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

16. 1991–92 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

17. 1991–92 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

18. 1991–92 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்து நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

சென்னை-600 009
161488
D
V2:11, 31 N91
N91.4.2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madr
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinnevel Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egm Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirap-palli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |